இஃது உரைத்து யாப்பா.

மதுரை வீரசங்கம்.

T.D.R.C 3258
RRno 45-1-80

DIGITIZED

0,892MKU2,M
M70
16355

உ

கணபதிதுணை.

# மதுரைவீரநாடகம்.

திரிசிரபுரத்தைச்சார்ந்த

திருத்தான்தோணியிலிருக்கும்

குட்டி உபாத்தியாயரவர்கள்

இயற்றியது.

இஃது,

வீரணன்தோட்டம்

மதுரைமுதலியாரால்

பரிசோதித்து

ஷை உபாத்தியாயரவர்கள் உத்தரவின்படி

அ. வீராசாமிநாயுடு அவர்களால்

தமது

சற்குணநிதியச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

COPY, RIGHT RESERVED.

முதற்பதிப்பு-காப்பி-கூ00.

கூஅளய ஞல-செப்டம்பர்மீ.

116355

## விளம்பரம்.

இச்னூல் சகலருக்குந் தெரிவிப்பது யாதெனில், சென்னபட்டணம் பீங்கான்கடைக்கடுத்த பாபன் ஸ்ரேட்டில்-௭அச-வது-கதவிலக்கமுள்ள புத்தகஷாப்பில் பலவித தமிழ்தெலுங்கு புத்தகங்களும், அகஸ்தியர்முதலிய பெரியோர்கள் திருவாய்மலர்ந்தருளி [illegible]வைத்தியசாஸ்திரங்களும், ஆழ்வாராதிகள் அரு[illegible]ய்த திவ்வியப்பிரபந்தங்களும், கம்பராமாய[illegible]சனமும், சில சோதிடசாஸ்திரங்களும், மகம்மதியர்களுக்குரிய நூல்களும், வேண்டியவர்கள் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

இப்போது நூதனமாய் அச்சிட்டிருக்கும்

புத்தகங்கள்.

| | |
|---|---|
| மதுரைவீரநாடகம் | |
| போகர்நிகண்டு | ரூ |
| போகர்காவியம் | ௧ |
| திருமூலர்வயித்தியம் | ௧ |

இங்ஙனம்,

அ - வீராசாமிநாயுடு.

உ

கணபதிதுணை.

# மதுரைவீரநாடகம்.

காப்பு.

## விநாயகர்துதி.

பின்முடுகு வெண்பா.

சீர்மேவுந்தென்மதுரை வீரன்முத்துவீரையன்சீர்
பார்மேவுநாடகமாய்ப்பாடவுரை-யூர்மேவும்
விமலப்பா னுமைபெற்றிடு விகடக்கரிமுகனேதிரு
கமலப்பத மிகவைத்துதி கார்.

இதுவுமது-விருத்தம்.

சீரானகாசிநகர்க்கதிபதியாந் துளசேந்திரன்சேயுமான
வீராதிவீரையன்சீர் நாடகமாய்த் தமிழதினால்விரும்பிக்கூற [ற்றுக்
மேரானவரையிலொற்றைமருப்பொடித்துபாரதப்போர்வினைந்துசா
காராணைமாமுகத்துக் கற்பகமுன்னிக்கதைக்குக்காப்பதாமே.

விஸ்வநாதர்துதி.

காசினிதன்னிலார்க்குங் கண்கண்டதெய்வமாகி
வாசனைபுனுகுபன்னீர் வகையுள்ளதெல்லாம்பூணும்
மாசிலாமதுரைவீரன் மகிமைநாடகமாய்க்கூற
கோசிகமுனிபூசித்த குருபரனருள்காப்பாமே.

சரஸ்வதியம்மன்துதி.

சீர்பெறுங்காசிமேவுந் தென்னவனருளால்வந்து
பார்தனிலெவர்க்கும்நல்ல பாக்கியமருளிச்செய்து
பேர்பெறுமதுரைவீரன் பெருமைநாடகமாய்க்கூற
சீர்தரும்வாணியாள்தன் சேவடிகாப்பதாமே.

அவையடக்கம்.

முன்னுள்ளபெரியோர்சொன்ன முறைமைநாடகத்தைப்பார்த்து
இன்னமுஞ்சிறிதுகூட்டி யியம்பிடவேணுமென்று
நன்னயத்தமிழ்பாராட்டி நாடகமாகச்சேர்த்துச்
சொன்னதையிகழ்ந்திடாமல் சுபவல்லோர்பொறுப்பதாமே.

இதுவுமது.

சூரியகுலத்துதித்த அளசேந்திரன்றவத்தால்வந்த
வீரையன்சரித்திரத்தை மேதினியோர்கொண்டாட
சீரியதமிழினாலே சிறந்தநாடகமாய்க்கூற
பாரினிற்கவிவல்லோர்கள் பாதமும்பணிந்திட்டேனே.

இதுவுமது.

கெருடன்முன்னூர்சகமீடாய்க் கிட்டியேபறந்தாற்போலும்
திருமயில்முன்வான்கோழி செயநடம்புரிந்தாற்போலும்
அருமறைதெரிந்தோர்முன்னே அடியனுனுரைத்தேனித்தை
பரிவுடனினிதாய்க்கொண்டு பாவலர்பொறுப்பதாமே.

இதுவுமது-தாழிசை.

சீர்மிகுந்துவளர்காசியாளும்சக ராஜராஜதுளசேந்திரன்
செய்தவத்திலேவருமெய்த்தவத்தனென தேசதேசமதிலெங்கினும்
பேர்விளங்குமதுராபுரித்துரையின் பெருமைநாடகமதாகவே
பேசவென்றுமீனாக்ஷிசுந்தரகுரு பிரபலன்கழல்வணங்கியே
ஏர்விளம்பியெனும்வருடமப்பசியி னேழுதேதிகுருவாரநாள்
இன்பமானஅசுபதியிலக்கணமு மிடபமாஞ்சுபதினத்திலே
பார்தனிற்கவிஞரடிபணிந்துவளர் பாலனுகுங்குட்டிபாடினுன்
பகர்மொழிக்குளெதுபிசகிருக்கினுமுன் பழமொழிக்குருபொறுப்பதே

இதுவுமது-விருத்தம்.

தேசமன்னவர்கள்போற்றுந் தென்னவனென்னுங்காசி
ராசனற்றவத்தால்வந்த நவமணிமதுரைவீர
போசனைப்புகழ்ந்துபாடும் புனிதன்மீனாட்சிசுந்தர
தாசனுங்குலாலன்குட்டி தமிழினாதுரைசெய்தானே.



தோடயம்.

தனன-தனனன-தனன-தனனன-தனன-தனனன-தானனு.

எங்கும்புகழ்பெறுந் துங்கன்பொம்மணன்
ஈன்றநாயகி யாளெனும்
மங்கைபொம்மியை மருவும்வீரையன்
மகிமைநாடகம்பாடவே — ஆ - ஆ
கங்கைச்சடையுடன் கனலுமேந்திய
கயிலைக்கடவுள ரருளிய
துங்கமதகரி முகமதிலங்கிய
தொந்திக்கணபதி காப்பதாம் — ஜெய - ஜெய

மந்திரம்பில்லி யேவல்சூனியம்
வல்லடிப்பிணிகள் முதலதாய்
வந்திடாதருள் மதுரைவீரையன்
மகிமைநாடகம்பாடவே — ஆ - ஆ
தொந்திவயிற்றுட னைந்துகரங்களுந்
துலங்குமுப்புரி நூலிலங்கவே
முந்தியுதித்திடுந் தந்திமுகஜெய
மூலக்கணபதி காப்பதாம் — ஜெய - ஜெய

தொட்டியன்படை பட்டுவிழும்படி
வெட்டிவிருதுபெற் றிலங்கிடும்
மட்டிலடங்கா மதுரைவீரையன்
மகிமைநாடகம் பாடவே — ஆ - ஆ
முட்டிப்பொருதிடுஞ் சூரர்குலங்கெட
முடுகிச்சமர்செய்யும்வேலனும்
செட்டிக்குமரனைப் பணிந்துயெனதுட்
சிந்தைதனில்தொழுதேத்துவாம் — ஜெய-ஜெய

மாதவம்புரி மன்னன்பயின்றிட
மாதியன்சுதனுமென
காதலுடன்வளர்த்தெடுத்தவீரையன்
கதையைநாடகம்பாடவே — ஆ - ஆ

ஓதமிகுத்திடு வேதமிகத்தரு
மூலமில்தமிழ்வரநாயகி
வேதன்மருவிய வாணிபொற்பத
மிகவும்பணிந்தெழுந் தேற்றுவாம் ஜெய - ஜெய

## மங்களம்.

தரு-இராகம்-அசாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

மங்கள மங்கள மங்களம்-நித்தியசெய்சுப- மங்கள மங்கள மங்களம்

அநுபல்லவி.

மங்களம் இபமுகற்கும் மாமதுரைச்சொக்கருக்கும்
அங்கயற்கண்ணம்மனுக்கும் ஆறுமுகவேலவர்க்கும்
மங்களம்.

சரணங்கள்.

செங்கமலவாசனுக்கும் சித்தசவுல்லாசனுக்கும்
மங்கைபொம்மிவெள்ளையர்க்கும் மதுரைவீரையனுக்கும்
மங்களம்
ஆதியினிற்காசிநக ராண்டராசமன்னனுக்கும்
௫ - மூவியனிடம்வளர்ந்த மாசிலாமணியனுக்கும்
மங்களம்
சந்ததமீனாட்சிசுந்தர தாசனுக்குங்காசினிக்கும்
விந்தைநாடகமிதனை மெய்யன்பாய்ப்படித்தபேர்க்கும்
மங்களம்.



சரித்திரச்சுருக்க அகவல்.

சீர்பெறுங்காசித் திருநகராளும்
ராசனுந்தனக்கு நற்சுதனில்லா
தென்னியேகவலை யிருதயங்கொண்டு
மன்னவன்கொலுவில் வந்துமேயிருந்து
மந்திரிமாரே மகுடவர்த்தனரே
எந்தனற்பதியை யெனக்குப்பின்னாள
மைந்தனில்லாததை வாகுடனாளையெனச்
சுந்தரராசன் துயரமாய்க்கேட்க
அந்தணர்பெரியோ ரமைச்சர்களுரைப்பார்
கந்தனைப்பயின்ற கருணைகடாட்ச
காசிவிஸ்வேச கர்த்தருக்கன்பாய்ப்
பூசையுந்தபமும் புரிந்திடு [illegible]சே
வேகமாய்வெள்ளி விடைசெய்துவைத்து
தாகமாயன்ன தானங்கள்செய்தால்
அன்றுதான்கர்த்த ரருளதுபுரிவார்
என்றுமந்திரிக ளியம்பிடவரசன்
நன்றெனமகிழ்ந்து நான்மறையோர்க்கும்
மன்றினிலேழை மானிடர்தமக்கும்
அன்னதானங்கள் அனந்தம்பேர்க்கீய்ந்து
மன்னவனீசன் மலரடிபோற்றி
வேண்டித்தவஞ்செயும் வேந்தன்முன்வந்து
ஆண்டியாமீச னருளதுகொடுத்தார்
மைந்தனுண்டாக வரமதுவாங்கி
சந்தோஷமாகத் தன்மனைவந்தான்
வந்தபின்ராசன் மனைவியாள்கெர்ப்பம்
சந்ததியுண்டாய் தானவளிருந்தாள்
அன்பெனும்விழியாள் அமுதெனுமொழியாள்
செண்பகவல்லி திங்கள்பத்[illegible]கி
பாலகன்றன்னைப் பயின்றனள்பாரில்
ஆலமுதுண்ட அண்ணலார்கிருபையால்
மைந்தன்கழுத்தில் மாலையுங்கொடியும்

விந்தையாய்த்தரித்து வீரனும்பிறந்தான்
சேடியெடுத்துச் சிறுவனைப்பார்த்து
ஓடியேராஜர்க் குரைத்திடக்கேட்டு
காசிராஜேந்திரன் களித்துளமகிழ்ந்து
சோசியர்தன்னைத் துரிதமாயழைத்து
தேசத்தையாளச் செல்வனும்பிறந்தான்
பூசிலாவேத மாமறையோரே
மைந்தன்பிறந்த வாரம்லக்கணமும்
சுந்தரமாகச் சாதகஞ்செய்யும்
என்றுமன்னவனு மியம்பிடக்கேட்டு
நன்றெனமகிழ்ந்து நான்மறையோர்கள்
பாலகன்பிறந்த பலனதைப்பார்த்து
மாலையுங்கொடியும் மைந்தன்றன்கழுத்தில்
பட்டுதயினியுன் பட்டமுமரசும்
கெட்டுதுவேந்தே கிளையுடனின்னம்
தந்தைதாயார்க்குந் தன்சுற்றத்தோர்க்குந்
மைந்தனிருந்தால் வருந்தீதெனயென்றார்
சொல்வதைக்கேட்டுத் அர்ந்தசராசன்
நல்மதிகெட்டு நமக்கிவனேனென்று
மெத்தவேசலித்து வேந்தனுங்கலங்கி
சுத்தவேதியரே யென் கண்மணிதன்னை
என்னதான்செய்வது என்றுமோராசன்
சொன்னதைக்கேட்டு சோசியருரைப்பார்
மங்களத்துடனே மன்னவாகேளும்
தங்கத்தாம்பாளந் தன்னிலேசுதனை
வைத்துமேகொடுபோய் வனந்தனிலமர்த்தி
வித்தகாவந்தால் வினையில்லையென்றார்
சோசியர்சொல்லைத் துயரமாய்க்கேட்டு
மேதினிதன்னில் வேந்தனுந்தேவியும்
ஐயகோவென்று அலறியேபுலம்பி
தையல்மார்சூழத் தனயனையெடுத்து
காலத்தில்வைத்து கானகந்தனிலே



விமலனூர்செயமிலை வேந்தனும்வைத்து
வாவெனச்சொல்லி மன்னனுமிருந்தான்
கோவெனப்புலம்பி கோதையுமயர்ந்தாள்
வெத்திசெய்காசி வேந்தன்சொற்படியே
அத்திசூழ்காட்டுக் கவர்களும்நடந்து
மைந்தனைவனத்தில் வைத்துத்திரும்ப
ஐந்தலைநாகம் ஆதரவாகவந்து
வெயிலதுமறைத்து விடஅரவிருக்கையில்
மாதியச்சின்னான் மனைவிசக்கிலிச்சி
சோதினையாகத் துய்யகானகத்தில்
கண்டுமேயெடுத்துக் கடுகியமனையில்
கொண்டுபோய்வைத்துக் கோதையும்வளர்த்தாள்
அமுதெனவளர்ந்து ஐந்தாம்வயதில்
தமிழதுபடித்துச் சாரியாய்வனத்தில்
வேட்டைகளாடி வீரையனென்று
நாட்டமாகச் சமர்த்தனுயிருந்தான்
அப்பவேபொம்மி யவள்ருதுவாகி
செப்பமாய்க்குடிசையிற் சேர்ந்திருந்திடுநாள்
கற்பனையாகக் காவல்சின்னானை
மெய்ப்புடன்வைத்தான் வேந்தன்பொம்மணனும்
இப்படிக்காவ லிருப்பதெட்டுநாள்
செப்பமாய்க்காத்துச் சின்னானும்வருகையில்
விந்தையாயொருநாள் வெருமழையிருட்டாய்
அந்தரத்திடியு மனேகமாயிடித்து
மின்னியேவானம் மேகமும்பெய்ய
எண்ணியேசின்னா னெழுந்துபோய்மனை
கன்னிகைபொம்மி காவலுக்கனுப்ப
மன்னன்வீரையனு மனமதுமகிழ்ந்து
தீவரமாகத் தீரனுஞ்சென்று
ஆவலாய்ப்பொம்மியை யணைந்துறவாடி
முப்பதுநாளு முடிந்ததுவென்று
செப்பவேபொம்மி தீரனுங்கேட்டு

நட்புடனுன்னை தானுமேகொண்டு
ஒப்புடன்செல்வே னென்றொடியேயெனச்
சொல்லியேவீரன் துரிதமாய்நடந்தான்
வல்லியுங்குடிசையில் மகிழ்ந்திருந்திடுநாள்
அப்பவேபொம்மண னெனதொட்டியனும்
செப்பிளமுலைமின் தேன்மொழிதன்னை
வீட்டினிற்கூட்டி விளங்குசாங்கியங்கள்
கூட்டியேவேத ஜோசியர்கூடி
பண்ணியேமுடித்துப் பரிசனங்களும்போய்
அன்னமும்புசித்து அவரவர்சென்றபின்
கற்பனையாகக் காளைவீரையனும்
சற்பனைசெய்யத் தானுமேநினைந்து
கன்னிவீற்றிருக்குங் கட்டறண்மனையில்
உன்னியேபுகுந்து உகந்துவீரையனும்
பொம்மியையெழுப்பிப் புரவிமேல்வைத்து
வண்மைசேர்கத்தியும் வாகுடனெடுத்து
தானும்பரியின்மேல் தாண்டிவீரையனும்
நாணயமாக நடத்தியேபரியை
தொட்டியமுசுரி சுருக்குடன்கடந்து
அட்டியில்லாமல் ஆழுருஆற்றில்
வந்துகூடாரம் வாகுடனடித்து
சிந்தையுமகிழ்ந்து சிரித்தணைந்திருந்தான்
அப்போதுபொம்மணன் அலறியேயெழுந்து
செப்பமாய்மகளைத் தேடியேபார்த்து
காணமென்றேங்கிக் கலங்கிநாயக்கன்
சேனையைக்கூட்டித் திடமுடன்றேடி
வருகவேகண்டு வாகுடன்பொம்மி
உருகியேபயந்து ஓலமிட்டலறி
வந்துவீரையன்மேல் மங்கையும்விழுந்தாள்
சுந்தரவீரன் சுறுக்கினிலெழுந்து
தானும்புரவிமேல் தாண்டிவீரையனும்
ஆணுவங்கொண்டு அரசன்பொம்மணனை



டடங்கலும்வெட்டி யாற்றினிற்கத்தியை
நடந்துமேகழுவி நாணயமாக
வருகவேகண்டு வாகுள்ளபொம்மி
சருவியேகேட்டு தயங்கியேபுலம்பி
அழுதுமேவந்து அப்பன்மேல்விழுந்தழ
தழுவியேபொம்மியைச் சாமிவீரையனும்
பொம்மணன்றன்னைப் போதவேபுதைத்து
கொம்மைவெண்முலையாள் கோதையைக்கூட்டித்
திருச்சிறுப்பள்ளி தேசத்தில்வந்து
கருத்தனைக்கண்டு காரியம்பேசி
வேந்தனிடத்தில் வீரையன்சம்பளஞ்
சாந்தமாகத் தானுமேபேசி
அன்புடன்திங்களுக் காயிரம்பொன்னு
சம்பளம்வாங்கித் தானுமங்கிருந்தான்
இப்படியாக யிருந்திடும்போது
கற்பனைமுடிவு காலம்வந்தெய்தி
சொக்கர்மீனாட்சி சுகம்பெறுநாட்டில்
இக்கினிலடங்காத் திருடர்செய்கொடுமையை
திருமலைநாயக்கர் செப்பமாய்க்கண்டு
மறுமொழியுத்தரம் வாகுடனனுப்ப
திரிசிரபுரத்தில் செங்கோல்செலுத்தும்
துரையெனும்விஜய சொக்கலிங்கேந்திரனும்
வீரனையழைத்து விடைகொடுத்தனுப்ப
தீரமுந்தளமுந் தேவிபொம்மியரும்
பயணமாய்மதுரை பட்டணஞ்சென்று
வயணமாய்நாய்க்கர்முன் வார்த்தைகள்பேசி
பாக்கிலைவாங்கி பரிபூரணமாய்
நாய்க்கருக்குறுதி நலமுடன்சொல்லி
விடுதியில்வந்து வீரையன்பொம்மி
மடிதனில்கொஞ்சி மகிழ்ந்திருக்கையிலே
மதுரையில்கள்ளர் வந்துமேகூடி

அதவடிக்கொள்ளை யடிக்கவேகண்டு
வீரையன்பரிமேல் வேகமாயேறி
சீருடன்மெத்த திருகுசெய்கள்ளரை
வெட்டியேசிரத்தை வேகமாய்நொறுக்கி
மட்டினிலடங்கா மதுரைவீரையனும்
ரணக்கொளுவிருக்க நாயக்கர்கேட்டு
மனத்துடன்வெள்ளையை வாவென்றழைத்து
ஆலாத்திசுற்றுமென் றன்புடனுரைக்க
தாலத்தாலாத்தி தையலுமெடுத்து
திஷ்டிகழித்துச் சென்றனள்வெள்ளையும்
அஷ்டனுமதுரை அரையன்றுராத்திரி
வெள்ளையம்மாளை விதமுடனெடுத்து
கள்ளனைப்போலே காளையும்வருக
காவலர்கண்டு கள்வனெனப்பிடித்து
பாவனையாகப் பாராவில்வைத்து
திருமலைநாய்க்கர்முன் சேதியையுரைக்க
மறுமொழிவேண்டாம் வண்டனைப்பிடித்து
மாறுகால்மாறுகை வாங்குவீரென்று
கூறிடும்போது கொடியசேவகரும்
வீரையனென்று விதமறியாமல்
மாறுகால்மாறுகை வாங்கினாரப்போ
அப்படியிருக்கையில் அருணோதயத்தில்
செப்பமாய்வீரனைச் சேவகர்கண்டு
என்னகாரணமோ யிவ்விதிவந்தது
மன்னவாவென்று மனமதுகலங்கி
தென்னவனான திருமலைநாய்க்கருக்
கன்னவருரைக்கக் கலங்கியேமன்னன்
தீங்கறியாமல் ஜெயவீரன்கைகால்
வாங்கினோமென்று மன்னனும்புலம்ப
பொம்மியும்வெள்ளையும் புலம்பியேநிற்க
ரம்மியத்துடனே நாய்க்கரும்நடந்து
தேவிமீனம்பாள் திருப்பதம்போற்றி



பாவியான்செய்த பழிதனைத்தீர்க்கத்
தாருமம்மாள்வரஞ் சங்கரியேயெனச்
சீருடன்வாழ்த்தித் திருநீற்கொடுத்தாள்
தளர்ந்துநாயக்கன் தரித்தான்வீரையன்மேல்
வளர்ந்ததுகைகால் வடிவமுன்போல
பொம்மியும்வெள்ளையும் போதவேயெழுந்து
தம்முடகணவன் தாள்தனிற்பணிந்தார்
பணிந்தகன்னியரைப் பார்த்துவீரையனும்
இனியிந்தகாயம்வைத் திருப்பதுநலமல
காரணமுடிவால் கடவுள்மீனாட்சி
பூரணபதத்திற் போய்நான்சேர்வேன்
என்றசொற்கேட்டு ஏந்திழைமார்கள்
நன்றெனநகைத்து நாயகியிருவரும்
தீக்குழிவளர்த்தித் திடமுடன்குதித்து
தாக்குடன்மீனாள் தாளினையடைந்தார்
வீரையனப்போ வேகமாயெழுந்து
காரிகையிருவர் கடனையுங்கழித்து
அம்பிகைமீனாள் ஆலயஞ்சென்று
நம்பினேனென்று நற்கம்பமேட்டில்
வாள்தனையூன்றி வலுவுடன்விழுந்தான்
வேள்புயன்சிரசு மீனாட்சிபாதம்
கதியெனவிழுக் கௌரிமீனம்பாள்
மதுரைவீரப்பா மைந்தனேயுனக்கு
முந்தினபூசை முதலுனக்கென்று
சந்தோஷமாகத் தான்வரங்கொடுத்தாள்
வீரமதுவாங்கி வையகமெல்லாம்
ஸ்திரமுடன்துஷ்ட தெய்வமாய்விளங்கும்
காரணமதனைக் கருதுநாடகமாய்
பாரினிற்கவிஞர் பதமலர்போற்றி
திருவுறந்தைப்பதி செழிப்புடன்வாழும்
சொரூபன்மீனாட்சி சுந்தரவாத்தியார்
தாசனுக்குட்டி தமிழ்பகர்மொழியில்

சொல்லதுபிசகினுஞ் சொற்குற்றம்வருகினும்
நல்லவீரையனூர் நாமமிருப்பதால்
விஞ்சையில்வல்ல மேலோர்பொறுத்துப்
புன்சொலென்றுளும் புகழ்ந்திடுவீரோ.

விநாயகர்வருகிற-விருத்தம்.

எங்குமேபுகழ்பெற்றோங்கு மிராசனுங்காசிமன்னன்
தங்கம்போற்பயின்றமுத்து சாமிதென்மதுரைமீதில்
இங்கிதநாடகத்தை யியல்புடனடத்தவேண்டி
கங்கையின்சுதனுத்தண்ட கணபதியிதோவந்தாரே.

தரு-இ-ம்-காம்போதி-அட்டதாளம்.

பல்லவி.

கணபதியிதோவந்தாரோ-செயவுத்தண்ட
கணபதியிதோவந்தாரோ.

அனுபல்லவி.

கணபதியிதோவந்தாரோ குணமதிமிகவிளக்குங்
கட்டதடவிகடித நடனவுல்லாச
முட்டவிருவினைதவிர் கருணைவிலாசக் (கணபதி)

சரணங்கள்.

அங்குசபாச மேந்தியே - வல்லபையுடன்
அன்புமொழிகள்கூறியே
அங்கத்திருக்கைவீசிச் சுதியால்ராகங்கள்பேசி
தொந்திவயிற்றினி லுந்திச்சுழியுடன்
இந்துவிளம்பிறை போலும்விளங்கிய (கணபதி)

தண்டைச்சதங்கையொலிக்க-தகதகெனத்
தங்கப்பதக்கஞ் சொலிக்க
அண்டர்தவம்பலிக்க அழகாம்வீணையொலிக்க
அங்கையில்மோதக மிங்கிதமாயருள்
சிங்கவென்னச்சுட ரொங்கும்விளங்கிடக் (கணபதி)



அன்பானபேர்கள் பணிந்து - துதிகள்செய்யத்
தென்பாய்வெண்ணீறுமணிந்து
இன்பமுடனேவோடிச் சம்ப்ரமாகவேநாடி
இபமுகாடிதனில் தபமதுபுரிபவர்
அபவினைத்துயர்களைத் தவிர்வரமருளிய (கணபதி)

தாம்தாம்தக ஜெம்தரிகிட தீம்தாரகில் லாகுஜெம்தரி
தகணக ஜெம்தரி கிமிகிகுடத்தரி தீத்தெய்யத்தா
ததிங்கணத்தோமென (கணபதி)

குருக்கள்வருகிற-விருத்தம்.

நற்பதியருள்காவேரி நதிதனில்ஸ்நானஞ்செய்து
தற்பணமுடனேசந்தி ஜபதபமுடித்துக்கொண்டு
அப்புடன்மலர்கள்கொய்து ஐங்கரன்றனைப்பூசிக்கக்
கொப்பெனச்சுப்பராயக் குருக்களுந்தோணினாரே.

தரு-இராம்-மோகனம்-அட்டதாளம்.

பல்லவி.

குருக்கள்வந்தாரோ - சுப்பராயக் - குருக்கள்வந்தாரோ.

அனுபல்லவி.

உருக்கமாகவே ஐங்கரனைப்பூசித்
தோம்கணபதி யாகராவென்று(குருக்கள்)

சரணங்கள்.

நெத்தியில்விபூதிக் கட்டிட்டதிட்டமும்
நேரானசந்தனக் கீறிட்டசட்டமும்
பத்தியுடன்முப் புரிநூல்துலக்கவும்
பாசாங்குசதரன் பாதம்பணிந்திடக்(குருக்கள்)

அப்பமுடன்வடை யிட்டலிதேன்குழல்
ஆனசுகியன் பலபட்சணத்துடன்
செப்பமுடனைவே வேத்தியமுங்கொண்டு
சித்திவிநாயகனைப் பத்தியுடன்தொழுந்(குருக்கள்)

மங்களசோபனந் தந்தருள்முத்து
மதுரைவீரையன்மேல் நாடகம்பாடிட
இங்கிசையில்லா தருள்புரியுமெங்கள்
இபமுகர்பாதஞ் சுகமுடனேதொழுங்(குருக்கள்)

குருக்கள் விநாயகரைப்பூசைசெய்து துதிக்கும்

தேவாரம்.

நாரணன்மருகாபோற்றி நான்மறைப்பொருளேபோற்றி
வாரணமுகத்தாய்போற்றி வல்லபைநாதாபோற்றி
பூரணமதியேபோற்றி புரிதவமுதலேபோற்றி
காரணமானமூலக் கணபதிபோற்றிபோற்றி.

இவ்விதமாய் குருக்கள் பூசைசெய்து போனபின்பு

கட்டியக்காரன்வருகிற-விருத்தம்.

திங்கள்மும்மாரிபெய்து செழித்திடுங்காசிநாட்டில்
மங்களத்துடனேசெங்கோல் வழுவிடாதரசுசெய்யுந்
துங்கனுங்காசிராஜ துரந்தரன்வாசல்கார்க்குங்
கங்கணம்புனைந்தகட்டியக் காரனுந்தோணினனே.

தரு-இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

பல்லவி.

கட்டியக்காரனும்நானே-சபாசுகெட்டிக்
கட்டியக்காரனும்நானே-காசிராஜன்வாசல்
கட்டியக்காரனும்நானே-விக்குவித்ரணமுளகெட்டிக்
கட்டியக்காரனும்நானே.

அநுபல்லவி.

கெட்டிக்கன்றுக்குட்டிதுறை துட்டிவாயதட்டிவருங் (கட்டியக்)
அட்டதிக்கெங்கும்புகழும் அதிபதிகாசிராஜன்
பட்டணமுழுதுஞ்செங்கோல் திட்டமும்புகழ்ந்துகார்க்குங்(கட்)



சரணங்கள்.

விசிவீசிக்கைகள் நொடித்து-பதம்படித்து
மெய்குலுங்கச்சைகைநடித்து
ஆசியங்கள்பேசிப்பேசி யதுங்கநடைநடந்து
ஆரபாரங்கொண்டகாசி ராஜநுளசேந்திரன்வாசல் (கட்டி)

வட்டத்தலைப்பாகை சூட்டியே-நெற்றிதனிலே
திட்டமாய்வெண்ணீறு தீட்டியே
பட்டங்கவரிகொண்டு சட்டமாய்ப்பணிகள்பூண்டு
திட்டமாய்நடங்களென்று பட்டணமுழுதுங்கார்க்குங்(கட்டி)

திந்திமத்தளங்கள் போடவே-இருபுறமுந்
தித்திதயென மாதராடவே
செங்கோட்டயம்பிடித்துக் கையில்வெள்ளித்தடியெடுத்து
சந்தோசத்தொடுங்குமென்றுதாண்டித்தாண்டிநடக்குங்(கட்)

கட்டியக்காரன்சொல் வசனம்.

ஆகோகெப்பட்டியென்றால் ராஜாதிராஜ ராஜமார்த்தாண்ட ராஜவித்தண்ட ராசகெம்பீர ராசஒய்யார ராசவசீகர ராசகோலாகலன்-காசிமாநகரத்தை யாளப்பட்ட ளசேந்திரமகாராஜன் கொலுவுக்குவருகிறார் வெகுபராக்கு எச்சரிக்கையாயிருக்கள்.

விருத்தம்.

அத்தனும்விஸ்வநாத ரடியிணைக்கமலம்போற்றி
மெத்தவேபணிகள்பூண்டு மெல்லியாள்தனையுங்கூட்டி
மற்றமன்னவர்கள்சூழ மந்திரிகவிசொல்வாணர்
நற்றமிழ்விளங்குங்காசி ராஜனுந்தோணினனே.

காசிராசன்வருகிற-தரு-இ-ம்-புன்னாகவராளி-திரிபுடைதாளம்.

பல்லவி.

ராஜாதிராஜன்வந்தான்-காசிமக-ராஜபோஜேந்திரன்வந்தான்

அநுபல்லவி.

தேசமன்னருங்கவி ராசமன்னருஞ்சூழும்
போசனென்னும்விர வாசமன்னவன்காசி(ராசாதி)

சரணங்கள்.

சென்னியில்கிரீடமிலங்க-மறுமன்னவர்
கன்னியமனங் கலங்க
மின்னியகுண்டலம்விளங்க-சுத்திமத்தள
முன்னிதமாய்த்தொனிமுழங்க
கன்னியரிருபாற்கூடக் கவரிசாமரைபோட
இந்திலத்தெவருந்தேட ராஜபத்தினிகூட(ராசாதி)

பூச்சக்ரக்குடை பிடிக்க-பேரிகைகடல்
பேச்சைப்போலொலி யடிக்க
கூச்சலாய்க்கவி படிக்க-தம்பூருவீணை
பாச்சகாளதை யடிக்க-
நாசமில்லாக்கன்னியர் நடனநாட்டியமாடப்
பூச்சக்ரஅதிபதி புரந்தரன்போல்காசி(ராசாதி

திங்கள்போல்முக மிலங்க-தகதகென
தங்கக்கவசந் துலங்க-
எங்குங்கீர்த்திகள் விளங்க-பேரிகைடங்கா
சங்கோசைத்தொனி முழங்க-
மங்களஞ்செயசுப மங்களமெனமாதர்
சங்கையில்லாச்சேனை தளத்துடன்ராஜேந்திர(ராஜாதி)

விருத்தம்.

ராசமன்னவர்கள்போற்ற நான்மறையோர்கள்வாழ்த்த
தேசமன்னவர்கள்சூழத் தேவியருகிருக்க
நேசமந்திரிமார்பக்கல் நின்றுகைகூப்பித்தாழ
வாசவன்றனைப்போல்காசி மன்னனுங்கொலுவிருந்தான்.

கட்டியன்வசனம்.

சரணஞ்சரணமையா சுவாமி.

இராசன்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரா நமது ஐம்பத்தாறுதேசத்திலுள்ள ராசராசர்கள் மந்திரிமார்கள் மகுடவர்த்தனர் காரியக்காரர் கருணீகர் முதலிய சகலபரிசனங்களும் கொலுச்சபையில்வந்திருக்கிறார்களா சகலமும் பார்த்துவந்துசொல்லும்பிள்ளாய் கட்டியக்காரா.



கட்டியன்வசனம்.

அகோ சரணஞ்சரணமையா சுவாமி ஐம்பத்தாறுதேசத் தாசர்கள்முதலிய சகலரும் தேவரீருடைய கொலுச்சபையில்வந்திருக்கிறார்கள் சுவாமி.

இராசன்வசனம்.

சந்தோஷம் சந்தோஷம் இப்போது வசந்தபூரணச்சந்திரோதயகால மானபடியால் நமது கொலுச்சபையில் பாதசாஸ்திரப்படி நடிக்கும் நாட்டியப்பெண்களை யழைத்து சிலநேரம் நாட்டியஞ் செய்யச்சொல்லும்பிள்ளாய் கட்டியக்காரா.

கட்டியன் வசனம்.

அப்படியே மகாபாக்கியமையா சுவாமி.

நாட்டியப்பெண்கள்வருகிற விருத்தம்.

திருமகள்முகவிலாசஞ் செகமெலாமயக்கிப்போக
இரதிதேவியினுநல்ல எழில்களைப்பூண்டுரூப
அரம்பைமேனகையில்மிஞ்சும் ஆடல்பாடலையும்பெற்று
சுரலயநடனஞ்செய்யுந் தோகைபர்தான்வந்தாரே.

தரு-இ-ம்-மத்தியமாவதி-அடதாளசாப்பு.

பல்லவி.

நடனநாட்டியப்பெண்கள்வந்தார்-மிக ஒயிலாய்
நடனநாட்டியப்பெண்கள்வந்தார்

அநுபல்லவி.

நடனநாட்டியப்பெண்கள்வந்தார்
நயகுழல்சித்திமிதாளத்துடனே திடமுடன்சுரதகீதங்கள்பாடி
செனுதகதச்செனு ததிங்கணத்தோமென (நடன)

சரணங்கள்.

மதினுதலில்திலதந் தீட்டி-அபிநயங்காட்டி
வருமிளமயில்சாயல் பூட்டி- கைகளைநீட்டி
சதிசெய்வதேதநீ ரொந்தனைக்கூட்டீ
தாமசஞ்செய்தால் சகியேனுன்காமி
ததியிதுவேளையில் மருவடாசாமி
ஜெனுதஜ ஜனுதத் ததிக்கணத்தோமென (நட்டன)

சிங்காரமாய்ப்பணிகள் பூட்டி-விழிமைதீட்டி
ஜெகாராஜர்மேற்காதலைச் சாட்டி-ராஜகிரீட்டி
மங்களமாமொழி வதனத்தில்தோன்ற
மத்தளதாளங்க ளொத்துடன்தீண்ட
செங்கையிலணிவளை கலகலவென
திரிகிட திரிகிட ததிங்கணத்தோமென (நட்டன)

காசிமன்னவன்சபை தேடி-சங்கீதம்பாடி
கண்ணூற்சைகைகளைச்செய்தாடி- விரகம்நாடி
வாசனைசுகந்தநல் மலர்களைச்சூடி
மன்னவன்கீர்த்தியை மகிழ்ந்துகொண்டாடி
தாசியினும்பாத நாட்டியமாடி
தரிகிட தரிகிட ததிங்கணத்தோமென் (நட்டன)

---

பொதுவசனம்.

இவ்விதமாய் நாட்டியப்பெண்கள் நாட்டியஞ்செய்து பரிசு பெற்றுக்கொண்டுபோனபின்பு இராசன் மந்திரிமுதலானவர்களை நோக்கிச் சொல்லுகிறவிதங்காண்க.

இராசன்சொல் விருத்தம்.

வரும்வகையறிந்துகூறும் மதியூகமந்திரிமாரே
தருமநுநீதிகார்க்குந் தளகர்த்தனோகேளீர்
பரிவுடனெனக்குப்பின்னால் பட்டணந்தன்னையாளச்
சிறுவனில்லாததேனோ செப்புவீர்மந்திரிமாரே.



இராசன்சொல்-தரு-இ-ம்-முகாரி-அடதாளம்.

கண்ணிகள்.

ஏதென்னசொல்வேனேதுசொல்வேன் மந்திரிமாரே-இப்போ
என்தலைவிதிவசத்தை மந்திரிமாரே
நன்மைசெய்தபாவியானேன் மந்திரிமாரே-நான்
சேயனில்லாத்துரோகியானேன் மந்திரிமாரே

காசிநகராளுதற்கு மந்திரிமாரே-வேறு
காரணனில்லாமற்போனேன் மந்திரிமாரே
பூசுரர்பெரியோர்களை மந்திரிமாரே-நான்
பொந்திதோகஞ்செய்திட்டேனோ மந்திரிமாரே

பாலகனில்லாதபேரை மந்திரிமாரே-நான்முன்
பழித்துநகைசெய்தேனோ மந்திரிமாரே
காலாகாலத்தெனக்கு மந்திரிமாரே-ஒரு
கண்மணியில்லாமற்போச்சே மந்திரிமாரே

முற்பிறப்பில்செய்தவினை மந்திரிமாரே-இந்நாள்
மூண்டுதோவறிகிலேனே மந்திரிமாரே
இப்பிறப்பிலெந்தனுக்கு மந்திரிமாரே-சுதன்
ஈல்வாணளிக்கவில்லை மந்திரிமாரே

புத்திரனில்லாதபேர்க்கு மந்திரிமாரே-ஈசன்
பொற்பதங்கிட்டாதெனவே மந்திரிமாரே
தத்துவசாஸ்திரமுதல் மந்திரிமாரே-வேதந்
தான்முறையிடுதல்லவோ மந்திரிமாரே

மைந்தர்களில்லாதவாசல் மந்திரிமாரே-நரக
வாசலென்றுரைக்குதல்லோ மந்திரிமாரே
சிந்தைகலங்காமலென்முன் மந்திரிமாரே-நீங்கள்
செப்புவீரிதின்னதென்று மந்திரிமாரே

—※—

முதல்மந்திரிசொல்-விருத்தம்.

செப்புமொன்றவார்த்தை செவிதனில்கேட்டமைச்சன்
கொப்பெனவெழுந்துநின்று கோமானைத்தொழுதுபோற்றி

இப்புவியாளும்வேந்தே யேழையேன்மொழிநப்பாமல்
ஒப்புவீராகில்பால னுதித்திடுமுமக்குத்தானே.

இரண்டாம் மந்திரிசொல் விருத்தம்.

சூரியகுலத்துக்கெல்லாந் துரைமகாமேருவாகப்
பாரில்வந்துதித்துக்காசிப் பதிநகராளும்வேந்தே
மீறியதானதர்மம் விசேஷமாய்ச்செய்வீராகுல்
பாரிலையாளயீசன் பாலகனளிப்பானையா.

---

மந்திரிசொல்-தரு-இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

தேசராஜர்தொழச் செங்கோல்செலுத்திடும்
மன்னனே-காசி-மன்னனே நான்
செப்பிடும்வார்த்தையை ஒப்பிடுவீரையா
மன்னனே-காசி-மன்னனே *

வெள்ளைவிடையேறும்விஸ்வநாதருக்கன்பாய்
மன்னனே-காசி-மன்னனே இப்போ
வெள்ளிவிடைசெய்து வேண்டிக்கொள்ளும்ராச
மன்னனே-காசி-மன்னனே *

சத்திவிசாலாட்சி சன்னதிமுன்னுக்கு
மன்னனே-காசி-மன்னனே வெகு
சித்திரமாகத் திருக்கோபுரஞ்செய்யும்
மன்னனே-காசி-மன்னனே *

அந்தணர்கோடிபேர்க் கன்னதானஞ்செய்யும்
மன்னனே-காசி-மன்னனே வெகு
சந்தோஷமாய்ச்சொர்ண தானங்கள்தந்திடும்
மன்னனே-காசி-மன்னனே *

நந்தவனம்வைத்து நற்குளம்வெட்டிடும்
மன்னனே-காசி-மன்னனே விஸ்வ



நாதரைப்போற்றியெந்நாளுந்துதிசெய்யும்
மன்னனே-காசி-மன்னனே *

மைந்தனில்லையென்று சிந்தைகலங்கிடும்
மன்னனே-காசி-மன்னனே ஈசன்
சிந்தைமலர்ப்பதம் வேண்டித்தவஞ்செய்யும்
மன்னனே-காசி-மன்னனே *

அத்தியுரித்த அரனைத்துதிசெய்தால்
மன்னனே-காசி-மன்னனே அவர்
சித்தமிரங்கிப்பின் புத்திரனருள்செய்வார்
மன்னனே-காசி-மன்னனே *

மார்க்கண்டனுக்காக வந்தருளீய்ந்தவர்
மன்னனே-காசி-மன்னனே உந்தன்
மைந்தன்கவலையை மாற்றிடுவாரையா
மன்னனே-காசி-மன்னனே *

சாம்பசதாசிவன் றன்பொருட்டாக்ராஜ
மன்னனே-காசி-மன்னனே உந்தன்
சஞ்சலந்தீர்க்கத் தனயனுண்டாக்குவார்
மன்னனே-காசி-மன்னனே *

---

மந்திரிசொல்-வசனம்.

சரணஞ்சரணமையா சுவாமி தேவரீர் நான்சொல்லியபடியா
ல் விஸ்வநாதருக்கு வெள்ளியினாலே ரிஷபவாகனமும், விசாலாட்சி
யம்மன் சன்னதிக்கெதிரில் திருக்கோபுரமும் செய்துவைத்து அந்த
ணர் பெரியோருக்கும் அன்னதானமுதலாகிய தானதர்மங்கள்செய்
து கயிலாயபதியாகிய ஈஸ்பரனைநோக்கி தபஞ்செய்வீராகில் உம்மு
டைய புத்திராபேக்ஷை தீர்க்கும்படியாய் பரமேஸ்பரன் கிருபை
செய்வானையா சுவாமி.

பொதுவிருத்தம்.

மந்திரியுரைத்தவார்த்தை மன்னவன்விருப்பாய்க்கேட்டு
சுந்தரமுகமலர்ந்து சோபியர்முதலாயுள்ள

அந்தணர்பெரியோருக்கு மன்னதானங்கள்செய்து
மைந்தனைக்குறித்தீசன் மலரடிதொழுதிட்டானே.

இதுவுமது.

பச்சையால்மகுடஞ்சூடும் பார்மன்னன்காசிராஜன்
இச்சையாய்ப்புதல்வன்வேண்டி யெழுந்திருகரத்தைக்கூப்பி
மெச்சியேவிஸ்வநாதர் மெய்யடிபணிந்துபோற்றி
வச்சிரப்புயக்கொள்மன்னன் வருந்தியேதவத்தில்நின்றான்.

இராஜன் விஸ்வநாதரைத் தோத்திரஞ்செய்யும்

தேவாரம்.

ஆதியேஅரனேபோற்றி யம்பிகைபாகாபோ
வேதியன்மதலைதன்னை விருந்துண்டநாதாபோற்றி
நீதியாயுலகமாள நீள்சுதன்வேண்டிவந்தேன்
பாதியாமதியைச்சூடும் பரமனேபோற்றிபோற்றி.

காமனையெரித்தாய்போற்றி கரியுரிதரித்தாய்போற்றி
சோமனைத்திருக்கண்கொண்ட சுந்தரானந்தாபோற்றி
நேமமாய்ப்புதல்வன்வேண்டி நின்றனன்தவத்தில்யானும்
சேமமாயருள்தந்தாளுஞ் செஞ்சடைநாதாபோற்றி.

முற்பிறப்பினில்யான்செய்யா முழுவினைசெய்தபோதும்
இப்பிறப்பினிலென்சன்மம் ஈடேற்றம்பெறுவதாக
அப்பணிசடையாயெந்தன் அவனிகள்முழுதுமாள
செப்பமாய்ச்சுதன்றந்தாளுஞ் செஞ்சடைநாதாபோற்றி.

பொதுவிருத்தம்.

புத்திரனபேக்ஷைபாலே பூபதிகாசிராசன்
மெத்தவேமனதுநொந்து வெள்ளியங்கிரியில்வாழும்
அத்தனார்பாதம்போற்றி யருந்தவஞ்செய்யும்போது
சத்தியினுடனேசாம்ப சங்கரர்தோன்றினாரே.



ஈச்வரன்வருகிற-தரு-இ-ம்-மோகனம்-திரிபுடைதாளம்.

பல்லவி.

சாம்பசிவசங்கரர்வந்தார்-விடையிலேறிச்
சாம்பசிவசங்கரர்வந்தார்

அனுபல்லவி.

பாம்புடனறுகும்பை பாதிமதியுந்தரித்து
தாம்பரகுண்டலம்பூண்டு சத்தியுஞ்சிவமுமாகச் (சாம்ப)

சரணங்கள்.

சென்னியில்சடாமகுட மும்-இருகாத்தி
துன்னிதமான்மழுசூல மும்
கன்னியர்சாமரைவீசக் காளைமீதேறியுல்லாச
மண்ணுலகில் தவஞ்செய்யும் மன்னன்காசிராசன்முன்னே(சாம்ப)

அந்தாதுந்துமி முழங்க-ஜெயஜெயவென
இந்திரதேவர்கள் விளங்க
மந்திரமறையோர்பாட மாதர்கள்நடனமாட
சுந்தரக்கின்னரர்கூட்ட சுந்தரர்க்குத்தூதுசென்ற (சாம்)

போற்றிசெய்திமையோர்வணங்க-இருபுறமும்
காத்திருக்கட்பூத கணங்கள்
ஆத்திமாமலரைச்சூடி அன்புடன்பதத்தைநாடி
போற்றியகாசிராசேந்திரன் புத்திரக்கலிதவிழ்க்க(சாம்ப)

விருத்தம்.

சத்தியுஞ்சிவனுமாகத் தாரணிமன்னன்முன்னே
பத்தியாய்வந்தபோது பார்மன்னன்காசிராசன்
சுத்தியேவலமாய்வந்து தோத்திரஞ்செய்துபோற்றி
அத்திமாமுகனையீன்ற அண்ணலைத்தொழுதுநின்றான்.

இதுவுமது.

நின்றிடுமரசன்தன்னை நித்தனார்மகிழ்ந்துபார்த்து
நன்றெனநகைத்துமன்னா நம்மைநீநினைத்துப்பாரில்
இன்றுநற்றவத்தைச்செய்த தென்னகாரணஞ்சொல்லென்று
கொன்றைசூடியனார்கேட்கக் கோவேந்தனுரைசெய்வானே.

இராசன்சொல்-தரு-இராகம்-சங்கராபரணம்-அடதாளம்.

கண்ணிகள்.

மன்னர்மெச்சவாழ்ந்திருந்தேன்-அண்ணலாரோ-சிவனே *
மனதினிற்கவலைகொண்டுனதருள்பெறநின்றேன் அண்ணலாரோ *

என்னசொல்வேனென்கொடுமை-அண்ணலாரோ-சிவனே *
ஏங்கியேமனமது தாங்காமல்தபஞ்செய்தேன் அண்ணலாரோ *

மைந்தனில்லாதுண்ணுமன்னம்-அண்ணலாரோ-சிவனே *
மருந்தென்றினியவேத மறிந்தவருரைசெய்தார் அண்ணலாரோ *

எந்தன்மனஸ்தாபமதை அண்ணலாரோ-சிவனே *
இட்சண்ந்தீர்த்தென்னை ரட்சிப்பதுஉன்பாரம்அண்ணலாரோ *

ஆசைசுதன்பாசமூடி-அண்ணலாரோ-சிவனே *
அந்தரத்தினில்சிவசெந்துபோலாகினேன் அண்ணலாரோ *

வாசவனுந்தேவர்களுமண்ணலாரோ-சிவனே *
வந்துபணிந்திடவுன்சிந்தைமகிழ்ந்தருளும்-அண்ணலாரோ *

ஆலமுண்டகாலகண்ட அண்ணலாரோ-சிவனே *
அடிமையாய்க்கொண்டெந்தன்கொடும்வினையகற்றிடும்-அண்ணலா

பாலகனெனக்கருளும் அண்ணலாரோ-கிருபை *
பாலித்தென்கலிதீரப் பாரும்நீரிதுவேளையண்ணலாரோ *

---

ஈஸ்பரன்சொல்-விருத்தம்.

இப்படிகாசிமன்ன னிறைஞ்சியேபுலம்பும்போது
அப்பணிசடையோன்சித்த மானந்தம்பெருகியேதான்
நட்புடனம்மைநோக்கி நற்றவம்புரிந்தகாலே
செப்பமாய்ச்சுதனுண்டாகத் திருவருள்கொடுத்தோமன்று.

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் காசிராஜனே நீ முற்பிறப்பிலே என்னபாவங்களைச்செய் திருந்தபோதிலும் இப்போது நீ நம்மைக்குறித்து அரிதாகிய தவத்தைச்செய்தபடியினாலே உனக்குப் புத்திரனுண்டாகும்படியாய் வரமருளிச்செய்தோம் இனிமேல் உன்னுடைய பட்டணம்போய்ச்சேரும்பிள்ளாய் காசிராஜனே.



காசிராஜன்-வசனம்.

அப்படியே மகாபாக்கியம் சுவாமி.

பொதுவிருத்தம்.

நற்றவம்புரிந்தகாசி ராஜனுக்கருளையீந்து
கர்த்தனுமுமையும்வெள்ளிக் கயிலையங்கிரிக்குச்சென்றார்
மற்றமன்னவர்கள்சூழ மன்னவன்மனம்பூரித்து
வெற்றியோடரண்மனைக்கு வேந்தனும்நடந்திட்டானே.

வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் ஜகதீஸ்பரனனவர் துளசேந்திரமகாராசனுக்கு புத்திரனுண்டாகும்படியாய் வரமருளிச்செய்து கயிலாயகிரிக்குப்போய்ச் சேர்ந்தபின்பு துளசேந்திரமகாராசன் மிகுந்தசந்தோஷத்துடனே மந்திரிமார்கள் புடைசூழத் தன்னுடைய அரண்மனைக்குப்போய்ச் சேர்ந்தார்.

இதுவும் பொதுவிருத்தம்.

ஈசனுருரைத்தபோதே ஏந்திழைவயிற்றில்கெர்ப்பம்
மாசமொன்றிரண்டுமாகி வயிறதுகனத்துமூன்றில்
நேசமாயைந்தாந்திங்கள் நிலமையென்றறிந்துயெட்டில்
ராசபத்தினியுங்கெர்ப்பம் நயந்துபூரணமானாளே.

இதுவுமது.

பூரணகெர்ப்பமாகிப் பொருமியேவயிறுநொந்து
பாரினிலெவர்க்குமுள்ள படியதாய்சோபமீறி
சீரணிமாதர்பக்கல் சென்றுகைலாகுதாங்கக்
கூர்விழிநீர்கள்சிந்தக் கோதையும்புலம்புவாளே.

செண்பகவல்லி-கெர்ப்பவேதனைபடுகிற-தரு.

தரு-இ-ம்-கண்டா-சாப்புதாளம்.

பல்லவி.

அம்மமாரோயெந்தன் தோழிமாரோ என்னது
அங்கமெல்லாமெத்த நோகுதடி.

அநுபல்லவி.

விம்மிவிம்மியே வயிறுவலிக்குது
மேனியெல்லாம்வேர்வை சொலிக்குது (அம்ம)

சரணங்கள்.

என்னசெய்வேனடி - தாதியாரே மன
தேக்குதடியெந்தன் பாங்கிமாரே
கண்சொருகியே தலைகள்சுற்றுது
காலுங்கையுமே நடுக்கமாகுது (அம்ம)

மைந்தனில்லையென்று நானிருந்தேன்-அந்த
வருத்தமெல்லாமிப்போ தோணுதடி
அந்தரத்தினி லுயிரும்போகுது
சுந்தரக்குரல் கம்மலாகுது (அம்ம)

அன்னையேநீவிசா லாக்ஷியம்மே-என்னை
ஆதரிக்கவா வேணுமம்மா
உன்னையல்லால் வேறுகதியெனக்
கன்னையேயிங் காருங்காணேனே (அம்ம)

—*—

வேறு தரு-இ-ம்-மோகனம்-ஏகதாளம்.

பல்லவி.

அம்மமாரே நானென்செய்வேன்-அடியென்
பாங்கிமாரே நானென்செய்வேன்-அடியென்
தோழிமாரே நானென்செய்வேன்.

அநுபல்லவி.

அம்மமாரேயென் அடிவயிற்வலிக்குதே
ஆயாசமாகுதே ஓயாமலடிக்கடி (அம்ம)

சரணங்கள்.

ஒருக்கப்படுதில்லை யென்செய்வேன்-வயிற்
ஓயாமல்வலிக்குதே யென்செய்வேன்
பொறுக்கமுடியவில்லை யென்செய்வேன்-அம்மா
பிள்ளைவலிக்குது நா னென்செய்வேன்



இம்மாநிலந்தனில் என்னுயிர்பிழைப்பேனோ
எட்டியெட்டிவயிற்றில் முட்டுதேயெனைப்பெற்ற (அம்ம)

இருதுடையுமிடையுங் கடுக்குதே-அம்மா
ஏதோமயக்கமாய்க் கொடுக்குதே
வரவரப்பெருமூச்சு தொடுக்குதே-எந்தன்
வாய்காய்ந்துநாவுஞ்சொல் தடுக்குதே
அரிகரியெந்த னென்மையையெடுக்குதே
அன்றுநீதேயென்னிரு கண்ணும்படுக்குதே (அம்ம)

—*—

கொச்சகம்.

மானிலந்தன்னிலே மங்கையர்சென்மமாய்
தானதையுண்டுசெய் சதுர்முகவேதனே
நானினியென்செய்வேன் நல்லுயிர்போகுதே
வீணிலேயான்படும் வேதனைதீருமே.

தரு-இ-ம்-காம்போதி.

நாதனேவிஸ்வநாதனே - இந்த- வேதனைசகியேனுதனே.
பூதலந்தனில்வேதனைப்பட-நீதமோவர்மமேதைபா (நாத)
வாடுதேயிடைதள்-ளாடுதேமயக்கம்-போடுதேயிருகண்மூடுதே (நா)

மருத்துவக்கிழவிவருகிற விருத்தம்.

செருத்திடைவயிறுநொந்து செண்பகவல்லிமாது
வருத்தமாய்ப்புலம்பும்போது மனமதிரங்கிக்கூர்ந்து
ஒருத்தமாமதியைச்சூடு முமைவிசாலாக்ஷியம்மன்
மருத்துவக்கிழவிபோலே வந்துமுன்தோன்றினாளே.

தரு-இ-ம்-மத்தியமாவதி-அட்டதாளம்.

பல்லவி.

கிழவிவந்தாளே - மருத்துவக் - கிழவிவந்தாளே.

அநுபல்லவி.

கிழவிவந்தாளே கெம்பீரமாகவே
கெஞ்சிப்புலம்பிடும் வஞ்சியர்முன்கிடு
கிடுக்கித்தலை நடுக்கி உட லொடுக்கிவெகு முடுக்கதாகவே (கிழவி)

சரணங்கள்.

சந்தைகயில்லாமல் வயிற்றுவலிகொண்டு
மங்கைபுலம்பும் வருத்தமதைக்கண்டு
பக்கமில்லாமல் சுதன்பெறுவாயென்று
கொங்கைவிலாசப்பெண் கோதைக்குமுன்சென்று
கூனித்தடி யூணி மன்றூணி வாய்நீரொழுக (கிழவி)

மெய்யுங்கையுங்காலும் நடுக்கமெடுத்து
வையல்படும்பாடு தன்னையும்விடுத்து
வையகமாளச் சுதன்பெற்றெடுத்து
வனத்திற்போடுமென்று வாக்குக்கொடுத்து
மகளேயினி-சுகமாய்ப்பெறு மகனேயென்று முக்மாயஞ்சொல்(கிழ

பண்டையில்நாங்கள் பெறுதபிள்ளையோ
உண்டாயிருந்தா யுனக்கதுதொல்லையோ
சண்டிவலியார்க்கு முள்ளதோயில்லையோ
சற்றுநேரம்பொறுத் தாயேயிக்குவந்த
தாரடி-நீ கூறடி-வெகுநேரடி-பிள்ளை பாரடியென்று(கிழவிவந்தா]

⁂

விருத்தம்.

வந்தவள்மனம்பூரித்து மருத்துவம்பார்க்கும்போது
சுந்தரர்கிருபையாலே தொல்லுலகாளும்ராசன்
சிந்தையுமகிழ்வதாகச் செண்பகவல்லிமாது
மைந்தனைப்பயின்றுசோப மாகவேயிருந்திட்டாளே.

குழந்தைபிறந்ததரு-இ-ம்-காம்போதி-அடதாளம்.

பல்லவி.

வீராதிவீரன்பிறந்தான்-காசி
வேந்தனின்குலத்தில்வந்து காந்தியினொளிபோல்முத்து(வீரா)

அனுபல்லவி.

வாரிதிசூழ்ந்திடுக்காசி மாநகராளும்பெரிய
பாரதையாளுந்துரைசி ராசமகாராசனுக்கு (வீராதி)



மேதினியிலக்ஷிமரங் காய்சாவேபூத்தாற்போல
மேடையேறிக்கார்த்திகைப்பிறையைத்தேடிப்பார்த்தாற்போல(வீரா

மாதர்கட்கரசியென்னுஞ் செண்பகவல்லிவயிற்றில்
மாணிக்கம்போற்பட்டமாளுங் காணிக்காகவேவந்து(வீராதி)

⁂

விருத்தம்.

சோபமாயிருக்கும்போது தோழியர்பாலன்றன்னை
தாபமாயெடுத்துப்பார்த்து சந்தோஷமனதிற்கொண்டு
பூபதியாசனார்க்குப் புத்திரன்பிறந்தானென்று
க்ஷேமமாய்த்தாதிமார்கள் தெண்டனிட்டுரைசெய்தாரே.

இதுவுமது.

உரைசெய்யக்கேட்டுராசன் உளமகிழ்ந்தெழுந்திருந்து
அரசனுமமைச்சர்சூழ ஆசாரந்தன்னில்வந்து
விரைவினில்தானதர்மம் விந்தையதாகச்செய்து
மறைவல்லோர்தனையழைத்துவாருமென்றுரைசெய்தானே.

இராசன்சொல் வசனம்.

அகோவாரும்பிள்ளாய் ஆஸ்தான கோலாகலனாகிய கட்டியக்காரா இப்போது நம்முடையபட்டணத்திலே வாசமாயிருக்கும் நால்வேதநிபுணர்களாகிய சோதியர்களை அதிசீக்கிரமாக அழைத்துவாரும்பிள்ளாய் கட்டியக்காரா.

கட்டியக்காரன் வசனம்.

அப்படியே அழைத்துவருகிறேனையா சுவாமி.

கட்டியக்காரன் சோதியர்களுக்குச்சொல்

விருத்தம்.

மன்னவனுரைத்தசேதி வாசல்கட்டியனுங்கேட்டு
இன்னகர்தன்னையாளு மிராசர்க்குச்சுதனுண்டாகச்
சொன்னசொல்பொய்யாகாத சோதியத்தோரேவும்மை
தென்னவனழைக்கச்சொன்னார் சீக்கிரம்வருகுவீரே.

வசனம்.

அகோவாருங்களையா சுவாமி வேதசோசியர்களே தங்களை ஏககாரியமாகவோ நமது ராசராசேந்திரனை அளசேந்திரமகாராசன் அழைத்துக்கொண்டுவரச்சொன்னாரையா சுவாமிகளே.

சோசியர் வசனம்.

அப்படியே வருகிறோம்பிள்ளாய் கட்டியக்காரா.

பொதுவிருத்தம்.

வருகுவீரென்றவார்த்தை மாமறைவல்லோர்கேட்டு
அருமறைவேதசாஸ்திர மஷ்டவர்க்காதியோடு
பெருக்கமாய்க்கையிற்கொண்டு பிரபலன்சமுகம்நோக்கி
சுருக்குடனெழுந்துவேத சோசியர்வருகின்றாரே.

சோசியர்வருகிற தரு-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

சோசியர்வந்தார் - சதுர்வேத - சோசியர்வந்தார்

அநுபல்லவி.

சோசியர்வந்தாரே சுபவாக்குத்தந்தாரே
ராசற்குச்சுதனுற்ற ராசிநற்பலன்காண(சோசி

சரணங்கள்.

நெற்றியில்வெண்ணீறணிந்து-விஸ்வநாதனை
பத்தியாகவே பணிந்து
வெற்றிபெற்றிடுங்காசி வேந்தனுக்கருள்செல்வ
புத்திரனுதித்தநாள் புதிதசாதகஞ்சொல்ல(சோசிய

புரிநூல்மார்பில் துலக்க-பின்குடுமியில்
பூச்செண்டுவாசத்தோடிலங்க
வரியாகப்பட்டுவேஷ்டி மடிசஞ்சியுடனட்டி
குரியாகச்சதுர்வேதங் கூறிக்கூறிக்கொண்டு(சோசி

அட்சதையின் பொட்டு-பாதக்குறடு
பட்சமாகவே தொட்டு



மெச்சநடைநடந்து வேந்தன்சபையடைந்து
பட்சமாய்ச்சாதகப் பலனைப்பார்த்துரைக்கவே (சோசி)

பொதுவிருத்தம்.

வந்தசோசியர்கள்காசி மன்னனுக்காசீர்வாதஞ்
சந்தோஷந்தீர்க்காய்சென்று தந்தவாசனத்தின்மீது
அந்தணரிருக்கும்போது அரசனுமனம்பூரித்து
எந்தனற்குருவேயென்று இறைஞ்சியேதொழுதிட்டானே.

இராசன்சொல்-விருத்தம்.

துதிபெறும்வேதங்கற்ற சோசியனாரேயெந்தன்
பதிதனையாளச்செல்வ பாலகன்பிறந்தானையா
முதிர்மறைநூலாராய்ந்து முக்கியத்துடனேபார்த்து
அதிலுள்ளபலாபலங்க ளறியவேயுரைசெய்வீரே.

வசனம்.

சரணஞ்சரணமையா சுவாமி வேதசோசியர்களே இப்போது விஸ்வநாதசுவாமியினுடைய கிருபாகடாட்சத்தினாலுந் தேவரீர்களுடைய ஆசீர்வாதத்தினாலும் அடியேனுடைய பட்டணத்தை அரசாட்சிசெய்ய செல்வன்பிறந்தான் ஆகையால் அந்தக்குழந்தைபிறந்த நாள் நட்சத்திரம் ராசிபலன் முதலாகிய பலாபலன்களை ஆராய்ந்தறிந்துசொல்லுங்கள் சுவாமிகளே.

சோசியர்கள்சொல்-விருத்தம்.

ஆலகாலத்தையுண்ட அண்ணலார்பாதம்போற்றி
நூலஷ்டவர்க்கம்போட்டு நன்மையாய்ப்பார்க்கும்போது
பாலகன்கழுத்தில்மாலை படுங்கொடியிருக்குதையா
சீலமாயெடுத்துவந்தன் திருக்கண்ணால்பார்த்திடீரே.

வசனம்.

அகோவாரும் ராசாதிராசனே உம்முடைய பாலகன்பிறந்த நாள் நட்சத்திரம் ராசிபலன் முதலியவைகளைப்பார்க்கும்போது அந்தப்பாலகன்கழுத்திலே மாலையுங் கொடியும் சுற்றியிருக்கிறதாக

காணாது ஆகையால் அந்தக்குழந்தையை எடுத்துவரச்சொல்லி உம்முடைய திருக்கண்ணால்பார்த்துச் சொல்லுமையா மகாராசனே.

இராசன்சொல்-விருத்தம்.

அந்தணருரைத்தவார்த்தை யரசுமன்னவனுங்கேட்டு
சுந்தரமுகமுஞ்சோம்பித் தோழியர்தனையழைத்து
மைந்தனையெடுத்துக்கொண்டு வரச்சொல்லிபாலன்றன்னை
விந்தையாய்ப்பார்த்துக்காசி வேந்தனுமுரைசெய்வானே.

இராசன்சொல்-தரு-௩-ம்-காம்போதி-அடதாளம்.

கண்ணிகள்.

வேதமொழிகொண்டு நீதமுரைத்திடுஞ்சுவாமிகளே-எந்தன்
மாதவத்தால்வந்த மைந்தனைப்பார்த்தேனென்சுவாமிகளே

மைந்தன்கழுத்தினில்மாலையிருக்குது சுவாமிகளே-பின்னும்
நஞ்சுக்கொடிசுற்றி நன்றாய்க்கிடக்குது சுவாமிகளே

மூலக்கொடிசுற்றிப் பாலன்பிறந்ததால் சுவாமிகளே - செய்யு
மூலக்கொடுமைமொழிந்திடுவீரையா சுவாமிகளே

மாலைவிழுந்தால் வரும்வினைகூறிடும் சுவாமிகளே - தர்மம்
வாரிச்சொரியுறேன் மாரிபோல்யாவர்க்கும் சுவாமிகளே

ஆராலுஞ்செய்யா அருந்தவஞ்செய்தேனே சுவாமிகளே - எந்தன்
பாராளவென்றிந்தப் பாலகனுக்காகச் சுவாமிகளே

செய்ததவத்துற்றசேயன்கழுத்தினில் சுவாமிகளே-குலங்
கொய்யுமரவக்கொடியேன்விழுந்தது சுவாமிகளே

நீதிநால்வேதநிலைதவறுமலே சுவாமிகளே - நன்றாய்
சோதித்துப்பார்த்துச் சுருக்கிலுரைத்திடும் சுவாமிகளே

விருத்தம்.

வேலைசூழ்காசியாளும் வேந்தன்சொல்லுரையைக்கேட்டு
சாலவேதங்களோதுஞ் சாஸ்திரவேதியருரைப்பார்
மாலைதான்கழுத்திலிட்டு வந்தபாலகனிருந்தால்
ஆலயமுழுதுங்கோட்டை யமடுவந்தழியுந்தானே.



சோசியர்கள்சொல்-வெண்பா.

மைந்தன்கொடிசுற்றி வந்தவனைவைத்திருந்தால்
உந்தன்கிளையதனி லுள்ளோர்க்கும்-தந்தையுடன்
கோத்திரத்துக்காகாது கொற்றவனேயெம்முடைய
சாஸ்திரத்திலுள்ளவிதந் தான்.

வசனம்.

அகோவாரும் ராசாதிராசனே நீர் அனேகதவங்களைச்செய்து பெற்றபோதிலும் ஈஸ்பரன் கற்பனையாலுண்டான குழந்தையினுடையகழுத்தில் மாலையும் கொடியும் சுற்றியிருப்பதினால் அந்தக்குழந்தையை நம்முடைய அரண்மனையில் ஒரு க்ஷணப்பொழுதாகிலும் வைத்திருக்கக்கூடாது, நாம் குழந்தையினுடைய அபேட்சையினால் வைத்திருப்போமானால் நம்முடைய அரண்மனை ஆஸ்தான முதலாகியதும் இடிந்து பாழாய்ப்போம், அதல்லாமல் உமக்கும் உம்முடைய கோத்திரத்திலுள்ளோர்க்கும் கேட்டைத்தரும் ஆகையால் இதை நன்றாக யோசித்துப்பாரும் துளசேந்திரமகாராசனே.

விருத்தம்.

சோசியர்சொல்லைக்கேட்டுத் துயரமாய்வேந்தனுந்தான்
மேதினிதனில்மயங்கி விழுந்தனன்சோபமுற்று
நீதிமந்திரிமார்வந்து நீக்கினார்துயரந்தானைப்
போதிலோராசனுந்தான் புலம்புவான்புலம்புவானே.

இராஜன்புலம்பல்.

தரு-௩-ம்-பைரவி-அடதாளம்.

கண்ணிகள்.

ஐயோநானென்னசெய்வே னுசிவேவிசுவநாதர்
அரும்பாவியானேனையோ சிவனே-ஐயோ-சிவனே

செய்யுந்தவத்தில்வந்த சேயனைநானிழந்து
சிந்தைகலங்குவேனே சிவனே-ஐயோ-சிவனே

மைந்தனில்லாததையெண்ணி நொந்தேன்மனதிலுன்னி
மார்தவஞ்செய்தேனையோ சிவனே-ஐயோ-சிவனே

எந்தன்பதிக்கினிமே லிளவரசில்லையென்று
ஏங்கும்படிசெய்தீரோ சிவனே-ஐயோ-சிவனே

ஆருஞ்செய்யாதவினை யான்செய்தபாவியானேன்
அண்ணலேயென்னசெய்வேன் சிவனே-ஐயோ-சிவனே
பாரிலெந்தனைப்போல் பாலகனைப்பயின்றும்
பலனில்லாப்பாவியுண்டோ சிவனே-ஐயோ-சிவனே

பிள்ளையில்லாதசென்மம் போயென்னயிருந்தென்ன
பிரயோசனங்களுண்டோ சிவனே-ஐயோ-சிவனே
வள்ளலேயென்னுடைய மனதெப்படிசகித்து
வையகத்திலிருப்பேன் சிவனே-ஐயோ-சிவனே

விருத்தம்.

மன்னனித்தவிதம்புலம்பி மூர்ச்சையாகி
மாநிலத்தின்மிசைவிழுந்து வருந்தும்போது
தென்னவனையெடுத்தணைத்துச் சோபந்தீரச்
செய்தபின்புராசன்மனந் திகைத்துச்சொல்வான்
சொன்னமொழிதவறாத மறைவல்லோரே
சுதனையினியென்னசெய்வோஞ் சுவாமியென்று
வன்னமொழிபதறிமன்னன் கேட்கும்போது
மாமறையோர்விசனமுற்று வசனிப்பாரே.

சோசியர்கள்சொல்-விருத்தம்.

நீதியுடன்காசிநக ராளும்வேந்தே
நேயமுடன்கேளுமுந்தன் சேயன்தன்னை
நீதியில்லாத்தங்கத்தாம்பாளந்தன்னில்
செப்பமுடன்வைத்துதந்தச்சிவிகையேற்றி
பாதிமதிதரித்தசிவன் செயலென்றெண்ணிப்
பாலகனைவனத்தில்வைத்து வரவேசொல்லும்
ஆதிமகாராசேந்திர போசாவென்று
அரசனுக்குச்சோசியர்க ளுரைசெய்தாரே.

வசனம்.

அகோவாருமையா ராஜனே நாங்களறிந்தமட்டுஞ் சொல்லு கிறோம் அதென்னவென்றால் உம்முடைய சேயனாகிய குழந்தை



யை சொர்னத்தாம்பாளத்திலேவைத்து தந்தப்பல்லக்கின்மே லேற்றி சேனை தளங்கள் சூழத்தக்கதாக எடுத்துக்கொண்டுபோய் நம்முடைய பட்டணத்துக்குத் தெற்கே ஆரண்யமானகாட்டிலே வைத்துவரச்சொல்லுமையா மகாராசனே;

விருத்தம்.

வேதியருரைக்கக்கேட்டு வேந்தனுமனங்கலங்கி
ஆதியேஅரனேயெங்கள் அச்சுதாபச்சைமாலே
நீதியோபிரம்மதேவா நீள்சுதனெனக்களித்து
சோதனைசெயலேதென்று துயரமாய்ப்புலம்புவானே.

இராசன்புலம்பல்.

தரு-இ-ம்-ஆகிரி-திரிபுடைதாளம்.

கண்ணிகள்.

சிவசிவாயிந்தவினைக்கென்செய்வேன்
சிந்தைவாடுதேமைந்தனுரைசெயால். எந்தனுயிருமுந்திவிடுகிறேன்
ஐயகோவினை யோகொடுங்காலமோ
அந்தரத்தினில்-வந்திடுஞ்சிவ செந்துபோல்மனம்-நொந்துவேகுதே
மைந்தனேவெகு மாதவஞ்செய்துநான்
மாநிலத்தினி லேபயின்றுனை கானகத்தினில் நானனுப்பவோ
பண்ணினேன்தவம் பாவிவனத்திலே
பத்தியாகவே சந்திபாகரும் நத்தியேயருள் புத்திராயினி
என்னசெய்குவே னென்பதியாளுதற்
கெத்தனைகதன் வைத்தபோதிலும்பெற்றபிள்ளைபோலுற்றதாகுமோ
நானிருந்து நகரத்தையாளவும்
ஞாயமோ,நானும் மாயுவேனடா சேயனேயென்னசெய்குவேனினி
சிவசிவாயிந்த தீவினைக்கென்செய்வேன்.

பொதுவிருத்தம்.

இப்படிகாசிமன்னன் ஏங்கியேபுலம்பும்போது
மெய்ப்புடனமைச்சர்கூடிவேந்தன்றன்றுயர்தவிழ்த்தார்
செப்பினூர்தாதிமார்கள் செண்பகவல்லிக்கப்போ
கொப்பெனவிழுந்துமன்றில் கோதையும்புலம்புவாளே.

### செண்பகவல்லியம்மன் புலம்பல்.

தரு-இ-ம்-நீலாம்புரி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

என்னசெய்வேனிவ்வினைக்கு — இந்தவிதிவந்ததைநான்
எவருடனேபோயுரைப்பேன் — சிவனே
மண்ணுலகிலென்றுமுள்ள மானிடர்போல்வாழ்வோம்வோமென்று
மனதிலெண்ணிநானிருந்தேன் — சிவனே
அந்தமாய்த்தவமிருந்து — அன்னசொர்ணதானமீய்ந்து
அரனருளால்பெற்றேனையோ — சிவனே
சந்ததியைக்காட்டில்விட்டுத் — தாரணியில்நானிருந்து
எந்தவிதம்வாழ்வேனையோ — சிவனே
அத்தனேவிசுவநாதா — ஆலன்னலேதீர்த்தவரம்
அம்பமாகப்போச்சுதையோ — சிவனே
பெற்றும்பலனில்லாமல் — பிள்ளையைநான்காட்டில்போடப்
பேதைமனந்துணிவேனே — சிவனே
செய்தவினைகளுமுன்னாள் — சேர்ந்தபாவமுமுந்தன்
சித்தமறியாததுமுண்டோ — சிவனே
வையகத்தையாளுதற்கு — மைந்தனில்லாப்பாவியானேன்
மண்ணிலிருந்தென்னபலன் — சிவனே

### விருத்தம்.

மங்கையிந்தவிதம்புலம்பி மூர்ச்சையாகி
மாநிலத்திலிமிசைவிழுந்த மயிலேனே,
தங்கையருந்தாதியருந் தோழிமாருந்
தாங்கியெடுத்துறவனைத்துத் தழுவிமாதர்
கொங்கலர்பன்னீர்தெளித்து வீசிப்பின்னுங்
கோதையர்க்குத்தேறுதலை கூறும்போது
திங்களுதையம்போலச் சுதனைப்பார்த்துத்
தியங்கிமன்றில்மயக்கிவிழுந் தலறினனே.



தரு-இ-ம்-ஆனந்தபைரவி-அடதாளம்.

கண்ணிகள்.

என்னசெய்வேனையோமகனே — என்கண்மணியே-வேத
னிதற்கோவுனையமைத்தா — னென்வயிற்றன்னிலே(என்ன)
மண்ணுலகாள்வாயென் றிருந்தேன் — எண்ணியிருந்தேன்-இப்போ
வனத்திலுந்தனைப்போட்டு — மனந்தரிப்பேனோ(என்ன)
உதவிநமக்குண்டென்று யிருந்தேன் — பாவி-யிருந்தேன்-நான்
உயிரோடுனையிழந்து — உலகிலுய்வேனோ(என்ன)
பதவிபெறுவோமென்று நினைந்தேன் — மனதில்நினைந்தேன்-இந்தப்
பாரிலில்லாதகொடும் — பாவிபோலானேன்(என்ன)
மலடிருந்தேன்பாவிவெகுநாள் — ஐயோவெகுநாள்-பெற்றும்
வளர்த்தேனில்லையெந்தன் — மனங்களிகூற(என்ன)
தலையாதகவலைகொண்டேங்கி — மன-தேங்கி-பாரில்
குழலவோபிறந்தி — யார்சொல்மொழிகேட்டு(என்ன)
மண்ணாசைபெண்பொருளாசை — பொருளாசை-யாரு
மறந்தாலுஞ்சுத — னாசைமறக்கப்போகாதே(என்ன)
என்னுதெல்லாமனதெண்ணி — மனதெண்ணி-வயி
றெரியுதேயனலில் — நெய்சொரியதுபோலே(என்ன)

### பொதுவிருத்தம்.

மைந்தனையெடுத்துப்பார்த்து மலர்க்கண்ணிலொத்திக்கொண்டு
எந்தனற்புதமேகண்ணே யெவ்விதமுனையெடுத்து
அந்தமாய்வனத்திற்போட அங்கமும்பொறுக்குமோடா
மைந்தனேயென்றுமாது மறுவிதம்புலம்புவாளே.

இதுவும் செண்பகவல்லிபுலம்பல்.

தரு-இ-ம்-முகாரி.

கண்ணிகள்.

ஐயோயெந்தன்மகனே-உன்னை — யருங்கானிலேபோட
ஆறுமோமனந் தேறுமோ வெந்த — னக்கமுருகிடுமே

பையா டரவணிந்த-சிவன் பாதமதைப்பணிந்து
பரிவாய்த்தவஞ்செய்துன்னைப் பயின்றேனிந்தவிதிக்கோ
கண்ணே கண்ணின்மணியே-சுவை கனியேகட்டிக்கரும்பே
உன்னை கண்காட்சிக்கோபயின்றேன் பழி காரிபுவிமீதே
முன்னாள்செய்தவினையோ-வினை முடிவோபழியிதுவோ
அந்த-முதல்வனெனக்களித்துயிந்த மோசஞ்செய்யலாமோ
பிள்ளையற்றபாவி யென்று பேருலகோரேசப்
பேதைமனந் துணிந்திடவே பிரமன்விதித்தானோ
வள்ளைச்செவிக்கின்பமெனப் பிள்ளைமொழிகேட்டால்
மறைவேதமுங்கூறுவதே மார்க்கமுண்டாயிருக்க
பெற்றசுதனிருந்து பிந்தப் பேருலகாளாமல்
பெருங்கானிலே எறிந்திடவும் பிரமன்விதித்தானோ
கற்றமறையோரேயெந்தன் கண்மணியாஞ்சுதனை
கொண்டு-காட்டில்வைக்கும்போதுபுலி காடிதின்றுவிடுமே
பசுவைக்கொன்றதோஷமறைப் பரிகரித்தபோதும்-பெற்ற
சிசுவைக்கொன்றதோஷமது தீராதென்னசெய்வேன்
வசுவெழுந்திவளர்த்தவுடல் வபூ திதந்தபோதும்-இந்த
மகவைக்காட்டில்வைத்ததோஷ மறுத்தாச்சுத்தமாமோ
என்னசெய்வேனிவ்விதிக்கு எந்தன்பாக்கியமோ
மன்னன்மனஞ்சலித்துப்பெற்ற மகவைக்காட்டில்போட்டால்-நான்
மங்கையதைத்தடுக்கநீதி மார்க்கமோதாதிமாரே

விருத்தம்.

மைந்தனைப்பார்த்துப்பார்த்து வயிற்றினிலறைந்துகொண்டு
அந்தரத்திடியைப்போல அலறியேமண்மேல்வீழ்ந்து
கந்தரத்தொலிவேருகக் கதறியதேவிதன்னை
மந்திரிமுதலாயுள்ள மறையவரமர்த்தினரே.

இதுவுமது.

அலறிடவேண்டாமம்மா ஆதியில்வேதன்தாக்குந்
தலைவிதிதன்னையாருந் தவிர்த்திடமுடியாதென்று



விலையுருமதிக்கொணாத விசிதத்தாம்பாளந்தன்னில்
மலைவுடன்பாலன்றன்னை வைத்துப்பல்லக்கில்சேர்த்தார்.

இதுவுமது.

பாலகன்றனையெடுத்து பல்லக்கின்மீதுவைத்து
ஆலகாலத்தையுண்ட அண்ணலார்கிருபையென்று
கால்தூதர்கள்போல்சேனை கன்னியர்சூழக்காட்டில்
சாலவேகொண்டுசென்று தனிப்படவைத்திட்டாரே.

இதுவுமது.

வனத்தினில்பாலன்றன்னை வைத்தவர்மனங்கலங்கி
சனத்தினில்நகரஞ்சென்று காசிமன்னவர்க்குரைத்து
இனத்துடனதிக்குச்சென்று எல்லோரும்ஸ்நானஞ்செய்து
மனத்துடன்விபூதிசேர்ந்து வாகுடனிருந்தாரன்றே.

இதுவுமது.

மைந்தனும்வனத்திருந்து வயிறதுபசியெடுத்து
கந்தரத்தொலிபாராட்டிக் கதறியேயழுதசத்தம்
ஐந்தலைநாகங்கேட்டு அருகில்வந்துபசரித்து
விந்தையாய்வெயில்மறைத்து விஷவராவிருந்ததன்றே.

கட்டியக்காரன்-வசனம்.

இந்தப்பிரகாரம் ஆரண்யத்திலே வீரமரத்தடியில் தங்கத்தட்டோடு அமர்ந்திவந்த பாலனுக்குப் பசியெடுத்து அழுதசத்தத்தைக் கேட்டு புற்றிலிருந்த ஐந்தலைநாகம் பரிதாபத்துடன் குழந்தையினருகில்வந்து உபசரித்து வெய்யில் படவொட்டாமல் தனதுபடத்தால் முகத்தை மறைத்துக்கொண்டிருக்கும்போது ஈஸ்பரன் கிருபையால் கோனேரிப்பட்டணத்திலிருக்கும் மாதியச்சின்னான் தேவியானவிள் அந்தவனத்திலே ஆவாரம்பட்டை வெட்டிக்கொண்டுபோக வருகிறவிதங்காண்க.

சக்கிலிச்சிவருகிற விருத்தம்.

காதில்ரத்நவோலைமின்னத் திலதந்துன்னக்
கைவளைகள்கலகலென்னச்சரக்குலுங்க
சோதிமயமாயிடையில் சேலைமின்னத்
தடியிடையிலொட்டியாணந் தகதகென்ன

நீதியுள்ளஒதிமம்போல் நடைநடந்து
நிமலிசக்கதேவியம்மாள் பாதம்போற்றி
மாதியச்சின்னான்தேவி கொடுவாள்கொண்டு
வனத்திலாவாரைவெட்ட வருகின்றாளே.

---

தரு-இ-ம்-மத்தியமாவதி-திரிபுடைதாளம்.

பல்லவி.

வந்தாள்மாதியச்சின்னான்தேவி-விந்தையதாக
வந்தாள்மாதியச்சின்னான்தேவி

அநுபல்லவி.

செந்தாமரைக்கண்ணாட்டி செயங்கொள்பொம்மனாட்டில்
திருமதிமுகமதா நகநகநகெனவே
வரிவிழிகயலென வையகங்கொண்டாட (வந்தாள்)

சரணங்கள்.

நடைகண்டன்னமின மெனக்கூட-நடனங்கண்டு
நவினமயிலும்வினை யாட-பசும்பொன்குட
மென்திருகொங்கையுங் குலுங்கப்-பணிபலுங்க
கொஞ்சியாஞ்சித மிஞ்சியமொழியுடன்
வஞ்சியிவள்மாதியன் மனையாளாமென (வந்தாள்)

நீண்டபுருவவிழி காட்டித்-தகதகென்ன
நெற்றிகளில்திலகந் தீட்டி-விழிமைபூட்டி
தீண்டாவிளங்கொடியோ ஜெகமோகினியோவென்னச்
செக்கையிலணிவளை யிக்கிதவொளிசெய்ய
மங்கையவள்கையி லுங்கொடுவாளுடன் (வந்தாள்)

மைந்தன்கவலைநெஞ்சி லெண்ணி-சக்கதேவியின்
செஞ்சரணத்தைத்துதி பண்ணி-ரஞ்சிதமுடன்
கொஞ்சுங்குயில்போல்பேசி கோதைசுகந்தம்பூசி
கொடுநரிபுலியொடு காடிகள்வாழுங்
கடுவனநாடியே கன்னிசொர்குசுடன் (வந்தாள்)

---



விருத்தம்.

மாதியச்சின்னான்தேவி மனதினில்கவலைகொண்டு
சோதனையுடனேசாதித் தொழில்செய்யப்பட்டைவெட்டி
நீதியாய்வந்தபோது நிறைந்தகானகத்திலன்று
ஆதியோனருளால்மைந்த னழுதிடுங்குரல்கேட்டானே.

இதுவுமது.

கேட்டவள்திரும்பிக்காட்டைக் கிட்டியேதேடும்போது
வாட்டமதாகவீர மரத்தடிதனிலிருந்து
நாட்டமில்லாமற்பாலன் நயத்துடன்புலம்பக்கண்டு
ஓட்டமாயோடிமாது உவந்தெடுத்தணைத்திட்டாளே.

தரு-இ-ம்-காம்போதி-சாப்புதாளம்.

கண்ணிகள்.

மைந்தனையெடுத்தணைத்து மாது மார்பில்
வைத்துமுத்தமிட்டாளந்தப்போது
சுந்தரர்கிருபையருள் தங்கி-சின்னான்
தோகையினமுர்தகுடம் பொங்கி

மிஞ்சியேதார்விட்டமுர்த மூறப்-பாலன்
வேண்டியேகுடித்தான்பசி தீர
கொஞ்சியேபாலனைமார்பில் சாத்தி-தங்கள்
குலதெய்வத்தைப்பணிந்துபோற்றி

கானகத்திலென்கவலை போக்கும்-சிவ
காரணிசக்கதேவிநீ யாக்கும்
நானுனையென்நாளுமற வேனே-சுதன்
நற்புனத்தில்ஈந்தவளைத் தானே

என்றுரைத்துமாதியன்பெண்ணுளும்-சுதனை
ஏந்தியேநடந்தாளேமின் னாளும்
அன்றுவெட்டும்பட்டைதனைவேண்டாள்-சிரித்
தாகமகிழ்ந்தவள்வனத்தை மீண்டாள்

---

வீ

மாதியச்சின்னான்வருகிற-விருத்தம்.

மைந்தனையெடுத்துக்கொண்டு மாதியச்சின்னான்தேவி
சந்தோஷமுடனேகாட்டைத்தாண்டியேவருகும்போது
விந்தையாய்ப்பணிகள்பூண்டு விசித்திர நடைநடந்து
சிந்தையில்கோபங்கொண்டு சின்னானும்வருகின்றானே.

தரு-இ-ம்-மத்தியமாவதி-ஆதிதாளம்.

பல்லவி.

வந்தானேமாதியச்சின்னான்-மங்கையைத்தேடி
வந்தானேமாதியச்சின்னான்

அநுபல்லவி.

அந்தமாய்க்கையினில்தடி ஆயுதங்களைப்பிடித்து
மொந்தையில்கள்ளுஞ்சாராயம் விந்தையதாகக்குடித்து(வந்)

சரணங்கள்.

சென்னிதனி லுருமாலை கொண்டையுங்கட்டி-நல்ல
உன்னிதமாகவிருது வெண்டையம்பூட்டி
வன்னிபோல்விழிமிரட்டி வாயதட்டிலுருட்டி
கன்னிகைதன்மனையாளைக்காணமென்றெங்குந்தேடி (வந்)

கானகத்தினிலாவாரம் பட்டை-வெட்டவேசென்று
போனவளின்னேரமட்டுஞ் சட்டை-கெட்டுதோவென்று
தானவளைத்தடிகொண்டு நாலடியடிப்பேனென்று
வீணிலேகோபமேகொண்டு மீசையைமுறுக்கிக்கொண்டு(வந்தா)

ஓடிநாடிமெங்குந்தேடிக் கால்கள்வலித்து-வந்
தோரிடத்திலேயிருந்து உள்ளஞ்சலித்து
நாடியேவனத்தில்சென்று நானவளை அங்கேகண்டு
கூடியே அழைத்துக்கொண்டுகொப்பெனப்போகலாமென்று(வந்தா

---

விருத்தம்.

வாடியேமனமுநொந்து மாதியச்சின்னானெங்குந்
தேடியேவருகும்போது சென்றுகானகத்தில்நின்று



கோடிசூரியனைப்போலுங் குழந்தையைக்கையிலேந்தி
நாடியேமனையைநோக்கி நலமுடன்வரக்கண்டானே.

இதுவுமது.

கண்டவனோடிச்சென்று கைத்தடிதன்னையோங்கி
தண்டகாவனத்துக்கேகிச் சீக்கிரம்வந்திடாமல்
இன்றைக்கிந்நேரமட்டு மென்னதான்செய்தாயென்று
தெண்டனையுடனேமாதியச் சின்னானுங்கேட்கின்றானே.

மாதியச்சின்னானுக்கும்-சக்கிலிச்சிக்கும் தர்க்கம்.

தரு-இ-ம்-பூபாளம்-அடதாளம்.

கண்ணிகள்.

இன்னேரக்கானகத் தென்னசெய்தாயடி
பெண்ணரசேசொல்வாய் பேதமில்லாமல்

சக்கிலிச்சிசொல்-தரு.

பேதகமேதுகாண் நாதனேயென்மட்டுந்
தோனவார்த்தைகள் செப்பிடவேண்டாம்

மாதியச்சின்னான்

செப்பிடவேண்டாமென் றொப்பிதமாய்ச்சொல்லுந்
தேவியெந்தனுட கோபம்பொல்லாதே

சக்கிலிச்சி

கோபமேன்செய்கிறாய் கொற்றவாயென்மீதில்
லாபமேகிடைத்தது நம்க்கிப்போகணவா

மாதியச்சின்னான்

கிடைத்தலாபமென்ன கிள்ளைவாழ்புனத்திலே
உடைத்துவதையெனக் குரைசெய்வாய்பெண்ணே

சக்கிலிச்சி

உரைசெய்வதேதுகா ணுந்தஞ்மனதின்படி
நிறைவேறிற்றுஇந்த நீள்குவஞ்பாரும்

மாதியச்சின்னான்

பாருமென்றுரைசெய்த பாவையேவனத்தினில்
கூறுமதிபோலிந்த குழந்தைதானேது

சக்கிலிச்சி

எதிந்தக்குழந்தையென் றெண்ணுதேகணவா நான்
நிதில்லாப்புனத்தினில் சென்றுகண்டெடுத்தேன்

கொச்சகம்.

கண்டெடுத்தேனென்றேதுங் காரிகையேநமக்காக
அண்டர்பிரானுண்டுசெய்து அவ்வனத்தில்போட்டாரோ
மண்டலத்தோர்கொண்டாடு மகவையெந்தன்முன்னாகக்
கொண்டுவாவென் றமுத்தக் கொடுத்துமவன்கூறுவானே.

---

மாதியச்சின்னான்சொல்லல்.

தரு-இ-ம்-சௌராஷ்டிரம்-திரிபுடைதாளம்.

பல்லவி.

இந்தக்குழந்தைவனத்திலிருந்த தென்னகாரணமகிமையோ

அனுபல்லவி.

அந்தரம்வாழுமிந்திரதேவ ரருளில்தரித்தபாலனோ
அன்னமே மிகு சொர்னமேநமக்
கின்னமேதுய மென்னுவதேதடி (இந்தக்)

சக்கிலிச்சிசொல்லல்

சரணங்கள்.

என்னகாரணமகிமையோவென்ற எந்தன்பிராணநாதனே
வன்னமதாகியசுதனில்லாமல்நாம் வருத்தமாகிடக்கண்டுமே
வாவிரும்ச்சக தேவியாள்நமக்
கோவியமெனத் தாபித்ததுவை (என்ன)

மாதியச்சின்னான்

சக்கிதேவியினருளாலுதவுஞ் சுந்தரியானபாலனை
பட்சிகள்மிருகசாதிகள்வாழும் பரும்புனத்திலிவிடுவதேன்
பாரமோ என்ன கோரமோசெய்த
நேரமோயினை னாமோ பெண்ணே (இந்த)

சக்கிலிச்சி

வனத்திலிருந்தபாலனெனவே வசைகள்கூறுவதாருகாண்
தனத்திலிருந்தபொருளாஞ்சுதனைத் தாங்கியேகையில்வாங்கி
[யேமுத்தந்



தாக்கியே அல்லல் போக்கியேதுயர்
நீக்கவேவந்த பாக்கியத்தைநீ (என்ன)

விருத்தம்.

கொஞ்சியேபாலன்றன்னைக் கொடுத்திடமாதுவாங்கி
நெஞ்சினிலணைத்துக்கொண்டு நீள்மனைதனக்குச்சென்று
மிஞ்சியகவலைதீர்ந்து மிகவுமேமகிழ்ந்துசின்னான்
வஞ்சியுந்தானுமாக மைந்தனைவளர்க்கின்றாரே

இதுவுமது.

புத்திரன்றனக்கன்பாகப் போதிளவெந்நீராட்டி
நெத்தியில்வெண்ணீறிட்டு திலக்காப்புத்திலதந்தீட்டிப்
பத்தியாய்மகவைத்தாங்கிப் பாலமுதூட்டிப்பொன்னின்
சித்திரத்தொட்டிலேற்றிச் சிறந்ததாலாட்டினாரே.

தாலாட்டுதல்.

தரு-இ-ம்-நீலாம்புரி-ஆதிதாளம்.

ராரிரரோ-ராரிரரோ-ராரிரரோ-ராரிரரோ.

அரவணையில்கண்துயிலும் ஆயர்குலமாயவனோ
சரவணையில்வந்துதித்த சண்முகனோகண்வளரீர் (ராரிரரோ)

தேடாத்திரவியமோ தெவிட்டாக்கனியமுதோ
நாடாண்மைகொண்டுவந்த தளஞ்சியனோகண்வளரீர் (ராரிரரோ)

கவலையாயாவாரம்பூக் கானில்வரும்போதெனக்கு
சிவனருளால்வந்துதித்த செல்வனேகண்வளரீர் (ராரிரரோ)

ஆர்பெற்றகண்மணியோ இந்த ஆரணியந்தன்னில்வந்து
சீருடனேயென்கவலை தீர்த்தோனேகண்வளரீர் (ராரிரரோ)

தெள்ளமுர்தேதேனே தெவிட்டாத்திரவியமே
(என்) பிள்ளைகலிதீர்க்கவந்த பிரபலனேகண்வளரீர் (ராரிரரோ)

நாகங்காடிபுலி நரிகரிகள்சூழ்வனத்தில்
பாகமுடன்வீற்றிருந்த பாக்கியமேகண்வளரீர் (ராரிரரோ)

பிள்ளையில்லையென்றெனது பேதைமனம்வாடுவதை
வள்ளலறிந்துதந்த மகவேநீகண்வளரீர். (ராரிரரோ)

வாசம்புகழுறைந்த வாத்தியையீனுட்செந்த்தா
தாசனுரைகேட்டுகந்தென் தங்கமேகண்வளரீர் (ராரிரரோ)

விருத்தம்.

பாலகனைத்தாராட்டி யெடுத்துஅன்பாய்ப்
பருமுடிக்குயெண்ணெயிட்டுவெந்நீராட்டி
நீலவிழிகண்களுக்கு மையுந்தீட்டி
நெற்றிதனில்நீறணிந்து திலதஞ்சாற்றி
வாலவிளம்பிறையதுபோல் சுட்டிகட்டி
வளர்கைக்குப்பொன்கொலுசுகாப்புமிட்டு
கால்முதலாய்சிரம்வரைக்கு மமைந்ததாகக்
கனகத்திலுல்பணிகள் பூட்டினாரே.

இ-ம்-மோகனம்-சாப்புதாளம்.

கண்ணிகள்.

பொன்னின்பணிகள்செய்து வன்னக்குழந்தைமெய்யில்
பூட்டினர்-பூட்டினர் எங்கும்.
புகழுமிடையில்வெள்ளிச் சதங்கைபொன்னரைஞாணுஞ்
சூட்டினர்-சூட்டினர்
அன்னம்போல்வருங்காலில் சிலம்புதண்டைகொலுசும்
அணிந்திட்டார்-அணிந்திட்டார்
காதில்ரத்தினவொட்டுக் கடுக்கன்முருகுபச்சை
தரித்திட்டார்-தரித்திட்டார்
அஸ்தகடையமுடனே தச்சக்காப்புகொலுசு
மணிந்திட்டார்-அணிந்திட்டார்
மாதியன்நாளொரு வர்ணமாய்ச்சுதனைத்தான்
வளர்த்திட்டான்-வளர்த்திட்டான்
மகனுக்குத்திருநாமம் வைத்துவீரப்பனென்
றழைத்திட்டான்-அழைத்திட்டான்
பெற்றபிள்ளைதனிலும் பிரியமாய்ப்பாலனை
பார்த்திட்டான்-பார்த்திட்டான்-அந்தப்



பிள்ளைக்குவளர்ந்து பருவமாகிமனம்
புகழ்ந்திட்டான்-புகழ்ந்திட்டான்
சித்தத்திலளவற்ற சிறப்புடன்கூடியே
வளர்த்திட்டான் வளர்த்திட்டான்-அந்தச்
செல்வனையோதிடச்செய்விக்கவேயெண்ணி
மகிழ்ந்திட்டான் மகிழ்ந்திட்டான்

உபாத்தியாயர்வருகிற-விருத்தம்.

மாதியச்சின்னானை மகனெனவளர்த்தைந்தாண்டில்
ஓதிலாப்பள்ளிக்கூடத் திருத்திடவேணுமென்ன
வேதியர்நாள்குறித்து விளம்பியபடியேவித்தை
ஓதிவைத்திடவே நல்ல உபாத்தியார்வந்துற்றாரே.

கரு-இ-ம்-சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

வாத்தியார்வந்தாரே-ஓதிவைக்க-வாத்தியார்வந்தாரே.

அனுபல்லவி.

வாத்தியார்வந்தாரே நேத்தியதாகவே
மூர்த்திகணேசனை போற்றிசெய்யுந்தமிழ் (வாத்தியா)

சரணங்கள்.

நெற்றியில் நீறணிந்து-சிவபதம்
நேசத்துடன் பணிந்து
வெற்றிபெறத் துணிந்து-நீர்க்காவி
வேஷ்டியிடைக் கணிந்து
பத்தியுடன்தலைப் பாகையணிந்துபின்
சத்திபிரம்பெழுத் தாணிகையில்கொண்டு (வாத்தி)
நீதிநன்னா அவையத்த-ஹரிமுதல்
ஓதிடநாள் குறித்து
சோதிடநூல் விரித்து-கணக்குகள்
ஆதியுள்ளோர்க்குரைத்து
மாதியச்சின்னான் வளர்த்திடும்பாலனுக்
கோதிக்கொடுத்து உடுவுறப்பெற்றிட (வாத்தி)

வேடிக்கையாய் பேசி-பிரம்புகொண்
டோடிக்கைகால் வீசி
யாடிக்கையாய் நாசி-பொடிபட்டை
நாடிக்கையால் ஸீசி
கூடியபாலகர் கொட்டமடக்கியே
பாடித்தமிழ்சுயம் பாலித்திடும்நல்ல (வாத்தி)

—※—

மதுரைவீரன்வருகிற-விருத்தம்.

சிந்தையுமகிழ்ந்துசின்னான் தேவியுந்தானுங்கூடி
மைந்தனைப்பள்ளியோத வைத்திடவேணுமென்று
சந்தோஷமுடனழைக்கத் தந்தைமாதியன்சொல்கேட்டு
விந்தையாய்மதுரைவீரன் மேதினிதனில்வந்தானே.

தரு-இ-ம்-கலியாணி-அடதாளம்.

பல்லவி.

வீரையன்வந்தானே-துரைமுத்து-வீரையன்வந்தானே *

அனுபல்லவி.

வீரையன்வந்தானே மேதினிதன்னிலே
ஓராந்திலில்பள்ளி யோதிடவே நல்ல(வீரையன்)

சரணங்கள்.

தங்கப்பணி துலங்க-திருமுகஞ்
சந்திரன்போ விலங்க
செங்கைதனிலணி சிங்கவளைமணி
எங்குமிலங்கிடப் பொங்கமுடன்முத்து (வீரையன்)

தண்டைசிலம் பணிந்து-இடையினில்
தங்கக்கொடிப் புனைந்து
மண்டலத்துள்ளோர்கள் மகிழ்ந்துகொண்டாடவே
கண்டசரப்பணி கெண்டிதுலங்கிட(வீரையன்)

காதில்கடுக்கன் மின்ன-கழுத்தினில்
கண்டசரங்கள் துன்ன
மாதியச்சின்னான் வழுத்தியசொற்படி
நீதியுடன்பள்ளி ஓதிடவேதுள்ளி(வீரையன்



சக்கிலியன்சொல்-விருத்தம்.

வந்திடுஞ்சுதனைப்பார்த்து மாதியன்மகிழ்ந்துசொல்வான்
எந்தனற்பொருளேகண்ணே யென்னுடமகனேகேளாய்
வந்தயிக்குருவின்பாதம் வணங்கியேநமஸ்கரித்து
சிந்தையிலறிவுதோன்றச் செப்பமாய்ப்படித்திடாயே.

வசனம்.

அடாவாடா என்கண்மணியாகிய மகனே இதோ நமதுகுருவாகிய உபாத்தியாயர் வந்திருக்கிறார் அவருடைய பாதத்தில்விழுந்து நமஸ்கரித்துக்கொண்டு பள்ளிக்கூடத்திலேயிருந்து வாசித்துக்கொள்ளுமப்பா மகனே.

பொதுவிருத்தம்.

மாதியனுரைத்தபடிகேட்டு மதுரைவீரன்ஓமெனவே
ஆதிப்புராணமுதல்துவக்கி அருணைப்புராணம்வரைப்படித்து
நீதிச்சிலம்பம்வில்பரிட்சை நிகரிலாமற்கற்றறிந்து
சோதியருளால்வளர்ந்துவய தொருபத்தாகியிருந்தனனே.

கட்டளைக்கலிப்பா.

மைந்தனுக்கு வயதுபத்தாகிடும்
வாலிபத்தையறிந்திடுபேர்களும்
சிந்தையில்துயர்நீங்கிச்செழிப்பதாய்
சேயனுக்குஅறுசுவையன்னமும்
விந்தையாகப் படைத்திடவுண்டபின்
வீரன்கையினில் வில்லம்புமேந்தியே
அந்தமானவனத்தினில் வேட்டைசென்
றாட்வேயெண்ணி வீரையன்வந்தனன்.

மதுரைவீரன்வருகிற விருத்தம்.

ஆதியினிற்காசிநக ராளும்வேந்தன்
அருந்தவத்தால்பயின்று அருங்கானிற்போட
நீதியுடன்சக்கிலியச் சின்னான்தேவி
நீள்கானிலாவாரம் பட்டைவெட்டச்

சோதனையாய்ச்சென்றவள்தானெடுத்துவந்து
சுதனெனவேமுலைகொடுத்தருத்தழுவிக்கொஞ்ச
மாதியச்சின்னானகத்தில் வளர்ந்தமுத்து
மதுராபுரித்துரையும் வருகின்றானே.

தரு-இ-ம்-கலியாணி-ஆதிதாளம்.

பல்லவி.

மதுராபுரித்துரைவந்தான்-எனையாட்சிக்கும்
மதுராபுரித்துரைவந்தான்

அநுபல்லவி.

புவிராசராசர்துதி பண்ணிப்பணியுநல்ல
நிதியோர்ட்டனேகசுதன் திமிஷப்பொழுதிலருள் (மதுரா)

சரணங்கள்.

சந்திரகாந்தியுருமாலை கொண்டையுங்கட்டி
சரிகைச்சாதராமுத்துச் சாலர்கலிக்கிபூட்டி
சுந்தரமானமுகஞ் சந்திரன்போல்விளங்க
துள்ளுமீசைமுறுக்கி யெல்லோரையுமயக்கி
இந்தவுலகிலுள்ள யெந்தமானிடருக்கும்
சொந்தமாகியதேவன் சுந்தமணிந்தமுத்து (மதுராபுரி)
தாம்தாம்தகஜெம்தரிகிட தகஜெம்சேம்செக-நாதரிதிந்தரி (மது)

மதுரைவீரன் வேட்டையாடுகிற-தரு.

இ-ம்-காம்போதி-அட்டதாளம்.

கண்ணிகள்.

வேட்டைகளாடிடவேணுமென்று கண்டு
வில்லும்அம்புவில்லுங்கையில் கொண்டு
கர்ஷகமிருந்தமதுரைவீரன் கையில்
சந்திராயுதமெடுத்தான் தீரன் *
சக்கரம்வளைதடிகட் டாரி பார்க்கு
தான்சொருகினானிடையில்சூரி *
திக்கிலுள்ளபேய்முனிகளஞ்ச துஷ்ட
தேவதைகதவடைத்துக் கெஞ்ச *



வீரையனுக்கானகத்திற்சென்றான் அங்கே
வேக்கைகபுலியாளிகளைக்கண்டான் *
தீரனும்அகட்டித்தடை தட்டி வாளால்
சிங்கமுதல்யாளிகளை வெட்டி *
கானகத்தில்யானையைப் பிடித்து வீரன்
கையினலதின்கொம்பையொடித்து *
வானகத்தில்போவெனவே யெத்தி புலி
மானுகளையோடிக்கையால் குத்தி *
அண்டாண்டபட்சிகளைச் சாடி மயி
லன்னங்கள்பிடித்துவிளை யாடி *
வண்டமுனிகானகத்தை விட்டு வீட்டில்
வந்து அன்னம்பால்பழஞ்சாப்பிட்டு *
மாதியனுரைத்தபுத்தி கேளான் சின்னான்
மனைவியாதேனுஞ்சொன்னால் தாளான் *
சேதியாலுறவணைத்து மாது வீரன்
செல்வமாய்மகிழ்ந்திருக்கும்போது *

பொதுவிருத்தம்.

காட்டினில்வேட்டையாடி கடும்புலிசிங்கம்யாளி
தாட்டிகமுள்ளயானை தன்னையும்வதையேசெய்து
நாட்டினிலெவர்க்குமெத்த நலமுள்ளபிள்ளைபோல
வீட்டினில்வந்துவீரன் மெய்ப்புடனிருக்கின்றானே.

இதுவுமது.

இப்படியிருக்கும்நாளி லியல்பொம்மனுப்கனின்ற
செப்பிளமுலையாள்பொம்மி திரண்டனள்ஊருக்கப்பால்
மெய்ப்புடன்குடிசைகட்டி வேந்தனும்வைப்பதாகச்
செப்பிடவெழுந்துபொம்மி சீக்கிரம்வருகின்றாளே.

பொம்மியம்மாள்வருகிற-விருத்தம்.

மலைமகளிவள்தானென்ன மாதர்கள்நெருங்கிச்சூழ
கலைமகளிவளோவென்று காசினியோர்கள்வாழ்த்த

அலைகடல்சூழ்கோனேரிக் கதிபன்பொம்மண நாயக்கன்
வலதுடன்பயின்றமாது மங்கைபொம்மியும்வந்தாளே.

தரு-இ-ம்-கலியாணி-ஆதிதாளம்.

பல்லவி.

எங்குமுன்னோர்புகழுந் தங்கன்தொட்டியர்குல
மங்கைபொம்மிப்பெண்வந்தாளே.

அனுபல்லவி.

சங்கையில்லாதமாதர் தளத்துடனதிருப
திங்கள்முகவதனந் திரிலோகமும்விளங்க
தாகிட தக்கிட தகசேம் சேம்தரி தத்தளங்குசெணுதகதிமிதோமென
எங்கும்

சரணங்கள்.

செங்கையிலணிவளை சரிகைகங்கணங்களும்
திவ்வியமான பணிகளும்
நங்கையரிருபுறங் கவரிசாமரைவீசும்
நளினமுஞ்சுக செலிப்பும்
தங்கமயமாய்மேனி தகதகென்றொளிசெய்ய
மங்களத்துடன்மாதர் மகிழ்ந்தெச்சரிக்கைகூற (எங்கும்)

தோகைமயிலின்சாயல் குலுக்குமுகத்தளுக்கும்
சுந்தரமுள்ள மெலுக்கும்
தேகமினுக்குங்கோல விழிகளுந்தேன்மொழியுஞ்
சிந்தூரப்பொட்டி னொளிவும்
நாகரீகமுமபி நயமுமொய்யாரமும்
சாயல்மயிலன்னம்போல் தானேநடனஞ்செய்து (எங்கு

நடனசங்கீதமேள முடனேமிகுவுல்லாச
நடையும்வெண் முத்தின்குடையும்
கடினமொழியுங்கயல் விழியும்பசுங்கிளியுங்
கருணைதக்கிய மதியும்
திடமுமினியசுக செயமுமெவர்க்குமின்பதி
தடமருளியகும்ப ஸ்தனங்களதுகுலுங்க (எங்கும்

—*—



விருத்தம்.

நடனசங்கீதமேள நாட்டியத்துடனேமாதர்
இடவலஞ்சூழப்பொம்மி யெழுந்தவள்குடிசைசென்று
திடமுடனிருக்கும்போது தீரன்பொம்மண நாயக்கன்
மடமயில்தனக்குக்காவல் வைத்திட நினைந்திட்டானே.

காவல்வைத்திடவென்றெண்ணிக் கம்பளப்பொம்ம நாயக்கன்
ஆவலாய்ச்சின்னான்தன்னை யழைத்தெந்தன்மகட்கு நீபோய்
சாவதானமதாய்த்தோஷ சஞ்சலம்வந்திடாமல்
காவல்காத்திடுவாயென்று கருத்துடனுரைசெய்தானே.

உரைசெய்யக்கேட்டுச்சின்னா னுவந்தெழுந்தகத்தில்வந்து
விரைவுடன்விருதுபூண்டு வில்லம்புகையிற்கொண்டு
பிறைநுதலழகின்மாது பேடைபொம்மியைக்காக்கத்
துரைபொம்மனுக்கன்சொன்ன சொற்படி நடந்துசென்றான்.

சென்றவன்குடிசைமுன்போய் தேன்மொழிபொம்மியாளை
நன்றுடனிருப்பத்தெட்டு நாளுமேகாக்கும்போது
சென்றிடுமொருநாள்தன்னில் செகமெலாமிருண்டுமேகங்
கொண்டுமேமழைதான்பெய்யுங் கொடுமைகண்டறிந்திட்டானே.

மனதினிற்கவலைகொண்டு மாதியச்சின்னானப்போ
தனதுள்ளமகனைப்பார்த்துத் தளர்ந்துமேயுரைக்கக்கேட்டு
உனதுடமகனிருக்க உள்ளத்தில்கவலைவேண்டாம்
வினவிநீயெனக்கிப்போது விடைகொடுத்தனுப்புமென்றான்.

விடைகொடுத்தனுப்புமென்ற வீரையன்மொழியைக்கேட்டு
திடமுடன்சின்னான்மெத்த சிந்தையில்மகிழ்வுகொண்டு
தடையறச்சென்று அந்தத் தையல்பொம்மியைக்காத்து
அடவுடன்வருவாயென்று அனுப்பிட நடந்திட்டானே.

மதுரைவீரன் பொம்மியம்மாள்காவலுக்குவருகிற

தரு-இ-ம்-ஆனந்தக்களிப்பு.

தன்னதன-தனதந்தனனா-தன-தானதன-தனதந்த னாதந்தனனா.

மாதியனுரைத்தமொழிகேட்டு வீரன்
மனதினில்சந்தோஷமாகவேயெழுந்து
நீதியுடனன்னம்புசித்து மருக்கில்
நிலைபெற்றசல்லடங் கச்சையுங்கட்டி
சந்தனம்புனுகுமலர்சூடி சேகில்
சந்திரகாந்தியுருமாலை சரிகையுங்கட்டி
அந்தமுடன்முத்துக்கடுக்கன் காதி
லணிந்துமேமுருகுதனை யழகாகப்பூட்டி
கண்டசாமுடன்முத்துமாலை நல்ல
கனகநவமணிமாலை கழுத்திலேபூண்டு
வண்டருடநெஞ்சக்கலங்க முறுக்கு
வளையுடன்முகதாரி வச்சிரவளைபூண்டு
கைவிரலில்கணையாழிபூண்டு பாக்கு
கட்டாரிவளைதடியுங்கைச்சூரிகொண்டு
சையோகமாகதுரைவீரன் தட்டுத்
தடியுடன்மந்திரவாள் சக்கரங்கொண்டு
மிதியடியுமிருகாலில் தொட்டுக் கொண்டு
மின்னலிடுவெளிச்சமதில் மிகுத்தேறிநடந்து
மதிபொம்மியாள்குடிசை நாடி நடந்து
வருகிறான்வீரையனு மனவேகமாக.

தனனதன-தனதந்தனனு.

விருத்தம்.

வடிவழகானவீரன் மங்கைமேலாசைகொண்டு
விடியுமுன்னவளைக்கூடி மேவிடவேணுமென்று
துடியுடனடந்துகாட்டில் தோகைபெண்ணிருக்கும்பச்சைக்
குடிசையினருகில்வந்து குணமுடனிற்கின்றனே.

கட்டளைக்கலிப்பா.

வந்தவீரன்குடிசைக்கருகாக
மங்கைபொம்மிக்குமையல்பெருகவே
கெந்தம்பன்னீர் புனுகுசவ்வாதுகள்
ஜிறிமார்பிலணிந்திடும்போதிலே



சந்தனப்பொடிவாசகுபீரெனத்
தையல்பொம்மியு மையல்பெருகியே
விந்தையாக வெளியினில்வந்தவள்
வீரனிற்பதைக் கண்டுமொழிவளே.

பொம்மியம்மாளுக்கும் மதுரைவீரனுக்கும்-தர்க்கம்.

சீசபத்தியம்.

(பொம்மி) ஆரடாபாவிநீ அர்த்தராத்திரியிலே
சீருடன்வந்தவன் செப்புவாய்நீ
(வீரன்) செப்புவாயென்னிலென் சேதிகேள்மாதியன்
மெய்ப்புடனருள்முத்து வீரனுனே
(பொம்மி) மாதியன்மகனேநீவந்தவாறென்னடா
நீதிசேர்மாதியனெங்குசென்றான்
(வீரன்) மங்கையென்தந்தையு மழையிருட்டானதால்
இங்கேவாராமலே யெனைப்போவென்றான்
ஆகையாலுன்னுடைய அருகில்வந்தேன்
மாய்கைபோல்மழையிருட் டானதாலே
ஏகமாய்விரகமேலாடுதிப்போ
தோகையேதயவுசெய்யடி சுகுணமானே.

பொம்மியம்மாள்சொல்-சுந்தார்த்தம்.

தோகையேதயவுசெய்வாய் சுகசுணமானேயென்று
லாகலாவார்த்தைபேசு மாதியன்மகனேகேளாய்
சாகிறகாலம்வந்து தலைப்புழுகிற்ந்துபோச்சோ
ஏகியேபோடாபாவி.

ஏண்டாகொடுமைபேசுறாய்-மாதிப்பையா
ஏண்டாகொடுமைபேசுறாய்
ஏண்டாகொடுமைபேச வேண்டாமட்டாநீச்சு
நீண்டாப்பயலேஉன்னை மாண்டாலுந்தொடுவாரோ(ஏண்டா)

மதுரைவீரன்சொல்-சுந்தார்த்தம்.

மாதியப்பயலென்றென்னை மரியாதையுமில்லாமல்
சேதிகள்துணிவாய்ப்பேசுஞ் சேயிழைபொம்மிமாதே

நீதியோமறையில்நானும் நிற்பதைப்பார்த்திருக்க
ஏதினியென்மேல்மோடி.
இப்பவுஞ்செய்யலாமோடி-அன்னமேயிந்தச்
சற்பனையாகுமோ போடி.
அப்பன்சலுகையென்ன ஆதாவோவுனக்கு
எப்படியுமனது ஒப்பாமலேநீ மோடி (இப்பவுஞ்

விருத்தம்.

ஆரடாபாவியிந்த அர்த்தராத்திரியில்வந்தாய்
கூறடாயில்லாவிட்டால் கொடியயென்கைவாளாலே
பாரடாயிருதுண்டாகப் பகுத்துவுன்னுடலைவெட்டி
வேறடாசெய்வேனென்று மெல்லியாளுரைசெய்வாளே.

தர்க்கம்-தரு-இ-ம்-மோகனம்-அடதாளம்.

பொம்மியம்மாள்சொல்லல்.

ஏதடாசிறுபிள்ளா பிரவினில்கள்ளன்போலே
இவிடத்தில்வந்தவனியாரு - அடா - இப்பொழுதேவுன்பேரைக்கூறு

மதுரைவீரன்சொல்லல்.

கூறுமெனவேயென்னைக் - காறுபாறுசெய்யுறாய்
கொம்பனையேமாதியன்மகன்தான்-என்னை
கூடினாலுமுனக்குச் சுகந்தான்

பொம்மியம்மாள்சொல்லல்.

கூடிச்சுகியுமென்ற வேடிக்கைவார்த்தையிங்கே
கொண்டுவருகலாமோ மூடா-நாமும்
பண்டுபழகினமோ போடா

மதுரைவீரன்சொல்லல்.

போடாவாடாவென்று மோடியாய்ப்பேசாதே
பெண்ணேநாமிருவருஞ் சோடு-அடி
கண்ணேவந்தணைந்தென்னைக் கூடு

பொம்மியம்மாள்

வந்தென்னைக்கூடுமென்று சொந்தம்போலேயுரைத்த
மார்க்கத்தையப்பாலேநீ போடு-இந்த
வாயிடும்பேண்டாகெட்ட கேடு



மதுரைவீரன்

கேடுயென்னவுனக்குப் பேடுஞ்சேவலும்போல
ஒட்டியேசேர்ந்திருக்க வாடி-பேதைக்
கிருதுசெய்யலாகுமோ போடி

பொம்மியம்மாள்

வாடிபோடியென்று வார்த்தைவித்யாசஞ்சொல்ல
நாடியநாக்கையறுப் பேன்டா-என்னைக்
கூட்டத்தகுமோவுனக் கேண்டா

மதுரைவீரன்

கூட்டத்தகுமோவென்ற பேடைமயிலேபொம்மி
கொஞ்சிவந்தணைந்தென்னைச்சேரு-அடி
வஞ்சியேயென்கவலை தீரு

கொச்சகம்.

என்கவலைதீருமென்று ஏழைமதியாலுரைத்தாய்
உன்கவலைதீருதற்குன் னுள்ளவரைத்தானழைப்பாய்
பெண்கவலைபாராத பேயாபோவென்றுநெஞ்சில்
நன்கவலைகொண்டுபொம்மி நாயகியுஞ்சொல்வாளே.

பொம்மியம்மாள்சொல்-தரு.

இ-ம்- பந்துவராளி - அடதாளம்.

இதுவுனக் கழகல்லடா-சக்கிலியாநீ
எட்டியப்பால்நில்லடா
துதிசெய்துபணிந்திடுந் தொழில்மறந்தென்னுடன்
பதில்சொல்லியெனைக்கூடி மருவவந்ததுபாவி(இது)

மதுரைவீரன்சொல்லல்

தயவுசெய்தெனைச்சேரடி-அன்னமேபொம்மி
சற்றேயென்முகம்பாரடி
நயமும்பயமுஞ்சொன்னால் நான்போகும்வழியெங்கோ
செயமும்அபசெயமுஞ் செகத்திலொருவர்பங்கோ(தயவு)

பொம்மியம்மாள்

செயமென்னசெயம்போடா-சக்கிலியாவென்
சேதியையறியா யோடா
பயமில்லாமலென்னைப் பரியாசஞ்செய்கிறாய்
சுயமாயெனக்குரிய சொந்தமாமன்மகன்போல் (இது)

மதுரைவீரன்

மாமன்மகனும்வேறையோ-அடிநான்சொந்த
மச்சானென்பது பாராயோ
காமன்கணைதொடுக்கக் கலங்குதெனதுமனஞ்
சோமன்முகவதனத் தோகைமயிலேபொம்மி (தயவு)

பொம்மியம்மாள்

மனதுகலங்கா வாறடா-சக்கிலியாநீ
வந்தவழியைப் பாரடா
தனதுமொழிபகாந் தகுமோடாவுனக்கிப்போ
எனதுமனிதர்கண்டா விருபேரையும்வதைப்பார் (இது)

மதுரைவீரன்.

வதைத்தாலும்பெரிதல்லடி-பொம்மியுந்தன்
மனதென்ன கருங்கல்லடி
பதைக்கப்பதைக்கயென்னைப் பாவிவெளியில்வைத்து
மதக்கத்துடனிருக்கு மங்கைமயிலேபொம்மி (தயவு)

பொம்மியம்மாள்

அடியடியெனப்பேசுறாய்-அடடாமெத்த
அதனவீச்சுகள் வீசுறாய்
மடிபிடித்தென்னுடன் வழக்காடவந்தாயோ
குடிகேடாநீயெந்தன் குடிகைசுமூன்னிற்பது (இது)

---

மதுரைவீரன்சொல்-விருத்தம்.

குடிகேடனெனவுரைத்த கோதைமாமயிலேபொம்மி
அடியுடன்கோபங்கொண்டு சொல்வதைமறந்துயெந்தன்
வடிவழகதனைப்பார்த்து மனதுவைத்தின்றாத்ரி
விடியுமுனென்னைக்கூடி மேனியென்மயல்தீர்பெண்ணே.



மதுரைவீரன்சொல்-தரு.

இ-ம்-மோகனகலியாணி-ஆதிதாளம்.

மையல்மீறுதேபெண்ணே-என்னை
மருவிச்சேரடி கண்ணே
தையலர்க்கரசேயென்னைச் சந்தோஷமாய்ச்சேரடி
தானே-செழுந்-தேனே (மையல்)

பொம்மியம்மாள்

ஏதடாகொஞ்சப் பேச்சு-உனக்
கேண்டாயிந்தவெறும்வீச்சு
பாதகத்தனஞ் சொல்வதால்வரும்
பழியே-போடா-வெளியே (ஏதடா)

மதுரைவீரன்

வெளியில்போவதோ ஞாயம்-என்னை
வேண்டிச்செய்யடி நேயம்
பழிகள்வந்தாலும் வாட்டுமென்முகம்
பாரு-கூடிச்-சேரு (மையல்)

பொம்மியம்மாள்

கூடமனதி லெண்ணாதே-ஏழைக்
குறும்புயிக்கேபண்ணாதே
மாட்டிறைச்சியின் தோல்பணிசெய்யும்
மதியோ-உந்தன்-விதியோ (ஏதடா)

மதுரைவீரன்.

விதியென்னவென்னைக்கூட-மனம்
விரும்பிவந்துன்னை நாட
சதிசெய்யாதே வீண்போகாதேயென்
தாவம்-ஆண்-பாவம் (மையல்)

பொம்மியம்மாள்

பாவமென்னடாயெனக்குப்-பரி
யாசமென்னடா வுனக்கு
கோபம்வந்திடும் இனிமேலுந்தனைக்
கொல்வேன்-மொழி-வெல்வேன் (ஏதடா)

மதுரைவீரன்

வெல்லயெந்தனைப் படுமோ-காம
வெறிதானுந்தனை விடுமோ
வல்லமைத்தனம் பேசியென்னுடன்
மாதே-நீகூ-வாதே (மையல்)

பொம்மியம்மாள்

கூவென்றுல்கோடி சேனை-வந்து
கொல்லுமுந்தனைத் தானே
காவல்காத்தது போதுமப்பாலே
கட்டப்பாய்-வெளியில்-நட்டப்பாய் (ஏதடா)

மதுரைவீரன்சொல்-விருத்தம்.

வஞ்சியேயுந்தன்மோக வலையிலேசிக்கியானும்
பஞ்சையைப்போலேயுள்ளம் பரதவித்தலையக்கண்டு
நெஞ்சினிலிரக்கமில்லா நிஷ்டுரவார்த்தைசொல்லும்
ரஞ்சிதமயிலேகொஞ்சி நயந்தணைபொம்மிமாதே.

மதுரைவீரன்சொல்லும்-லாவணி.

ரஞ்சிதமயிலே கொஞ்சிவந்தணைய வஞ்சியேநீவாடி - உன்
நளினமுமிருவிழி நயமதுகண்டேன் ஆவியுமுருகுதடி

பொம்மியம்மாள்சொல்லல்.

ஆவியுமுருகிட்டதாவியேவருகிற பாவிப்பயல்போடா - உன்
அகமதிலொளிந்தச்செகமதில்மாதர்மே லாசைகொண்டாய்மூடா

மதுரைவீரன்சொல்லல்.

ஆசைகொண்டேனடிமோசமில்லாமலே பேசடிமடமானே - என்
அங்கமுருகுதென்மங்கையேநீயென் அருகினில்வாமானே

பொம்மியம்மாள்

அருகினில்வாவென்றுரிமைபோலுரைத்திடும் அறியாப்பயலேபோ
[டா-போறு
லாச்சுதுயினிமேல்பேச்சுகள்பேசினு லாக்கினைவருக்கேடா.



மதுரைவீரன்சொல்லல்.

ஆக்கினைதருபொம்மணுய்க்கன்மகளே அறிவேனுன்சேதி-என்னை
அணைந்துமேமதகேளியாடியேமகிழுவ தல்லவோபெருநீதி
நீதியென்னடாபாவிமாதியன்மகனே நீயார்நானுரு- நீதான்
நிற்கிறவிடம்விட்டுஇக்கணமுன்மனை நிமிஷத்திற்போய்ச்சேரு
போவென்றுனுனக்கினி காவலாரடியிங்கேபொம்மியெனுமாதே-எ
ன்னைப்,பூரிப்பாயணையாமல்வீரியம்பேசுருய்பெண்ணேவீண்வாதே
பெண்ணேவாதுநீபேசுருயென்றின்னம் பிதற்றுகிருய்மூடா-உந்த
ன், பிரட்டுக்கும்வெறும்பீத்துருட்டுக்கும்பயப்படேன் பேயேநீபோ
[டா

மதுரைவீரன்சொல் கந்தார்த்த வெண்பா.

போவென்றெனையுரைத்த பொற்கொடியேபொம்மிமுன்னுள்
சாபமெனக்கிசனிட்ட தாகையினுல்-ஆவலுடன்
காவலுக்குவந்தேனடி கன்னியேவுன்மையல்கொண்டு
மேவியிருபேரும் விளையாடுவோம்வாராய்

பொம்மியம்மாள்சொல்-தரு-இ-ம-சங்கராபரணம்.

விளையாடவாவென்றுநீ வீண்வார்த்தைபேசவந்தாய்
நாளைகாலமேயுன்னை நாக்கையறுப்பேன்
அறுக்குந்திராணியறிவே னருமையிளங்குயிலே
மருவும்வாரைதியே வஞ்சியேவாராய்
மருவமனந்துணிந்த மாதியச்சின்னுன்மகனே
வரும்விளையறியாமல் வாதுபேசுருய்
விளையேதெனமருவில் வேண்டுஞ்சுகம்பெறுவாய்
உனையேகொண்டுசெல்வேனு னூர்வழியிலே
கொண்டுசெல்வேனென்றுரைத்த கொழுப்பையடக்கியுன்னைத்
துண்டுதுண்டாய்வெட்டி நான் தூரயெறிவேன்
துண்டுதுண்டாய்வெட்டுகின்ற தொட்டியப்பெண்மாதரசே
பெண்டுகளுக்கித்தனை பெருமையேதடி

எதடி பெருமையென்று யிஷ்டமுண்டோமுன்பின் நீதான்
காதல்கொண்டேளருகிறாய் கள்ளன்போலவே

கள்ளனும்வெள்ளனுமென்னைக் கலந்தணைந்தால்தெரியும்
தெள்ளமூர்த்தமேமனது செய்யடிபொம்மி

செய்யவுலகமெல்லாஞ்சிறக்குந்தொட்டியப்பெண்மேல்
மையல்கொள்ளத்தகுமோ மாதியன்மகனே

மதுரைவீரன்சொல்-விருத்தம்.

மாதியன்மகனென்றென்னை மரியாதையில்லாமல்தான்
சேதிகள் துணிவாய்ப்பேசுஞ் சேயிழைபொம்மிமாதே
நீதியோமழையில்நானும் நிற்பதைப்பார்த்திருந்தும்
ஏதினியென்மேல்மோடி இரங்கடிசகியேபொம்மி.

தர்க்கம்-தரு-இ-ம்-காம்போதி.

என்னடிபெண்ணேசகியே இப்படிமோடிசெய்கிறாய்
இன்னமும்உன்கல்மன திரக்கலையோடி

கல்மனதிரங்கெனவே காவலனேயிங்குவந்து
வல்மனதுடனிருட்டில் வாறுபேசுறாய்

இந்தமழைக்காலிருட்டி லெந்தனைத்தனியவைத்து
நிந்தனைசொல்வதுனக்கு நீதியோபொம்மி

நீதியல்லவென்றுனது சாதிமதியானுரைத்துச்
சேதிசொல்லுறாய்மாதியச் சின்னன்மகனே

மாதியச்சின்னன்மகனென் றோதியபெண்ணமூர்தமே
ஆதியில்நான்வந்தவகை யறியாமல்சொன்னாய்

வந்தவகையறியாமல் நிந்தனைசொன்னேனெனவே
சொந்தம்போலுனக்கவந்தாய் துரோகிநீபோடா

துரோகியென்றுநுந்தன்மீதிற் சொப்பமுண்டோயெந்தனுக்குப்
போசனமுண்டாகுமடி பேடைமயிலே

பேடைமயிலேயெனவேசாடைசொன்னதாலுமென்னைக்
கூடவேதருமோபோடா மூட்சென்மமே



சென்மமென்னசென்மமுன்னைச் சேர்ந்தணையாமல்விடுத்தால்
கன்மம்வந்துசேருமடி காதலிநீயே

காதல்கொண்டால்பூதலத்திற் கண்டவர்களேசுவாரோ
நீதமல்லபோடாபாவி நீவெளியிலே

மதுரைவீரன்சொல் கொச்சகம்.

நீதமல்லபோவெனவே நிஷ்டூரவார்த்தைசொல்லும்
பேதைமதியைப்படைத்த பெண்ணரசேகேளுமெந்தன்
பாதம்ரண்டுநோகுதடி பாவிமனமிரக்கலையோ
சேதமில்லையுந்தனுக்குத் தேவிபொம்மிநாயகியே.

வசனம்.

அடிவாடி பொம்மிநாயகியே இப்போது நான்சொல்லியவார்த்தை நீதமல்லவென்று நீ நிஷ்டூரமாகியவார்த்தையாடி என்னை ஓடிப்போவென்று சொல்லுகிறாய் நான்இந்நேரமட்டும்மழையிலேநின்று என்பாதமிரண்டும் நோகுது இப்போதாகிலும் மனதிரங்கி என்னை குடிசைக்குள் அழைத்து சேர்த்தணையடி பொம்மிநாயகியே.

மதுரைவீரன்சொல்-தரு-இ-ம்-மத்தியமாவதி-ஆதிதாளம்.

அன்னமேதயவுசெய்யடி உன்மே
லாசைகொண்டுவந்தயென்னைமோசமேசெய்யாதேபொம்மி (அன்)

வன்னமயிலேமத னென்னையும்வருத்துகிற
வாதைபடமுடியாமல் கோதையேவுன்னிடம்வந்தேன்
கன்னவேயெழுந்திருந்து என்முகமலரைக்கண்டு
நன்னயத்துடனணைய யின்னமுமனதில்லையோ(அன்ன)

என்னவார்த்தைபேசுறாய்போடா-பாவிநீ
எத்தனைவிதஞ்சொன்னாலும் நத்திடேன்புத்தியில்லாமல்(என்ன)

அன்னீதஞ்செய்யவோயிந்த மின்னிருட்டினிலேவந்து
ஆசைகொள்ளும்படிசெய்தாய் மோசநாசமல்லவோடா
கன்னிகழியாதுமுன்னே யென்னைவலதழித்திட
என்னினுனக்குமிது புண்ணியமோகுடிகேடா(என்ன)

கரியிலெனவந்தே ளுவலின்றதிரக்
கனிவாயிதழமூர்த மூற
மேவச்சமயம் இன்பங்களிகூற
பூவுலகெல்லாம் புகழுந்தேவனென்று-சூறியாமல்
பெண்ணேமெத்தன் வாலாறையின்னதென்று-அறியாமல்
கோபஞ்செய்வதுனக்குப் பாபமல்லவோபொம்மி
கொஞ்சியதிவிரக மிஞ்சிரஞ்சிதவஞ்சி(அன்ன)

ஆசைகொள்வது பாவமல்லவோ-போடா-பழிகாரா-நீயெனக்கு
ஈடாய்ப்பேசவந்தாயோடா பெருங்கேடா
தேசம்புகழ்கோனேரி வாசவனென்தந்தைகண்டால்
தெட்டுங்கெர்வமடங்க வெட்டிடுவானாண்டுதுண்டாய்
மோசம்வரப்போகுமுன் நீசமதிவிட்டுவாய்
மூடிவந்தவழியைத் தேடியோடிப்போகாமல்(என்ன)

மதுரைவீரன்சொல்-சீசபத்தியம்.

நஞ்சினுயிருபார்வை நளினமுந்தேஜசும்
மஞ்சுலவுகூந்தலின் வரிசையழகும்
செஞ்சிலம்பணிபாத சிற்றடிநடக்கையும்
கொஞ்சுவாயதாமுங் குணமறிந்து
வஞ்சியேயபதிமோக மிஞ்சியேபெருகுதுன்
நெஞ்சினிற்கபடத்தை நீவிடுத்து
கொஞ்சிவந்தணையடி கோமளகுணகர
ரஞ்சிதப்பொம்மண ணருளுமயிலே
மிஞ்சியவிரகவே தனையினாலே
பஞ்சையைப்போலநான் பரதவிக்க
வஞ்சகஞ்செய்வது மார்க்கமல்ல
தஞ்சமேநீயடி சரசமயிலே.

தர்க்கம்-தரு-இ-ம்-ஆனந்தபைரவி.

வஞ்சிரஞ்சிதபொம்மி நாயகி எந்தன்
வருத்தம்பாரடிகொடும் பாதகி
பாதகியென்றென்னைச் சொல்லுராய்-உன்னைப்
பதைக்கவேவதைசெய்து கொல்லுவேன்



பதைக்கவெனவதைக்க போகினும்-அந்தப்
பாவமுனக்கேயெய்து மீகினும்
பாவமெனக்கென்னடா மாதியா-இந்தப்
பரியாசமுனக்கேண்டா நீதியா
நீதியென்னடியித்த நாளையில்-விரகம்
தீர்கப்பட்டாயிருட்டு வேளையில்
தீர்கப்படுகில்லையென் றேய்க்குறாய்-கொஞ்சம்
நெகிழ்ந்தவிடங்செல்லவோ பார்க்குறாய்
இந்தவேளைதயவு செய்யடி-பொம்மி
என்மீதினில்மனது வையடி
மனதுவைத்துனைச்சேரக் கூடுமோ-உன்னை
மருவவென்மனஞ்சற்றும் நாடுமோ

விருத்தம்.

நடத்திடுமென்றுபொம்மி நாயகிகோபங்கொண்டு
தடம்புயமதுரைவீர சாமியைவெளியில்வைத்து
அடர்ந்தமேருடிசைசென்று அரிவையாள்புகுந்தபோது
திடமுடன்மதுரைவீர னுமுரைசெய்வானே.

தர்க்கம்-தரு-இ-ம்-லாவணி.

ராசேந்திருடிசையிலோடிப்போய்ப்புகுவ தேனோ-நான்
திரையில்நின்றுநனைந் துருகியுடல்மெலிவேனோ-மெலிவேனோ
உறவென்று [illegible] மெலியவந்துநிற்பானே-நீ
யுனதுதந்தைதனைவரவேசொல்லுபோய்த் தானே-போய்த்தானே
தந்தைவந்தாலினி யிந்தமழையில்நனைவாரோ-அவர்
தனயன்வந்துபடுத்துயனைவெளியில்வந்து பாரோ-வந்துபாரோ
வந்துபாரெனவே நிந்தையானமொழிசொன்னால்-சொன்ன
வாயும்வெந்துவிடும் ஞாயமல்லபோடா-பின்னால்-போடாபின்னால்
போடாவாடாவென மூடாமூடியாய்ப்பேசாதே-இதைப்
பொறுத்துக்கொள்ளடியென் வருத்தம்பாராமல்வீசாதே-வீசாதே

வருத்தம்பாரடியென் றுறுத்துக்காரனன்போல்நீதான்-சொன்ன
வாய்கிழித்துவுன்னைத்தீயில்கொளுத்துவே-னுன்தான்-அடேநான்தான்
தீயில்கொளுத்திவிடும் நாயக்கர்பெற்றபொம்மிமாதே-என்
சேதியின்னமறியாமல் மெத்தவே துள்ளாதே-துள்ளாதே
துள்ளாதேயென்று சொல்லாதேகோபம்பொல்லாதே-வெகு
துரிதமாகவேஓடிப்போடாநில் லாதே-நில்லாதே

விருத்தம்.

துரிதமாயோடிப்போகச் சொன்னபொம்மியரேகேளாய்
அரியின்முன்கரிதானின்று அதட்டினால்பயந்துபோமோ
வரிவிழிமாதேயென்று மனமதுதுணிந்துவீரன்
மருவவேநெருங்கக்கண்டு மங்கையுந்துயர்கொண்டாளே.

இதுவுமது.

தொட்டியகுலத்துராச தாந்தான்வயிற்றுதித்தேன்
கட்டியேகொடுத்தெனக்குக் கன்னிதான்கழியுமுன்னே
தெட்டிசக்கிலியன்கூடச் சிரந்தனில்விதியோவென்று
மட்டில்லாத்துயரங்கொண்டு மங்கையும்புலம்புவாளே.

பொம்மியம்மாள்புலம்பல்.

தரு-இ-ம்-பைரவி-அடதாளம்.

கண்ணிகள்.

இந்தவிதிக்கென்னசெய்வேன் சுந்தரனேகாலகண்ட
நேசா-கிரி-வாசா
விந்தையுடன்காவலுக்கு வந்தவனழிக்கத்துணி
வேனோ-விதி-தானோ
நீதிசேர்பொம்மண நாய்க்கன் சோதிபோலெனைப்பயின்ற
நேரம்-பொல்லா-வாரம்
தீதுசெய்தெனையிப்போது மாதியன்மகனழிக்கச்
சென்றான்-மையல்-கொண்டான்
மாலையிட்டெனக்குமணக் கோலஞ்செய்யுமுன்னேகூட
வந்தான்-காவ-லுந்தான்



பாலமுர்தபானமதில் காலவிஷங்கலந்தாற்போல்
பாவி-வாரான்-தாவி
ஒருவர்கதியுங்காணேன் வருவாராரையுங்காணேன்
ஓடி-என்னை-நாடி
இருவேமுத்தாலம்மாள் கிருபைவைத்தெனையாளுந்
தேவி-ஐயோ-பாவி

விருத்தம்.

இவ்வகைபொம்மிகூறி யேங்கியேபுலம்பும்போது
அவ்விடந்தன்னைவிட்டு ஆக்கிரமத்துடனேவீரன்
தவ்வியேகுதித்துத்தாண்டித் தையலைக்கூடச்சிந்தை
ஒவ்வியேகுடிசைசென்று ஒண்டொடிமுன்னின்றானே.

குடிசையிற்புகுந்துவீரன் கோதையையெடுத்தணைத்து
மடியின்மேல்வைத்துக்கொண்டு மலர்கண்ணீர்துடைத்துச்சொல்வான்
துடியிடைமாதேயுந்தன் துயரத்தைவிடுத்துவெந்தன்
வடிவழகதனைப்பார்த்து மனமகிழ்ந்தணைகுவாயே.

நயமுடனுரைக்கக்கேட்டு நாயகிமனதிலுற்ற
துயரமென்பதைவிடுத்துச் சுந்தரமுகமலர்ந்து
நயவுடனிமிர்ந்துவீர சாமிதன்முகத்தைப்பார்த்து
மயலுடன்வீரன்பாதம் வணங்கியேசொல்லலுற்றாள்.

பொம்மியம்மாள்சொல்-தரு-இ-ம்-பந்துவராளி.

கண்ணிகள்.

மன்னவனேயென்னரசே-மாரனேமுத்து - வீரனேகேளாய் *
(நீ)தென்னவம்முசல்பரனே செங்கமலவாசவனே சுவாமி
இந்திரனேவானவனே இக்குவேளனுமதனே சுவாமி
சந்திரனேசூரியனே தாரணியின்மன்னவனே சுவாமி
திக்கிலுள்ளருத்திரனே தேவனேஅறிகிலேனான் சுவாமி
சக்கிலியன்வீட்டில்வந்து தான்வளர்ந்ததென்னசொல்லுஞ் சுவாமி
ஆர்பெற்றகண்மணியோ பூருவத்தைச்சொல்லுமெந்தன் சுவாமி
சீருதனாய்நானுரைத்த சேதியைப்பொறுத்திடுவீர் சுவாமி

விருத்தம்.

மனமதுமகிழ்ந்துபொம்மி மன்னவன்முகத்தைப்பார்த்து
தனதுடன்கேழ்க்கவீர சாமியுமகிழ்ந்துசொல்வான்
எனதுஅற்புதமேபெண்ணே யின்பமாய்க்கேள்நீயென்று
குணமுடன்பூருவோத்திரங் கோதையர்க்குரைசெய்வானே.

மதுரைவீரன்சொல்-சிந்து.

மானேமரகதமே-எந்தன்-வஞ்சியரோமோகாஞ்சுகமே தேனேஅமுர்தகுண-மாதே-செப்புகிறேன்கேளுமிப்புவியில் ஆதிசிவனருளால்-காசி-யாண்டிடுமன்னனகந்தனிலே நீதியுடன்பிறந்தேன்-அன்று-நேரிழைமன்னர்க்குக்கூறிடவே மெத்தமனமகிழ்ந்து-மன்னன்-வேதமறையோரைத்தானழைத்து பத்தியுடன்தொழுது-எந்தன்-பாலன்பிறந்தபலாபலனை பார்த்துஉரையுமென்றே-அந்தப்-பாரமுடிமன்னன்கூறிடவே நேத்தியுடன்மறையோர்-சாஸ்திர-நீதத்தைப்பார்த்துவுரைத்திடுவார் மைந்தன்கழுத்தினிலே-கொடி-மாலைவிழுந்தயிருக்குதையா அந்தச்சுதனிருந்தால்-உமக்-காகாதுகாணிந்தப்பாலகனை கொண்டுபோய்கானகத்தில்-வைத்துக்-கொப்பனவாவென்று செப்பி டவே,மன்றில்விழுந்தழுது-காசி-மன்னனுந்தேவியுந்தான்புலம்பி சோசியர்சொற்படிக்கு-என்னைச்-சொர்னத்தாம்பாளத்தில்வைத்தெடு த்து தாசியராடல்செய்ய-சேனை-தன்னுடன்மந்திரிமார்கள்சூழ வந்துவனத்தில்வைத்துப்-போக-மங்கையேநானங்கிருக்கையிலே ஐந்தலைநாகமது-வந்து-ஆதரவாயென்னருகிருந்து சோதிவெயில்மறைக்க-நான்-துயாத்துடனேபுலம்பையிலே மாதியச்சக்கிலிச்சி-வந்து-மைந்தனெனவேயெடுத்தணைத்து சீராய்முலைகொடுத்து-என்னைச்-சேயெனவேவளர்த்தெடுத்துப் பாரோரறிந்திடவே-தமிழ்ப்-பள்ளியிலென்னைப்படிக்கவைத்து வாலிபனுயிருந்தேன்-அந்த-மாதியச்சின்னனென்னையழைத்து நாலினிடைமாதைச்-சென்று-நுண்மையுடன்காருமென்மகனே என்றுஅனுப்பிவைத்தான்-நானும்-மேந்திழையேவந்தேன்காவலுக்கு இன்றுவரைநடந்த-சேதி-இந்தமட்டும்நானறிந்ததென்று



சொன்னான்துரைவீரன்-அப்போ-தோகையெனும்பொம்மிதான்கேட்டு, நன்றாச்சுகாரியங்கள்-என்று-நாயகிமெத்தமனமகிழ்ந்து கட்டியணைத்திருந்த-வீரன்-கன்னத்திலெட்டியேமுத்தமிட்டாள் மட்டிலடங்காத-வீரன்-மங்கையைக்கூடவேமுத்தமிட்டு துரைசாமிவீரையனும்-அந்தத்-தோகையுடுத்துந்துயில்களைந்து விரைவாகத்தன்னுடைய-வெள்ளை-மெல்லியதுப்பட்டாதானவிழ்த்து மங்கைநீயுடனே-செக-மாரன்கலந்திடும்பாவனைபோல் கொங்கைதன்னெருடி-வீரன்-கொங்கோகவித்தைதொழில்புரிந்தான் சிரித்துவிளையாடி-பொம்மி-சித்தமகிழவேசேர்ந்தணைந்து இருக்குந்தருணத்திலே-பொம்மி - யேகாந்தமாகவெடுத்துரைப்பாள் பொழுதுவிடியுதுகாண்-இன்று-போய்ப்பிழையுமென்றுநாய்க்கர்மகள்,தொழுதுஅனுப்பிவைத்தாள்-அந்தத்-தோகையர்க்குத்திடஞ்சொல்லிவிட்டு, வனுவேகமாய்நடந்து-துரை-வந்துமனைதனில் தந்தையர்முன், நலியாமல்நிற்குறதைக்-கண்டு - நாடியேமாதியன்தான்மகிழ்ந்தான். தந்தனானே-தென்னானே.

பொதுவிருத்தம்.

மைந்தனைக்கண்டபோதே மாதியச்சின்னான்மெத்த
சந்தோஷமுடனேகொஞ்சித் தழுவியேமுத்தமிட்டு
வந்தவன்வீட்டிலன்னம் வாருடன்புசித்தவீரன்
விந்தையாயிருக்கும்போது விளம்புவான்மாதிதானே.

மாதியச்சின்னான்சொல் விருத்தம்.

என்னுடமகனேகேளா யின்றையத்தினமும்பொம்மி
தன்னுடகாவற்கேகிச் சர்வசாக்கிருதையாகச்
சொன்னசொற்றவறிடாமல் தூரவேநின்றுகாத்து
நன்னயத்துடனேவீடு நாடியேவருகுவாயே.

வசனம்.

கேளாய் என்னுகண்மணியாகிய மகனேநேற்றையதினம்பொம்மியம்மாள் காவலுக்குச்சென்று காத்திருந்ததுபோல் இன்றையத்தினமுஞ்சென்று தூரத்தில்நின்று சாக்கிருதையாகக் காத்திருந்து பொழுதுவிடிந்தவுடன் வருவாயப்பாமகனே வீரையா.

மதுரைவீரன்சொல் வசனம்.

அப்படியே சக்கிருதையாகக் காத்துவருகிறேன்பிதாவே.

பொதுவிருத்தம்.

தந்தைமாதியன்சொற்கேட்டு சம்மதித்தெழுந்தவீரன்
விந்தையாய்ப்பணிகள்பூண்டு வெம்புலிபோலேகாட்டில்
சிந்தையில்கனிவுகொண்டு சீக்கிரமாகவீரன்
வந்திடக்கண்டுபொம்மி மனமகிழ்ந்துரைசெய்வாளே.

பொம்மியம்மாள்சொல்-தரு.

இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

வாரும்வாருமென் கணவரே அழகில்மிகு
மங்கையர்குணவ சிகரே
பாருலகுள்ளோ ரறியவே என்னையும்நீவி
வாகஞ்செய்தெனக்குரியவே
மங்கிலியஞ் சூட்டுமன்னவா எனையணைந்து
மையல்தீர்க்கவொடிக்கண்ணவா
இங்கிதலீலாவி நோதனே எனவேபொம்மி
எட்டிமுத்தமிட்டு நாதனே
பஞ்சணையின்னிற் கூடியே இதழ்பருகிப்
பட்சமுடன் விளையாடியே
மிஞ்சியலீலைகள் புரிந்து ஸ்தனம்நெருடும்
வேடிக்கைவிநோத மறிந்து
தீராதஆசைகள் கொண்டு பொம்மியெழுந்து
திகைத்துரைப்பாள்மனம்விண்டு
வீராதிவீரனே கேளும் அச்சுதேயின்று
விடிந்தால்முப்பது நாளும்
நாளைப்பொழுதிலென்னையும் தந்தையழைத்து
நாடியேபோவானென்றன்னையும்
மாளிகையிலென்னைவைத்துமே தந்தையெனக்கு
வைத்திடுவான் காவல்சுற்றுமே
உன்னைவிட்டுநானிருப்பேனோ அரைநிமிஷம்
உள்ளமுஞ்சலித் திருப்பேனோ



சங்கையில்லாமலென்னைமருவுஞ் சாமிநீர்நாளை
சாங்கியவேளைக்கு வருவீர்

விருத்தம்.

சாத்திரசாங்கியவேளை சாமிநீர்வருவீரென்று
ஆத்திரத்துடனேபொம்மி யங்கமும்பதறிரண்டு
நேத்திரம்நீர்கள்சிந்த நேரிழைபுலம்பக்கண்டு
மாத்தியேதுயரந்தன்னை மன்னவனுரைசெய்வானே.

மதுரைவீரன்சொல்-விருத்தம்.

பேடைமாமயிலேபொம்மி பெண்களுக்கரசேகேளாய்
நாடெலாங்கடந்துநாமும் நலமுள்ளதெற்குசென்று
தேடலாந்திரவியங்கள் திருச்சிறுப்பள்ளிசேர்ந்து
கூடநீவருவாயாகில் குறிப்புடன்சொல்வாய்பெண்ணே.

பொம்மியம்மாள்சொல்-விருத்தம்.

நல்லதுசுவாமியிந்த ராச்சியம்போனாலென்ன
செல்வமாய்வளர்த்தஅப்பன் திரவியம்போனாலென்ன
உல்லாசமனையின்வாழ்க்கை உடன்முறைதாய்போனாலுஞ்
சல்லாபசரசலோலா சாமிநான்பிரியேனுன்னை.

மதுரைவீரன்சொல்-விருத்தம்.

என்னைநீபிரியேனென்று இதமுடனுரைத்தாய்மாதே
உன்னையேசட்டங்குசெய்து உன்தந்தைவீடுசேர்த்தால்
அன்னையுந்தந்தைசுற்றத் தாசையைமறந்துயெந்தன்
பின்னாலேவருவேனென்று பிலத்துடன்கைதாபெண்ணே.

பொம்மியம்மாள்சொல்-விருத்தம்.

கைதரச்சொன்னீரெந்தன் கணவனேசொல்லக்கேளும்
வெய்யவன்தேவர்மூவர் விமலர்கள்விண்மண்ணுள்ளோர்
வையகம்பூமாதேவி மறையவர்சாட்சியாக
மெய்யிதுவுய்மைவிட்டு விநாடிநான்பிரிந்திரேனே.

மதுரைவீரன்சொல்-விருத்தம்.

வங்கணம்பிரியாத்தங்க மயமெனும்வடிவினாளே
செங்கையுஞ்சிவந்தமேனி திருமுகமதியேபொம்மி

அங்கேயுன்றகப்பன்வாழும் அரண்மனைசட்டந்து நாளை
நங்கையுன்படுக்கைவீட்டில் நானும்வந்தெழுப்புவேனே.

பொதுவிருத்தம்.

வருகுவேனென்றுசொல்லி மங்கைக்குத்திட்டமுரைத்து
உருகியேமனதுநொந்து உத்தமன்போலேவீரன்.
வருவதைக்கண்டுசின்னான் மனையுந்தழுவிக்கூட்டி
திருவளர்மனையில்புக்கிச் செழிப்புடனிருக்கின்றனே.

இதுவுமது.

செழிப்புடனிருக்கும்போது தீரன்பொம்மனாயக்கன்
முழுக்குடன்மகளுக்கின்றுமுப்பது நாளுமாச்சு
குளிப்புடன்மிகுநீராட்டிக் கோதைபொம்மியர்க்குத்திருடி
கழிப்புடன்சடங்குசெய்யக் கருத்தினில்நினைத்தெழுந்தான்.

வசனம்.

இந்தப்பிரகாரமிருக்கும்போது கோனேரிப்பட்டணத்தையாள்ப்பட்ட பொம்மணநாய்க்கன் தன்துமகளாகிய பொம்மியம்மாள் ருதுவாகி முப்பதுநாளானபடியால் அரண்மனைக்கு அழைத்துக்கொண்டுபோக வருகிறவிதங்காண்க.

பொம்மணநாய்க்கன்வருகிறவிருத்தம்.

நிரையுடன்தொட்டியர்சேனை நெருங்கியேபுடைதான்சூழ
முரசுபேரிகைடமார முழக்கியேஒலிதுடிக்சத்
திரைகடல்சூழ்கோனேரித் திருநகர்தன்னையாளுந்
துரையெனும்பொம்மண நாயக்க னாந்தான்வருகின்றனே.

தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-அடதாளம்.

பல்லவி.

துரைபொம்மநாய்க்கன்வந்தான்-ரதகஜ
துரகபதாதி தளங்களுஞ்சூழ (துரை)

அநுபல்லவி.

விரசுபூரிகைசின்ன மூத-நட
மிஞ்சியவஞ்சிய ருடனோரஞ்சித (துரை)

சரணங்கள்.

தகதகெனக்கொண்டை யிலங்க-மார்பில்
தாழிப்பதக்கஞ்சந்தி ராருந்துலங்க



நககெனவேஅங்கி குலுங்க-முத்தி
ருல்வட்டக்குடை நகமுகம்விளங்க (துரை)

மட்டில்லாவகைப்பணி பூட்டி-மன்னர்
மயக்கவேநுதல்தனில் வசியமைதீட்டி
தொட்டியர்படைசேனை கூட்டி-எங்குந்
துலக்கிடப்புகழ்கீர்த்தி விளங்கவேநாட்டி (துரை)

இத்திமத்தாள முழங்க-ஜெய
ஜெயவெனமுரசொலி திசையெட்டும்விளங்க
பத்தியாய்விருதுகள் துலங்க-வெள்ளைப்
பரியேறித்திருமுகம் பருதிபோலிலங்க (துரை)

விருத்தம்.

பரிகரிசேனைமன்னர் படையுடன்பொம்மனாய்க்கன்
துரிதமாய்நடக்கிச்சென்று தோழியர்தனையழைத்து
வரிவிழிமகட்குஸ்நானம் வகையுடனடத்துமென்ன
சுரிகுழல்மாதர்கூடிச் சுருக்கில்நீராட்டினரே.

நீராட்டித்துயிலுடுத்தி நேரிழைமார்கள்கூடி
சீராட்டிப்பணிகள்பூட்டிச் சிவிகையின்மீதிலேற்றி
வாராட்டுங்களபகொங்கை மாதர்களிருபாற்சூழப்
பாராட்டிப்புகழ்ந்துகொண்டு பட்டணஞ்சேர்ந்திட்டாரே.

பட்டணஞ்சேர்ந்தபின்பு பைங்கிளிபொம்மியாட்கு
திட்டெனச்சடங்குசாங்கியஞ் செய்திடவேணுமென்று
கட்டபொம்மணநாய்க்கன் கம்பளப்படையோர்சூழ
சட்டமாய்வேதசாஸ்திரச் சடங்குகள்முடிப்பித்தானே.

வேதசாங்கியமுடிந்த வேளைசக்கிலியச்சின்னான்
பாதரட்சையுமேகொண்டு பாலவீரையனுங்கூட
சீதவான்போலேவந்து நிற்பதைக்கண்டுபொம்மி
சாதலாய்வீரனுக்குக் கண்சைகைசெய்திட்டாளே.

சைகைகள்செய்தாள்பொம்மி சாதம்வாங்கிடவாவென்று
நயத்துடன்வீரசாமி நல்லதென்றுவந்துசென்றான்
மயத்துடன்பொம்மிதன்னை மாளிகைதன்னில்சேர்த்து [ரே
செயத்துடன்முறையோர்க்கெல்லாஞ் சிறந்தன்னம் படைத்திட்டா

அன்னமும்புசித்துமன்னர் அழகுதாம்பூலம்வாங்கி
மன்னவன்விடையினாலே வந்தவர்விடுதிசேர்ந்தார்
நன்னயத்துடனேபொம்ம நாயக்கன்மனம்பூரித்துத்
தென்னவனிருக்கும்போது சின்னானுமகனும்வந்தார்.

மாதியன்வரவைக்கண்டு மன்னன்பொம்மண நாயக்கன்
தாதியையழைத்துச்சின்னான் தனக்கன்னம்படையுமென்றான்
ஓதியமொழியைக்கேட்டு உவந்துமேயெழுந்துபொம்மி
பீதியாய்ச்சாதங்கொண்டு வீரையன்முன்வந்தாளே.

தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

கண்ணிகள்.

சாதமுங்கறிவகைகள் தட்டிலெடுத்து பொம்மி
சக்கிலியன்கொண்டுவந்த தாழியில்போட்டு
நீதமுடன்வீரதுரைநிற்பதைக்கண்டு பொம்மி
நெஞ்சகத்தினிற்கவலைமெத்தவேகொண்டு
மங்கையுங்கலங்கியேகண் ணீர்கள்சொரிய வீர
மன்னனுங்கண்சாடைசெய்தான்மங்கையறிய
அங்கவன்கண்சாடைகண்டு மாதுநடந்தாள் எங்கள்
ஆணிமுத்துவீரனுஞ்சின்னானுநடந்தார்
வந்திருந்துமாளிகையி லன்னம்புசித்து வீரன்
மங்கைபொம்மியைக்களவுசெய்யயோசித்து
சிந்தையுடன்பஞ்சணையின் மீதில்வீரன்தான் நித்திரை
* செய்யவேகூடாமல்மன தேங்கியிருந்தான்
மாதியனும்வீரையனும் போனவுடனே நாயக்க
மன்னனுமெழுந்தஸ்தமானவுடனே
நீதியுடனேமங்கை மாளிகையிலே வைத்து
நேரிழைக்குக்காவலாய்த்தாழிகையிலே



செந்திருபோல்தாதியர்கள் சூழவேவைத்து வாசல்
சித்திரக்கதவடைத்து முத்திரைவைத்து
அந்தமுடன்பொம்மணனும் வாசல்முன்னிலே கத்தி
ஆயுதத்துடன்படுத்தான் கட்டில்தன்னிலே

விருத்தம்.

கட்டிலிற்படுத்துமன்னன் கண்விழித்திருந்துகாக்கத்
தொட்டியர்சேனைகோடி சுற்றிலும்பாரியோட
மட்டில்லாப்பரியிலேறி மதுக்கருமதட்டிச்சூழ
திட்டமாய்க்கோட்டைநான்கு திசையிலுங்காக்கின்றாரே.
காவல்பத்திரமாய்வைத்துக் காத்துமேயிருக்கும்போது
ஆவலாய்ச்சின்னான்தேவி அருமையாய்வளர்த்தவீரன்
மாவனிதையர்மேலாசை வைத்துமேநடுச்சாமத்தில்
பாவையைச்சிறையெடுக்கப் பணிந்தவனெழுந்திருந்தான்.
மனந்துணிந்தெழுந்துவீரன் மதிபொம்மிகவனத்தாலே
தனைவளர்த்தெடுத்ததந்தை தாய்தமக்குரைத்திடாமல்
க்ஷணந்தனில்பணிகள்பூண்டு தனதுஆயுதமெடுத்து
கனிந்துளமகிழ்ந்துகச்சை கட்டியேபுறப்பட்டானே.

தரு-இ-ம்-புன்னாகவராளி-அடதாளம்.

கண்ணிகள்.

கன்னிகைபொம்மியைக் கன்னமிடவென்று யெண்ணி-சிவ
காரணியாஞ்சக்கதேவிபாதந்துதி பண்ணி
உன்னிதமாகவே சாரிசெய்துதுரை வீரன்-வெகு
உத்தண்டமாக நடந்துசென்றான்ரண சூரன்
கோட்டையைச்சுற்றிலுங் கொற்றவர்சேனையைப்பார்த்து-இது
கொஞ்சப்படையென்று நெஞ்சகத்தில்துரை யோர்த்து
காட்டையெல்லாம்வெட்டிச் சுட்டுக்கோட்டையிடுமெனக்கு -ஒரு
கம்பைவெட்டப்பிரயாசையென்னமோயெந் தனக்கு
என்றுதான்மாயப்பொடிச்சிமிழ்தன்னையுந் திறந்து-வாரி
எல்லோர்கள்பேரிலும் வீசிவிட்டான்துரை விரைந்து

மாயப்பொடிபட்டு மன்னன்படையெல்லாந் இயக்கி-நின்ற
வாக்கிலவரவர்வாய்திறக்கவில்லை மயக்கி

நேயத்துடனந்த கோட்டைமதிலேறிக் குதித்து-பொம்மி
நித்திரைசெய்திடும் மாளிகைமுன்வந்தா னுதித்து
பொம்மணன்வாசல் முகப்பினிற்கட்டிலைப் போட்டு-நித்திரை
போகையிலேவிடுமூர்ச்சைசையைக்காதிலே கேட்டு

தெம்மாடிபோவென்று சொக்குப்பொடிகொண்டு வீசி-இவன்
சேனையும்பொம்மணன்தானுமெனக்கொரு தூசி
என்றுமதிபொம்மிவாசல்கதவைத் திறந்து-அந்த
ஏந்திழையைத்தட்டி யெழுப்பினன்துரை விரைந்து.
நன்றுடன்பொம்மியெழுந்துஅவள்மனந் துணிந்து-பிராண
நாதனேநீயொன்றுசொல்வாள்வீரன்பாதம் பணிந்து

விருத்தம்.

கோட்டைகொத்தளங்கள்சேனை கொடியதோர்குதிரைபாரு
பூட்டையுங்காவல்கட்டும் பொம்மணன்கண்ணுந்தப்பி
காட்டையுங்கடந்துநீரும் கஸ்திகள்பட்டுயெந்தன்
வீட்டினில்வந்தசாமி விலையுமக்கடியாளென்றாள்.

விலைமதியாததங்கமெல்லியே பொம்மிநல்ல
சிலைவளர்நுதலிநாமும் சீக்கிரமிவ்விடம்விட்டு
கலையுமான்போலேசேர்ந்து கடக்கவேபோகவேணும்
இலைகுலுங்காதநேர மேகுவோம்புறப்படென்றான்.

ஏகுவோம்புறப்படென்று இருவருமெழுந்திருந்து
வாகுடன்தனக்குவேண்டும் வகைபணியெடுத்துச்செந்தேன்
பாகுடன்சாமிக்கேற்ற பட்சணமுதலாய்க்கொண்டு
வேகமாய்பொம்மிமாதும் வீரனும்வெளியில்வந்தார்.

வந்துபொம்மணநாயக்க மன்னவனருகில்நிற்கும்
செந்தலைப்புரவிதன்னைச் சீக்கிரமவிழ்த்துச்சீனி
விந்தையாய்த்தரித்திறுக்கி மெல்லியைத்தூக்கிவைத்து
சந்தோஷமுடனேவீர சாமியும்பரிமேற்கொண்டான்.



மதுரைவீரன் பொம்மியம்மாளை சிறையெடுத்துப்போகுதல்.

தரு-இ-ம்-தொண்டிச்சிந்து.

வீரையன்பரிமீதில்-பொம்மியெனும்- மெல்லியைத்தூக்கிவை த்துவல்லபமதாய்-காரியப்புரவியின்மேல்-தானுமந்தக்- கன்னியர்க்கு ப்பின்னிருந்துஉன்னிதமுடன்-பஞ்சகலியாணிப்பரியை- நடவென் று-பாலைவயையிடதுகையால்மேவிப்பிடித்து-அஞ்சாமல்துரைவீரன்- நாய்க்கன்-அரண்மனைதான்கடந்து அரைக்ஷணத்தில் - வந்துநின்று கோட்டையருகில்-குதடாகையில்-வாங்கியேஅதட்டியந்த வாசிப்ப ரியை-தந்திரத்துடனடித்தான்-கோட்டைமதிள்- தாண்டியேகுதித்து மாந்தலைப்புரவி-தெற்குமுகநாடிப்பறந்து-பொம்மணன் - சீமையும் பாளையப்பட்டுத்தேசங்கடந்து-இக்குவனச்சோலையும்விட்டு- அழிஞ் சியடர்ந்-திருக்கும்வனக்கடந்துஏகாந்தமாய்-கொண்டாரணியமும் விட்டு-கொல்லிமலை-கூடியேகருங்கால்வழிநாடி நடந்து- கண்டோர் கள்மகிழ்ந்திடவே-தொட்டியமுங் - கடந்துமுசிரிவழிகக்குலிருளில் ஆழூர்வழியாக-காவேரி-யாற்றில்வந்திறங்கியேகூடாரமடித்து- தாமி ருபேருமிருந்து-பலகாரஞ்-சாப்பிட்டிளப்பாறிமுத்துச்சாமிவீரைய ன்-இளமயில்பொம்மியுடனே-கலவியி- லேகாந்தமாகியிருக்கையிலே அலைக்ஷிரோனுதித்தான்-அப்போது- அரண்டுபொம்மணன்விழித்தெ ழுந்தனனே. தன்னு-தனதனனு.

விருத்தம்.

காலமேயெழுந்துபார்த்துக் கட்டபொம்மணநாயக்கன்
நீலமார்ந்தேசிபக்கம் நின்றதைக்காணோமென்று
சாலமாளிகையில்சென்று தையல்பொம்மியைக்காணமல்
ஓலமிட்டெழுந்துமன்றி லுருண்டவன்புலம்புவானே.

ஆரடாபொம்மணன்பேரறிந்துமேயகந்தையாலே
சீருள்ளபொம்மியாளைச் சிறையெடுத்தேகினானை
பாரடாகையால்வெட்டிப் பங்கமேசெய்யவேணும்
கூறடாபயணமெந்தன் கொடியபட்டாளத்தோர்க்கே

பயணமேபுறப்படுங்கள் பைந்தொடிமகளைநீங்கள்
வயணமாய்த்தேசநாலும் வாகுடன்பார்க்கவேணும்

நட்டமுடன்ராணுசேனை நமக்குள்ளதளங்களெல்லாம்
பயணமாநெடுந்தெர்க்கேயென்று பறைதனையறையுமென்றான்.

பறைதனைபறைந்தசத்தம் பகடைமாதியனுங்கேட்டு
விரையவேயோடிவந்து வேந்தன்முன்விதமாய்ச்சொல்வான்
இறையவனெனக்குத்தந்து இபல்புடன்வளர்த்தவீரன்
மறையவேபோனனெந்தன்மகனையுங்காணேனென்றான்.

மாதியச்சின்னான்சொல் வசனம்.

அகோ சரணஞ்சரணமையாசுவாமி பொம்மணநாய்க்கரே ஈஸ்பரனருளினாலே நாங்கள் வனத்திலேயிருந்துஎடுத்துவந்து ஆசையுடனேவளர்த்த என்னுடைய கண்மணியாகிய மகனையும் காணேனையாசுவாமி.

பொம்மணநாயக்கன்சொல் விருத்தம்.

பாசம்விட்டகலாநேசப் பைந்தொடிபொம்மியாளை
தாசனாயிருந்தமாதிதன்னுட மகன்தான்கூட்டி
நேசமாய்ப்போனனென்று நிலவரந்தோணுதிப்போ
மோசஞ்செய்தவனைக்கொல்ல முடுகியேநடங்களிப்போ.

வசனம்.

அகோவாருங்கள் என்னுடைய சேனாதிபதிகளே இப்போது என் அருமைப்புதல்வியாகிய பொம்மியம்மாளை நம்முடையதாசனாயிருந்த மாதியன்மகன்தான் மோசஞ்செய்து கொண்டுபோனனென்று சித்தமாய்த்தெரியவந்தது ஆகையால் அவனைச் சித்திரவதைசெய்யும்பொருட்டாய் சடுதியில் சேனைகளைநடத்தி நடங்கள்சேனாதிபதிகளே.

விருத்தம்.

நடங்களென்றுரைக்கக்கேட்டு ரதகசதுரகத்தோடு
அடங்கியதளங்கள்யாவும் ஆயுதமெடுத்துக்கூடி
இடங்களில்லாமல்வீதி யெங்குமேநிறைந்துசென்று
துடங்கியேநடத்திக்கொண்டு துரைபொம்மநாய்க்கன்சென்றான்.

சென்றிடும்போதுபேரி செயசெயவெனமுழங்க
மண்டியேதுலுக்கானோர் மாறுமாறொன்றதட்ட



முண்டியேநடவுமென்று முன்னதாய்நாய்க்கன்செல்ல
கொண்டாரணியத்துப்பாதை கூடியேநடத்திட்டாரே.

படையுடனடந்தபோகும் பாதையிலாடுமேய்க்கும்
இடையனைக்கண்டுநாய்க்கன் இவ்வழிகுதிரையேறி
திடமுடனொருபெண்ணோடுந் திருடனும்போனதுண்டோ
அட்வுடனுரைப்பாயென்ன ஆயனுமுரைக்கின்றானே.

இடையன்சொல்-தரு.

| | |
|---|---|
| கன்னியுமோராண்பிள்ளையுங் | குதிரையேறியே-கருங் |
| கால்வழியாய்ப்போனாரிந்தப் | பாட்டைசாரியே |
| உன்னிதமுமவர்கள்போற | நன்னயங்களும்-வெகு |
| உல்லாசவினோதமதை | யென்னசொல்லுவேன் |
| என்றவனுரைத்தமொழி | பொம்மணன்கேட்டுப்-படை |
| எட்டியேநடங்களென்று | ஆத்திரப்பட்டு |
| கொண்டவன்தொட்டியம்விட்டு | ஆமூர்வழியாய்-வந்து |
| கொற்றவனுங்கரையேறிப் | பார்த்திடும்போது |
| காவேரியாற்றினடுவில் | கூடாரங்கண்டு-நாமுங் |
| கள்ளனைக்கண்டோமெனவே | துள்ளியேகொண்டு |
| கோவெனயிறைச்சலிட்டுக் | கொண்டுநிறைந்தார்-ஆற்றில் |
| கொப்பனவிறங்கியேபே | ரிகையறைந்தார் |

விருத்தம்.

பேரிகையறைந்தசத்தம் பெண்களுக்கரசிகேட்டு
வாரியேயெழுந்துநின்று வடமுகம்பார்க்கும்போது
மீறியதளங்கள்கூட்டி வேந்தனும்வந்தானென்று
வீரையன்மீதில்வீழ்ந்து மெல்லியாள்புலம்புவாளே.

பொம்மியம்மாள்புலம்பல்.

தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-சாப்புதாளம்.

கண்ணிகள்.

| | |
|---|---|
| என்செய்வோ | மன்னவனே-ஐயோமன |
| தேங்குதே | மன்னவனே-இப்போ |

கண்கொள்ளாப்படைகொண்டு கட்டபொம்மணன்வாரான்
கலிகியே மன்னவனே
மதியூகி மன்னவனே-தொட்டியன்படை
நெருங்கதே மன்னவனே-உன்னைக்
சதிசெய்துகொல்லுவான் சண்டாளனென்தந்தை
நானினி மன்னவனே
சைபோக வீரையனே-இன்பசுகந்
தாபிக்கும் வீரையனே-இன்றைக்
கைபோயென்னுடைந்த வுயிரிறக்கவோ
ஆளித்தீர் வீரையனே
தரைமுத்து வீரையனே-அதிரூப
சுந்தர வீரையனே-இந்தக்
குறைவில்லாச்சேனைபைக் கொன்றிடவும்மால்
கூடுமோ வீரையனே
துணைவேறில்லையே அரசே-உமக்கொருபடைத்
துணைசொல்லவுமென்னரசே-இந்த
முனைகொண்டபெருஞ்சேனை முன்னிற்கவும்மாலே
முடியுமோ என்னரசே
எழுந்திரு மென்துரையே-க்ஷணத்திலில்
எருவோ மென்துரையே-இப்போ
செழுமையாகவே சேனைகள்வருகுதென்
செய்குவோமென்துரையே

விருத்தம்.

தையல்பொம்மியிந்தவிதம் புலம்பக்கேட்டுச்
சாமிமுத்துவீரையனுஞ்சகித்துக்கொண்டு
செய்யவனிதையர்பேதை மதியினாலே
செப்பினளென்றேசனைசெய்திருக்கும்போது
வெய்யவனைத்தான்மறைக்கப் படைகள்வந்து
வீரையன்கூடாரமதை வளைத்துக்கொண்டு
கையதனுல்சஞ்சாலி வேட்டுத்தீர்த்து
கனமாரிபொழிந்திடவே கண்டான்வீரன்.



விருத்தம்.

கண்டவனெழுந்திருந்து கண்களுஞ்சிவந்துமெத்த
அண்டமுமதிரக்கோப மதிகமாய்வந்துநீல
கண்டமாந்தேசிமீதில் கடுகவேபாய்ந்தளறி
வண்டுசூழ்குழலாய்கத்தி வாழ்த்தியேகொடுவென்றனே.

கத்தியையெடுத்துவாழ்த்திக் கையினில்தாருமென்ன
வெற்றிபெற்றிடுவீரென்று மெல்லியாளெடுத்தயீய்ந்தாள்
சத்தியந்தவறாவீரன் சந்தோஷத்துடனேவாங்கிப்
பத்தியாய்ச்சக்கதேவி பதந்துதிசெய்குவானே.

ஒன்பதுகம்பளத்துக் குறதியாய்நின்றதேவி
நம்பியுன்குலத்தில்வந்து நாயகிபொம்மிதன்னை
இன்பமாயெடுக்கும்போது என்னுடபக்கில்நின்ற
அன்புள்ளசக்கதேவி ஆபத்தைவிலக்குவாயே.

நானொருதனியேனம்மா நமக்கொருதுணைவேறில்லை
தானவேதளங்கள்கொண்டு கடுத்தபொம்மணனைவெட்டி
கானகந்தன்னிற்போட்டென் கவலையைத்தீர்ப்பாயென்று
தானவன்பரியைத்தட்டிச் சவுதியில்நடத்திட்டானே.

நடந்திடுந்துடியைப்பார்த்துன் நல்மாமனொருத்தன்சென்னி
இடர்ந்திடவேண்டாமென்று ஏந்திழையுரைக்கக்கேட்டு
அடர்ந்தவன்வருகும்போது அதட்டிபொம்மணன்தன்சேனை
தொடர்ந்துவீரையனைச்சுற்றிச் சூழ்ந்துகொண்டமர்செய்தாரே.

மதுரைவீரன்சண்டைசெய்கிற-தரு.

இ-ம் - சங்கராபரணம் - அட்டதாளசாப்பு.

அமர்செய்யச்சேனைகள் அடர்ந்துவீரனைச்சுற்றிக்கொண்டார் - பய்
லதோவாரான்விடாதேயென்றுசொல்லி விண்டார்
சமரிடும்பரியேறிப்பட்டாணித்துலுக்கர்வந் தெதிர்த்தார்-சேனை
சனங்களம்புகள்தொட்டுவேட்டுவெடிச்சத்தமு மதிர்த்தார்
மாதுபொம்மியைக்கொண்டு வந்தகள்ளனிவன்தானென்பார்- லகோ
மாறுமாறொன்றுகிட்டிவந்தார்வீரையனுக்கு முன்பால்
நீதிவன்செய்ததற்குச் சித்திரவதைசெய்யுங்க ளென்பார்-இந்தத்
திருடனை அம்பினலேசிரசைத்துணித்துவிடு மென்பார்

விருத்தம்.

சிரசதைத்துணியுமென்றும் சித்திரவதைசெய்யென்றும்
உரசுகள்பேசிச்சேனை யொருமித்துநெருங்கக்கண்டு
வரைபுயனானவீரன் மனதிலேகோபங்கொண்டு
விரைவுடன்பரிநடத்தி வினைசெய்யத்துணிந்திட்டானே.

மதுரைவீரன் சண்டைசெய்யும் கத்தார்த்தம்.

துணிந்தவன்தனக்குமீசை துடிக்கவேபடையைக்கண்டு
தணிந்திடாக்கோபங்கொண்டு சர்ப்பம்போல்சீறிப்பாய்ந்து
குனிந்தவர்நிமிறுமுன்னே கொக்கரித்தவர்கள்பேரில்
சினந்துவாளுருவிக்கொண்டு.

சேனைமன்னரைக் கெட்டினான்-வீராதிவீரன்
தானேபடையை வெட்டினான்
ஆனைப்புரவிகளுங் சேனைப்படைகளாளும்
அங்கம்நடுங்கியே கண்கள்கலங்கிட
சங்கையில்லாப்படை பங்கமதாகிட (சேனை)

வெட்டினான்வீரன்முன்பின் வீச்சுக்காயிரம்பேர்மாள
தொட்டியர்வடுகர்மல்லர் சோனகர்துலுக்கரோடு
மட்டில்லாச்சேனையாவும் மயங்கியேகதிகெட்டோட
முட்டியேபொருதவென்று

முடுகிப்பரி நடத்தினான்-வீராதிவீரன்
கடுகிஉய்யக் கடத்தினான்
சடுதியிலோடிமுந்த முடுகிப்பொருதவந்த
சம்பிரதாயமுங் கெம்பீரதீரமும்
அம்புவில்வீரமும் வம்பிலேபோய்விட (முடுகி)

நாற்றிசைதனிலுஞ்சேனை நடுங்கியேமதிமயங்கி
கூற்றுவனிவன்தானென்று கோலெனக்கதறியோட
நேத்தியாய்க்கொக்கின்மீது நேர்ந்தராஜாளியைப்போல்
பார்த்திபன்சேனைதன்னைப்

பாய்ந்துதுரத்திவெட்டினான்-வீராதிவீரன்
பாய்ந்துதுரத்திவெட்டினான்
பாய்ந்துதுரத்திவெட்டச் சாய்ந்துபடைகள்முட்டத்
தேய்ந்துதஞ்சலைப் போலே
காய்ந்துநிலத்திலுய்யப் (பாய்ந்து)



விருத்தம்.

மாந்தலைத்தேசிகாலால் மடிந்ததுசிலதுசேனை
பூந்தையன்வாளால்வெட்டிப் போனதுசிலதுசேனை
தீர்ந்ததுகவலையென்று தீரனும்நிற்கும்போது
பாய்ந்துமேபொம்மனன்போய் பள்ளத்திலொளிக்கக்கண்டான்

கண்டவன்கோபங்கொண்டு கடுகவேபரிநடத்திக்
கொண்டவனருகில்சென்று குலுங்கவேநகைத்துச்சீறி
இன்றுநீவந்தகோல மிப்படியாச்சோவென்று
துண்டகனானவீரன் தொட்டியன்முன்சொல்வானே.

மதுரைவீரன்சொல்-தரு-இம்-பைரவி.

கண்ணிகள்.

செப்பமுடையதிருநகர்கோனேரி யானே-எந்தன்
தேவியைப்பெற்றதயவுக்காய்நானுனைத் தானே
தப்பவிடுவேனுனையிப்போபொம்மியர்க் காக-பின்னுந்
தான்வருவாய்வினைதேடியென்மேல்பகைக் காக
என்றேயவனையுங் கொன்றுகிரந்தனைத் தறித்து-இனி
ஏதுகவலையென்றேதுரைவீரையன் சிரித்து
காவேரியாற்றினில் கத்தியலம்பியே வீரன்-இரு
கையுங்காலுஞ்சுத்திசெய்துகொண்டுரண சூரன்
மாவேரிக்கொண்டுமகிழ்ந்துகூடாரத்தை நாடி-துரை
வாரதைக்கண்டுமதிபொம்மிநாயகி யோடி
சந்தோஷமாய்வருஞ்சாமிதிருமுகங் கண்டாள்-எந்தன்
தந்தையெங்கேயவர்சேதியென்னசொல்லு மென்றாள்
செந்திருவேயுன்தகப்பன்சேனையுடன் மடிந்தான்-என்று
செப்பிடப்பொம்மியழுதுபடுகளம் நடந்தாள்

விருத்தம்.

அழுதுதான்வந்துபார்த்து அப்பன்றன்சேனையெல்லாம்
பழுதுதவிழுந்துமாண்ட படுகளமெல்லாஞ்சுற்றிப்
புழுகணிமார்பனான பொம்மனன்றனைக்கண்டங்கே
மெழுகுபோலுருகிப்பொம்மி மிகுத்தவித்தலறுவாளே.

பொம்மியம்மாள்படுகளம்வந்து தகப்பனைக்கண்டுபுலம்பல்.

தரு-இ-ம்-புன்னாகவராளி-அடதாளம்.

கண்ணிகள்.

ஐயகோயென்னசெய்வேன் எந்தனது
அங்கமுருகுதிப்போ
வையகத்திலென்னைப்போல் தந்தைக்காகா
மாபாவியெங்குமுண்டோ

தரையிலேயென்னைவிட்டால் எனதுபொன்னின்
தண்டைக்கால்நோகுமென்று
அரையிலென்னைவளர்த்த எந்தனது
ஐயாவைநானிழந்தேன்

பாராளுமென்தகப்பா என்றால்வந்து
பட்டீரோயென்தகப்பா
தேருதெனதுசிந்தை இனியென்ன
செய்குவேனென்தகப்பா

பெண்ணினால்மாள்வையென்று அந்நாளினில்
பிரமன்வபித்தானோ
என்றாலேயுந்தனுயிர் இப்போது
எமலோகஞ்சேர்ந்துதோதான்

கட்டிலின்மெத்தையின்மேல் படுத்துமே
கண்துயிலுந்தந்தையே
வெட்டவெளிமணலில் உறங்கிட
வேதன்விதியிதுவோ

ஆவிபதறிநொந்து மெழுகுபோல்
அங்கமுருகுதையோ
பாவிகையாயுதத்தால் சென்னியற்றுப்
பாரில்விழுந்தீரோ

விருத்தம்.

தந்தையின்பேரில்விழ்ந்து தனித்தவள்புலம்பும்போது
சிந்தையாய்வீரன்சென்று தேவியின்துயரமாற்றி
எந்தனற்புதமேபொம்மி யெழுந்திருமென்றுசொல்லி
சந்தனக்கட்டைகொண்டு சதிருடனடுக்கினரே.



அடுக்கியகட்டைமீதிலரசன்பொம்மணனைவைத்து
முடுக்கியேசெந்தீயிட்டு முடித்தெரிந்தானபின்பு
எடுத்தங்கமாற்றிற்போட்டு இருவரும்ஸ்நானஞ்செய்து
மடக்கொடியுடனேவீரன்வந்துகூடாரஞ்சேர்ந்தான்.

வந்தவனிருந்துஅன்னம் மங்கையைச்சமைக்கச்சொல்லி
சுந்தரன்புசித்துயெந்தன் தோகையேசாப்பிடென்று
விந்தையாயுரைக்கக்கேட்டு மெல்லியாள்துயரங்கொண்டு
எந்தனாயகனேயென்று ஏங்கியேயுரைசெய்வாளே.

என்னுடதகப்பன்மாண்டு எரிந்தவின்றையதினத்தில்
அன்னமும்பழமுமென்னை யருந்திடச்சொன்னீரிப்போ
உன்னுடசாதமென்ன உயர்த்தியோதுரையேயென்ன
மன்னவன்பொம்மிதன்னை வார்த்தையால்தேற்றினானே.

வார்த்தையால்தேறிப்பொம்மி மகிழ்ந்தன்னம்புசித்தபின்பு
காற்றையும்பழிக்கும்வேகக் கடியதோர்புரவியேறி
ஆற்றையுந்தாண்டித்தெற்கே அரிவையுந்தானும்வாய்க்கால்
சேற்றையுங்கடந்துவீரன் சீக்கிரம்வருகின்றானே.

வந்துசிந்தாமணிவடக்கு வாசலினருகிறங்கித்
தந்துகளுடனேயங்கே தனித்தகூடாரம்நாட்டிச்
செந்திருமாதுக்கொப்பாந் தேவியைவைத்துவீரன்
சந்திரமதியேபொம்மி சாதம்நீசமையுமென்றான்.

அன்னமென்னடையாள்பொம்மி யரிவையுஞ்சமைத்தாள்சாத
மன்னவன்புசித்துமோக வஞ்சியைப்பார்த்துசொல்வான்
தென்னவர்புகழும்நல்ல திருச்சினாப்பள்ளிராசன்
தன்னிடம்போறேனென்று சவுதியில்நடந்திட்டானே.

திசையெட்டும்புகழுங்கீர்த்தித் திருச்சினாப்பள்ளியாளும்
விசையமால்சொக்கலிங்க வேந்தர்தன்கோட்டைசென்று
அசையாதசுவாமிவீரன் ஆசாரவாசல்நின்று
கஜமதைப்போலுலாவிக் கின்னரிமுழக்கினானே.

விஜயரங்கசொக்கலிங்கராஜன்வருகிற-விருத்தம்.

அகந்தனில்நின்றுவீணை யடித்திடுநயத்தைக்கேட்டு
மிகுந்தயவுடனெழுந்து வேந்தனுமமைச்சர்சூழ
செகந்தனில்புகழ்பெற்றோங்குந் திரிசிராபுரத்திற்செங்கோல்
சுகம்பெறுவிஜயரங்கச் சொக்கலிங்கேந்திரன்வந்தான்.

தரு-இ-ம்-சாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

சொக்கலிங்கேந்திரன்வந்தான்-விஜையரங்கச்
சொக்கலிங்கேந்திரன்வந்தான்

அனுபல்லவி.

திக்கெங்கும்புகழ்கீர்த்தி சிறக்குஞ்செங்கோல்கொண்டு
மெய்க்கவிஞாயன்மீட்டும் வீணையோசையைக்கண்டு(சொ)

சரணங்கள்.

எங்கும்பளபளென்னவே-முடியில்கொண்டை
இலங்கித்தளதளென்னவே
தங்கக்கவசமெய்யில் தகதகென்றொளிமின்ன
மங்களத்துடன்மாதர் மகிழ்ந்துநடனம்பண்ண(சொக்க)

சரிகைஅங்கிகுலுங்கவே-அதன்மேல்தங்கச்
சந்திராரமு மிலங்கவே
விருதுக்குடைகள்கூட விளங்குஞ்சாமரைபோட
அருகிலுபசரித்து அமைச்சர்புகழ்ந்துநாட (சொக்)

மன்னமன்னவர்சூழவே-இருபுறமும்
மருவலர்படைதாழவே
முன்னமறைகளோத முறையோடாசுநிதஞ்
சொன்னமொழிதவறு மன்னன்விஜயரங்கச்(சொக்கலி)

விருத்தம்.

முழங்கியவீணைவாத்திய மொழிதனைராசன்கேட்டுப்
பழம்பொருள்வேதசாஸ்திரம் படித்தவனின்றுனென்று
விளங்கவேயவனைக்கூட்டி வித்தையாய்சமுகந்தன்னில்
வழங்கியகையோன்றன்னை வாகுடனழைத்திடீரோ.

வசனம்.

அகோவாருங்கள் மந்திரிமார்களே இப்போது நம்முடையஆ சாரவாசலிலேவந்துநின்று வெகுவிநோதமாய் வீணைவாசிக்கிறவனை இன்னானென்றுவிசாரித்தறிந்து அவனை என்னுடையசமுகத்துக்கு அழைத்துவாருங்கள் மந்திரிமார்களே.

விருத்தம்.

பூலோகவரசன்வார்த்தை புனிதமந்திரிமார்கேட்டு
ஆலோசித்தவடம்வந்து ஐயனைப்பணிந்துகண்டு



45

மேலோகமிருந்துவந்த விசித்திரனிவனுமென்று
சிலனையழைத்துவந்து தேசிகன்முன்புவிட்டார்.
பொன்னணிமார்புவீரன் புதுமையைக்கண்டுநாய்க்கன்
நன்னயமாகத்தம்பி நம்மிடத்திருநீயென்று
சொன்னதைக்கேட்டுவீரன் தோத்திரவசனமாக
அன்னையுந்தந்தைநீரோ அன்புடன்காருமென்றான்.

காரென்றுசொன்னவார்த்தை கருணையாய்நாய்க்கன்கேட்டு
வேறொன்றுங்கவலைவேண்டாம் வீரனேவுனக்கிப்போது
தாரோனாயிரம்பொன்மாதம் சம்பளம்வாங்கிக்கொண்டு
தீரனேயெனதுகோட்டை செப்பமாய்க்காத்திரென்றான்.

திக்கெங்கும்புகழச்செங்கோல் செலுத்திடும்விஜயரங்கச்
சொக்கலிங்கேந்திரன்சொன்ன சொற்படிநடந்துகொண்டு
சிக்கெனக்கோட்டைநான்கு திசையிலுஞ்சாரிசெய்து
மெய்க்கவேபொம்மிவாழும் வீடுதியில்வந்துசேர்ந்தான்.

வந்தவனிருந்துபொம்மி மாதுடன்வசனம்பேசி
சந்தோஷமுடனேயன்னஞ் சாப்பிட்டுயிருபேருந்தான்
கந்தகஸ்தூரிபூசிக் கயல்விழிமாதைச்சேர்ந்து
விந்தையாயன்றிராத்திரி விடிந்தவனெழுந்திருந்தான்.

நொண்டிச்சிந்து.

காலையிலெழுந்திருந்து-துரை - காவேரிதீர்த்தத்திலஸ்நானஞ்செய்து
ஆலமுண்டோர்பதம்போற்றி-நல்ல-ஆடைப்பணிகள்மிகத்தரித்து *
ஸ்ரீரங்கனைப்பணிந்து-வீரன்-சிங்காரமானபரியேறி *
பாரெங்கிலும்புகழுங்-கோட்டை-பட்டணமெங்குமேசாரிசெய்து *
வீதிவரும்போது-துரை-வீரனைக்கண்டுமயல்பெருகி *
காதலுடன்மாதர்-இரு-கைசோர்ந்துமெய்சோர்ந்துநிற்கிறதும் *
மதிலேறிப்பார்க்கிறதும்-இவர்-வந்தெனைச்சேராரோவென்கிறதும் *
இச்சகவார்த்தைசொல்லி-பெண்கள்-என்னையணையாரோ வென்கிற
தும், அன்னநடைமாதர்-கூடி-ஆலோசனைசெய்யக்கண்டுதுரை *
மன்னனவ்வீதிவிட்டு-நாய்க்க-மாருடவீதிவரும்போது *
கஸ்திகுரிக்கார-னென்னும்-கிருஷ்ணப்பநாய்க்கனருள்புதல்வி *

விஸ்தார நாயகியாஞ்-செய-வீரலட்சுமிபாளென்றொருபெண் *
வீரன்வருகிறதைக்-கண்டு-மெத்தமயல்கொண்டுநின்றிடவே *
கூர்மையுடன்பார்த்து-அந்தக்-கொம்பனைமேல்மனதின்பம்வைத்து *
வண்டந்தரைசாமி-பொம்மி-மாதிடம்வந்து அன்னம்புசித்து *
நன்றாகப்பள்ளிகொண்டு-அன்று-ராத்திரியினடுச்சாமத்திலே *
காலமேகண்டபெண்ணை-இப்போ- கற்பழிக்கவேண்டுமென்றுமெய்
ப்புடனே நிலனடந்துசென்று-கோட்டைநெடுமதிலேறித்தான்குதித்
து-கன்னிபடுத்துறங்கும்-பொன்னின்-கட்டறண்மனையி னுட்புகுந்
து-உக்னிதமாகநின்றான்-அந்த-ஒண்டொடியாள்மையல்கொண்டு
மெல்லப், பாவையெழுந்திருந்து-முகம்-பார்த்துமயங்கியே கீழ்விழு
ந்தாள், ஆவலுடன்வீரன்-சோப-மாற்றியேமெத்தையின்மேலிருத்தி
குணதுமொழிபேசி-அந்தத்-தையலைக்கூடியேலீலைசெய்து *
மனதுகளிகூர்ந்து-அந்த-மங்கையுமின்பமடைந்துபின்பு *
பலகாரந்தான்புசித்து-நல்ல-பாக்கிலைதின்றுமகிழ்ந்திருந்து *
நலமாகவீரையனும்-கிருஷ்ண-நாய்க்கர்மகளேபோய்வாரேனென்று
சொல்லிவிடைபெற்று-அந்தத்-தோகையாண்மனைவிட்டெழுந்து *
வல்லியெனுமாது-பொம்மி-வாழுமறண்மனைநாடிவந்தான் *

தந்தனனே-தானனே

விருத்தம்.

ரம்மியத்துடனேவீரன் நன்மனைவருகக்கண்டு
பொம்மியுமெழுந்திருந்து பொருமியேகோபங்கொண்டு
செம்மையோவுமக்குமிந்தச் செகப்பிரட்டென்றுகேழ்க்க
நன்மைவான்போலேசுவாமி நயந்துரைசெய்திட்டானே.

நயந்துரைசெய்யக்கேட்டு நாயகிமனமகிழ்ந்து
துயந்தவள்வார்த்தைபேசிச் சுகத்துடனிருக்கும்போது
செயந்தவராதமன்னன் தென்னவனுக்கினைக்குப்
பயந்தவன்போலேவீரன் பாங்குடனெழுந்துசென்றான்.

சூரியனுதிக்குமுன்னே சுந்தரப்பரியிலேறி
வீரையன்கோட்டைபுக்கி வேந்தனுசாருஞ்சென்று
காரியத்துடனே நாய்க்க கர்த்தனைக்கண்டுபேசி
பாரியசமுகந்தன்னில் பாங்குடனிருக்கின்றானே.



பாசம்விட்டசலாநேசப் பரும்புயன்வீரசாமி
ராசமன்னவன்சபைக்குள் நலமுடனிருக்கும்போது
தேசமன்னவர்சூழ்கூடல் தென்னவன்திருமலேந்திர
வாசவனனுப்புமோலை வாங்கியேதூதர்வந்தார்.

தூதர்வருகிற விருத்தம்.

தட்டிசல்லடமுங்கட்டித் தாளினிற்சிலம்புபூட்டி
இட்டமாய்சிரசில்கொண்டை சிங்காரமுடனேகட்டி
வட்டமாய்த்திலதந்தீட்டி வாள்தடிகுலமேந்தி
துட்டரையடக்கும்வீர தூதுவர்வருகின்றாரே.

தரு-இ-ம்-கலியாணி-ஆதிதாளம்.

பல்லவி.

தூதர்நாங்களே-சேதிசொல்லுந்-தூதர்நாங்களே*

அனுபல்லவி.

காதவழியரைநாழியில்நடந்து காணசமுமலைகடந்து
நீதன்திருமலை நாய்க்கனுத்திர
தேயத்துடனேகொண் டுபாயத்துடனேவந்திடும்(தூதர்)

சரணங்கள்.

மங்களமாய்மதுராபுரிப்பட்டணம்
வாழுந்திருமலையன்
செங்கோல்செலுத்தியெந் நாளுந்தமுடன்
தேசத்தையாள்கையிலே
சங்கையில்லாமலே கள்ளர்படைகூடித்
தான்கொள்ளையாட்வே மன்னன்மனம்வாடி
எங்கள்கையிலோலை யீந்திடவேநாடி
ஏகச்சொல்லியேதந்திட வேகத்துடனேவந்திடும் (தூதர்)

தென்மதுராபுரி பட்டணந்தன்னிலே
சீருடனேவாழ்ந்திருப்போம் எங்கள்
மன்னன்திருமலை நாய்க்கன்சொல்லிய
வார்த்தைக்குத்தாழ்ந்திருப்போம்
அநீதமாகவே யின்றைக்குநாளைக்கென்
றட்டிசொல்லுகின்ற துஷ்டர்களையொரு
கண்ணிமைமூடுமுன் தள்ளியிப்போதிலே
கவேகமாய்நடவென்றினி மனவேகமதாய்வந்திடுந்(தூத்

சித்திசையுங்கீர்த்திபெற்றிடுமீனாள்
இருபதத்தைப்பணிவோம் இந்த
அத்திசூழ்நாடெல்லாஞ் சுற்றிநெடியினி
லன்பாய்வரத்துணிவோம்
வெற்றிபெறுந்தமிழ் மீனாட்சிசுந்தர
வீட்சனையனுக்கு விநோதஞ்செய்யவெண்ணி
சத்தியந்தப்பியமூடர்களையிந்திர
சாலத்துடனேகட்டியே சிலத்துடனேவந்திடும் (தூதர்நா)

விருத்தம்.

வந்ததூதுவர்கள்சென்று மன்னவன்சமுகந்தன்னில்
இந்தநற்பதியையாளு மிராஜனைபோற்றியென்று
விந்தையாய்திருப்பந்தன்னை விசையரங்கேந்திரன்முன்னால்
சந்தேகமில்லாத்தூதர் சதுரினில்வைத்துநின்றார்.

சொக்கலிங்கேந்திரன்சொல் விருத்தம்.

ஆரடாதூதர்நீங்கள் அதிவேகமாகவந்து
நேராகயெந்தன்முன்னால் திருபத்தைவைத்துநின்றீர்
கூறடாயிந்தவோலை கொடுத்தனுப்பிட்டோர்தன்னை
சீருடனெனக்கிப்போது செப்புவீர்செப்புவீரே.

வசனம்.

அகோவாருங்கள் தூதர்களே நீங்கள் அதிசீக்கிரமாய்வந்து என்னுடைய சமுகத்தில் திருபத்தைவைத்தீர்கள் ஆகையால் இந்ததிருபம் கொடுத்தனுப்பிவைத்தவர்கள் இன்னாரென்று எனக்குத்தெரியும்படியாகச்சொல்லுங்கள் தூதுவர்களே.

தூதுவர்கள்சொல் விருத்தம்.

செப்புவீரென்ற தென்னவாகேளும்
நற்புவிமதுரை நாட்டினையாளும்
அற்புதன்திருமலை ஆண்டவனனுப்பும்
மெய்ப்புள்ளதிருபம் வேந்தனேயிதுதான்.

வசனம்.

அகோ சரணஞ்சரணமையா சுவாமி சொக்கலிங்கேந்திரா, தென்மதுராபுரியை யாளப்பட்ட மன்னவனாகிய திருமலைநாய்க்கர் கொடுத்தனுப்பிய திருபமையா சுவாமி.



விருத்தம்.

திருமலைநாய்க்கன்தந்த சீருள்ளதிருபமென்று
இருசெவிதன்னிற்கேட்டு என்னகாரணமோவென்று
விரவுடன்சுருளைக்கீசி வேங்கையனிடங்கொடுத்து
வரிசையாய்திருபந்தன்னை வாசித்துஉரையுமென்றான்.

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் வேங்கையா இந்ததிருபந் திருமலைநாய்க்கர் அனுப்பினதாகையால் இதை சீக்கிரமாக வாசியும்பிள்ளாய் வேங்கையா.

வேங்கையன்வசனம்.

அப்படியே வாசிக்கிறேன் சுவாமி.

அகவல்.

உரையென்க்கேட்டு உகந்துவேங்கையன்
திரையுடன்கையில் திருபத்தைவாங்கி
வரைதலைப்பார்த்து வாசித்துரைப்பான்
குறைவிலாத்திரிசிரக் கோட்டையாள்வேந்தே
தேவரீர்தமக்குத் திருமலைநாய்க்கனார்
ஆவலாயெழுதும் அறிக்கைவிண்ணப்பம்
ஸ்ரீமதுதங்கள் திருவுளத்தாலும்
நரிபரியாக்கும் நாதனாரிடம்வாழ்
தாரணிமீனாள் நற்பதம்போற்றி
தாரணிமதுரை தன்னிலேசெங்கோல்
நீதிதப்பாமல் நேமமாயரசில்
தீதிலாதிருந்தேன் திருமலைநாய்க்கன்
எங்குமேகீர்த்தி யிலங்கிடும்நாளில்
சங்கையில்லாமல் தனிக்காட்டுக்கள்ளர்
ஏகமாய்க்கூடி யென்னுடமதுரையில்
வேகமாய்வந்து வினைசெயுங்கொடுமையை
சொல்விடப்போமோ துரையேயென்கோட்டையில்
அல்லும்பகலும் அறையுது நாழியுங்
கோடானுகோடிபேர் கூடியேகொண்டு
நாடானமதுரை ராச்சியந்தனிலே
கோட்டையுங்கொள்ளை கோவிலுங்கொள்ளை
பேட்டையுங்கொள்ளை பெருநிதிகொள்ளை
கொல்லர்கையிற்பணங் கொடுத்தனுப்பிட்டார்.

வல்லடிக்கொள்ளை மாடாடுகொள்ளை
அறண்மனைநீங்கலா யடங்கலுங்கொள்ளை
தாமிதுவென்று சாற்றிடப்போமோ
ஆகையாலென்று லடக்கவுங்கூடா
தேகமாய்ப்பெருகுந் திருட்டையடக்க
தேவரீரவர்களுஞ் சேனையைக்கூட்டி
மூவைந்து நாளில் முடுகியேவ[ந்து]
கள்ளரைச்செயித்தென் கலக்க[த்தை]யாட்டால்
உள்ளதுசொல்வே னுத்தண்டகள்ளர்
என்னையுங்கொன்று என்மதுரைப்பதி
தன்னையுங்கள்ளர் தானுமேயாள்வார்
போலவேகாணுது பொய்யல்லநிசம்நிசம்
சீலமாய்நீங்கள் சீக்கிரம்வருவீர்
என்றுமேதிருபத்தெழுதியசேதியை
நன்றுடன்வேங்கைய நாயக்கனுரைத்தான்
உரைத்ததைக்கேட்டு உள்ளமேகலங்கி
திறந்தப்பிமன்னன் தியங்கியேசொல்வான்

விருத்தம்.

திருபத்திலுள்ளசேதி நிலவரமறிந்துகொண்டு
திரிசிரபுரத்தையாளுந் தென்னவனேதுசொல்வான்
கருமமோமதுரைகோட்டை கள்ளராலழிந்துபோக
வரும்வினைப்பயனேவென்று மன்னவனுரைசெய்வானே.

சொக்கலிங்கேந்திரன் மந்திரிகளுக்குச்சொல் விருத்தம்.

தாஷ்டீகத்துடனேவந்து சங்கரிமதுரைநாட்டில்
போட்டியாய்க்கொள்ளைசெய்யப் பொருந்தியகள்ளர்தன்னை
காட்டிலேதுரத்திப்பொல்லாக் கள்ளரைக்கருவறுத்து
வோட்டிடவல்லோர்யாவர் வகையெனக்குரைசெய்வீரோ.

வசனம்.

அகோவாருங்கள் மந்திரிபிரதானி தளகர்த்தர்களே தென்மதுராபுரிநாட்டிற்குவந்து கொள்ளையடிக்கின்ற பொல்லாத துஷ்டராகிய கள்ளரைத் துரத்திவெட்டி கருவறுக்கப்பட்டபேர் உங்களில் யாவர் திறமையுண்டானால் சொல்லுங்கள் தளகர்த்தர்களே.



தளகர்த்தர்கள்சொல் விருத்தம்.

பொங்கமாய்மதுரைக்கேகிப் போமென்றுதேவரீரும்
எங்கட்குச்சுமக்கும்பாரம் இருநிதிகொடுத்திட்டாலுஞ்
சிங்கம்போல்வலுமையுள்ள திருட்டைசெயிக்கவென்றால்
எங்களால்முடியாதையா ஈஸ்பரன்சாட்சியாக.

வசனம்.

அகோகேளும் சுவாமி பொங்கமாகிய மதுரைநாட்டுக்குப்போங்களென்று எங்களுக்கு நாங்கள் சுமக்கத்தக்க திரவியங்கொடுத்தாலும் தென்மதுரைக்கு எட்டியடிவைக்கோம் அந்தத்திருட்டைச்செயிக்கவும் எங்களால்முடியாது ஆனால் ஒருசேதிசொல்லுகிறோங்கேளும் மகாராசனே.

இதுவு மவர்கள்சொல்விருத்தம்.

சீரணிமதுரைநாட்டுத் திருட்டைச்செயிக்கவென்றால்
ஆரையுநம்பவேண்டாம் ஆயிரம்பேர்க்குச்சேர்வை
வீரையன்தன்னாலாகும் வேறொருவராலாகாது
பார்தனையாளும்வேந்தே பரிந்தனுப்பிடுவீர்தானே.

வசனம்.

அகோகேளுமையா ராசனே அந்தத்திருட்டைச் செயிக்கவென்றால் எங்களில் ஆரையும்நம்பவேண்டாம் உம்மிடத்தில் ஆயிரம் பேருக்குச் சேர்வையா யிருக்கப்பட்ட வீரையனாலே ஆகுமேயல்லாமல் மற்ற ஒருவராலுமாகாது ஆகையால் அவரை அனுப்பிவையுமையா மகாராசனே.

விருத்தம்.

மந்திரிமாருமற்ற மன்னவருரைக்கக்கேட்டு
சுந்தரமுகமலர்ந்து சொக்கலிங்கேந்திரன்சொல்வான்
எந்தனற்புகமேவீரா என்னருகினில்வாவென்று
சந்தோஷமுடனேராசன் தானழைத்துரைசெய்வானே.

சொக்கலிங்கேந்திரன்சொல்-தரு.

கண்ணிகள்.

அதிசூரபராக்கிரம வீரனே நானுன்
மறையக்கேள்துரைமுத்து வீரனே
நிதிகோடிதருகிறேன் வீரனே நீயென்
நினைவின்படிநடக்கும் வீரனே

கள்ளர்செய்யுமிம்சை வீரனே பட்டுக்
கச்சித்திருமலையன் வீரனே
உள்ளக்கலங்கிநொந்து வீரனே-எனக்
கோலையெழுதிவிட்டான் வீரனே

அருமைசிறுமைபட்டு வீரனே-அவன்
அவதிபடுவதினால் வீரனே
மதுராபுரியைநாடி வீரனே-இப்போ
வஉவேகமாய்ச்சென்று வீரனே

ஆருமெதிரிலாக்கள்ளர் வீரனே-அவர்
அகத்தையொடுக்கிவைப்பாய்வீரனே
போர்செய்தவருடன் வீரனே-வெட்டிப்
பொருதிக்கருவறுத்து வீரனே

தன்னரசெனும்நாட்டை வீரனே-சர்வ
சங்காரமாக்கிநீ வீரனே
பெண்ணரசானவெனக்கு வீரனே-நல்ல
பேர்கொடுதுரைமுத்து வீரனே

உன்னாலாகாதகாரியம் வீரனே-பின்னை
ஒருவராலாகுமோசொல் வீரனே
சொன்னசொற்படிசெய்யும் வீரனே-என்
துரைசிங்கக்குட்டிமுத்து வீரனே

விருத்தம்.

மன்னவன்விஜயரங்க மாதுரைதன்னைக்கேட்டு
நன்னயத்துடனேவீரன் நன்றெனச்சம்மதித்து
அன்னவன்கையைநீட்டி அழகுதாம்பூலம்வாங்கி
கன்னுகைதனக்கொப்பான கன்னிவாழ்விடுதிவந்தான்.

வந்தவன்பொம்மிநேரோ வார்த்தைகளெல்லாஞ்சொல்லி
சந்தோஷமுடனேவீரன் தானன்னம்புசித்துக்கொண்டு
விந்தையாய்ப்பொம்மிகூட விடுதியிற்றுயின்றெழுந்து
தந்திரமுத்துவீரசாமியு முரைசெய்வானே.

பெண்ணரசானகன்னி பூவையேமதுரைக்கேக
நன்னயத்துடனேநீயும் நடந்திடுபயணமென்ன,
சொன்னவாய்மூடுமுன்னே தோகையும்பயணமானாள்
அன்னவன்சென்றராசன் அருகினிலுரைசெய்வானே.



தேசமன்னவர்கள்சூழத் திருச்சிறுப்பள்ளியாளும்
ராஜனேமதுரைக்கேகி நாளிதோவாரேனென்று
வாசமாய்விடையைப்பெற்று வந்தாராறுவத்தன்னோர்க்குப்
போசனும்பயணஞ்சொல்லிப் புரவிமேலேறினானே.

ஏறினான்புரவியீதி லிருபக்கம்படைகள்சூழப்
பாரியஆனைசேனைப் பரிகளும்பயணமாக
வீரியத்துடனேசெல்லும் வீரையன்பிலத்தினாலே
தேரியேமதுரைநோக்கிச் சேனைகள் நடக்கின்றாரே.

சேனைகள் மதுரைக்குப்போகும்-தரு.

ஆனைசேனையோடாயிரம்பரி அங்கலிங்ககலிங்கரும்
அச்சிகொச்சிமராட்டருந்துரு மாளவந்தசமன்னரும்

கத்திகேடையமீட்டிசக்கரங் கையினில்வளைதடியும்
கனகதோமரம்பிண்டிபால்முங் கட்டியேபடைகூடினார்

நாய்க்கமார்படையேகபோகமாய் நாலுபக்கமுங்கூடினார்
ராவுத்தர்படைகோடிகூடியே லாகிலர்விகொண்டாடினார்

வெற்றிச்சாமரைவீசவேகுடை வெங்கலச்சின்னமூதவே
வீரையன்பரியேறியேநட வென்னச்சேனைகள்சூழவே

தந்தப்பல்லக்கின்மீதிலேபொம்மி தானுமேறியேகூடவே
சாமிவீரையன்தென்மதுரைக்குச் சாரிசெய்துநடக்கவே

மன்னனுக்குப்பயணஞ்சொல்லியே வாயுவேகமதாகவே
மங்கம்மான்சாலைபாதையின்வழி மார்க்கமாய்நடந்தேகினார்

விருத்தம்.

சிங்காரவீரன்கூடச் சேனையுநடந்துமெய்க்குந்
தங்காமல்நத்தஞ்சென்று தனிப்படயிருந்துபேசி
பங்காருலிங்கநாய்க்கன் வசனமுங்கண்டுகொண்டு
எண்காதம்நடக்கவென்று ஏகினார்தளமுந்தானே.

அடர்ந்துதன்படையுந்தானும் அரிவையாள்பொம்மிகூடத்
தடம்புயனானவீர சாமிதென்மதுரைநோக்கி
நடந்துமேவையையாற்றின் நதிவடக்கரையிலன்பாய்
இடம்படேறுநாட்டி இறங்கினார்ரானுவசேனை.

ரானுவத்தோர்களெல்லாம் நாலுபக்கமுமிறங்கி
ஆனுவத்துடனேவீரன் அவ்விடத்திறங்கிநாளை
காணுவோம்திருமலேந்திர கர்த்தனையென்றுபொம்மி
மானுடன்கூடாரத்தில் வந்துமேயிருக்கின்றானே.

பெண்ணமுதானகன்னி பூவையேசாதங்கொண்டு
தன்னயத்துடன்வாவென்று நலமுடன்புசித்தவீரன்
எண்ணமில்லாமலன்று இரதியுமதனும்போலே
வண்ணமாமெத்தைமீதில் மகிழ்ந்துகண்துயின்றனரே.

துயின்றவனுதையகாலஞ் சூரியனுதிக்குமுன்னே
முயன்றவன்வைகைதன்னில் மூழ்கியேஸ்நானஞ்செய்து
பயின்றவர்புதல்வர்தம்மைப் பட்சமாய்விசாரிப்பார்போல்
நயந்தவன்றளங்கள்தன்னை நலமுடன்விசாரித்தானே.

சேனைகாவலர்கள்மற்றச் சேவகர்தலுக்கரோடு
ஆனையொட்டகமாமெல்லாம் ஆசாரய்ப்பார்த்துக்கொண்டு
மானுபனனவீரன் வந்துபோர்ணியில்நின்று
பேணியேநகபத்தோடு பேரிகைமுழக்கச்சொன்னான்.

வசனம்.

இந்தப்பிரகாரமாக வீரையனனவன் சேனைகளைக்கூட்டிக்கொண்டு தென்மதுரைப்பட்டணம்வந்து வையையாற்றின் வடகரையிலே பாளையத்துடனிறங்கி உடனே ஆனைசேனை முதலான தளங்களை அணியணியாகநிறுத்திப் போர்ணியிலேவந்துநின்று பேரிகையடிக்கச்சொன்னான் அந்தப் பேரிகைசப்தத்தைத் திருமலைநாயக்கன் கேட்டு திடுக்கிட்டெழுந்திருந்து மந்திரி பிரதானிகள்சூழ உப்பரிகைமீதேறி வருகிறவிதங்காண்க.

திருமலைநாயக்கன்வருகிற விருத்தம்.

பேரிகைபறைந்தசத்தம் பெருகியதிருமலேந்திரன்
கூரியசெவியிற்கேட்டுக் கொப்பனவெழுந்திருந்து
மீறியவமைச்சர்சூழ விருதுசாமரைகள்போடப்
பாரியுப்பரிகைநாடி பாங்குடன்வருகின்றானே.

தரு-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

ஜெகராஜர்புகழ் மகாராஜன்கூடல்வாழுந் திருமலைநாயக்கன்வந்தான்

அனுபல்லவி.

சுகமாகவேதென்கூடல் நகராளும்நாளையிலே
துஷ்டனொருகள்ளர் சட்டமாய்க்கூடியே
பட்டணந்தனிற்கொள்ளை யிட்டிடவேகண்டு (ஜெகரா)



ஆருமெதிரில்லாமல் ஊரும்பேரும்விளங்க
அரசாண்டுநானிருந்தேன்
பெருஞ்செல்வமுங்கெடத் திருடர்கொடுமைசெய்யச்
சிந்தைகலங்கி யிருந்தேன்
பேருங்கோட்டையிலிடி பெருக்கயிடித்தாற்போலப்
பேரிகையடிபட மாறியேநினைவுகள்
ஆருடைட்டையென வீருடன்காணவே (ஜெகரா)

கச்சித்திருமலையன் கனவானென்றபேருங்
கள்ளரால்பரிபோச்சே
அச்சமில்லாதயெந்த னடிமைக்குடிகளுக்கும்
அதிகபயமுண்டாச்சே
மிச்சமாய்வலுச்செய்யும் மேனாட்டுக்கள்ளர்களை
வெட்டியேநற்பெலி யிட்டிடவேயொரு
கெட்டிக்காரனெப்போ கிட்டப்படுமோவென்று (ஜெக)

வித்தகியேமதுரை மீனாட்சியுன்பொற்பாதம்
வேண்டித்துதித்தேனனவே
பெற்றபிள்ளையிலுநான் உற்றபிள்ளையெனக்குப்
பேதம்நினைத்தாயெனவே
உற்றதுணையில்லாம லுவந்தெழுமோலைக்காய்
உள்ளபடியெனக் குதவியோவந்தது
கள்ளர்படையோயென்ன காரணமோவென்று (ஜெக)

விருத்தம்.

என்னகாரணமோவென்று ஏங்கியேதிருமலேந்திரன்
தன்னவேயெழுந்துயேமு கட்டறண்மனையுந்தாண்டி
அன்னவனமைச்சர்சூழ ஆசாரந்தன்னில்வந்து
மன்னனுப்பரிகைமீதில் வாகுடனேறிப்பார்த்தான்.

வெண்பா.

பார்த்தான்வடக்குமுகம் பார்மன்னன்சேனைகளை
மாற்றானேகள்ளர் வலுப்படையோ-பார்த்தோடி
வாங்களர்க்காரர்களே வந்தபடையாருதெனத்
தாங்காமலேயறிந்துதான்.

வசனம்.

அகோவாருங்கள் அர்க்காரர்களே நீங்கள் அதிசீக்கிரமாகப்போய் வையையாற்றின் வடகரையிலேவந்து இறங்கியிருக்கிற சே

யிரு

ணைதள்ங்களை ஆருடையசேனைகளென்று அதிசீக்கிரமாய் விசாரித்துவந்து சொல்லுங்கள் அர்க்காரர்களே.

அர்க்காரர்கள் வசனம்.

அப்படியேநல்லதையா திருமலைநாயக்கரே.

விருத்தம்.

அறிந்துவாவென்றசேதி அர்க்காரர்காதிற்கேட்டு
புரிந்தவாய்மூடுமுன்னே போய்வாரோமென்றுசொல்லி
பரிந்தவர்வையைதாண்டிப் பாளையந்தன்னில்வந்து
தெரிந்திடும்படியேவந்த சேனைகாவலரைக்கேட்பார்.

வந்தமன்னவர்கள்சேனை மதிமந்திரிமாரோநீங்கள்
எந்தவூரெங்கேபோறீர் இங்குவந்திறங்குவானேன்
விந்தையாயெங்கள்வேந்தன் விசாரித்துவரவேசொன்னார்
சந்தேகமில்லாமற்றான் சலுதியிலுரைசெய்வீரே.

வசனம்.

அகோவாருங்கள் சேனாதிபதிகளே நீங்கள் எந்ததேசம் எங்கே போகிறீர்கள் இங்குவந்திறங்கினகாரண மென்னவென்று எங்கள் ரசனாகிய திருமலைநாயக்கர் விசாரித்துக்கொண்டுவரச்சொன்னார் ஆகையால் சலுதியில்சொல்லுங்கள் சேனைக்காவலர்களே.

சேனாதிபதிகள்சொல் விருத்தம்.

அன்புடனுரைசெய்யென்ற அர்க்காருஐயமாரே
இன்பமாய்நாங்கள்வந்த தியம்பிடக்கேளீரெங்கள்
திண்புயவிஜயரங்க தீரனுத்தரவால்வந்தோம்
நண்புடன்சென்றுஉங்கள் ராஜனுக்குரைசெய்வீரே.

வசனம்.

அகோவாருங்கள் அர்க்காரர்மார்களே, நாங்கள் திரிசிரபுரத்தை யாளப்பட்ட விஜயரங்க சொக்கலிங்கநாயக்கர் உத்தரவின்படி இவ்விடத்திற்குவந்தோம் ஆகையால் உங்களுடையராசனுக்கு நாங்கள்வந்தசங்கதியை துரிதத்தில் தெரியப்படுத்துங்கள் அர்க்காரர்களே.

விருத்தம்.

திரிசிரபுரத்தையாளுந் தென்னவன்விசயரங்கன்
விரிசைதந்தனுப்பிவைக்க வந்தவரென்றுசொல்ல
இருவருமகிழ்ந்துவாரோ மென்றுசொல்லிவிட்டு
திருமலைநாயக்கன்முன்னே சென்றுகண்டுரைசெய்வாரே.



அர்க்காரர்கள்சொல்-தரு.

திக்குவிசயம்நடத்தியேசெங்கோல் செலுத்தும்வீரனே-அதி
செயகெம்பீரனே
பக்குவமுடன்தாங்களுரைத்த படியேநாங்கள்சென்றோம்-வந்த
படைமன்னரைக்கண்டோம்

வந்தமன்னவர்தங்களைநீங்க ளெந்தவூரென்றோம்-இங்கே
எங்கேவந்தீரென்றோம்
சிந்தைமகிழும்படியெங்கள்மனந்தேறும்வகை சொன்னார்-நாங்கள்
திரிசிரபுரமென்றார்

மன்னன்விஜயரங்கேசனனுப்பிட வந்தோமதுரைக்கு-நீங்கள்
போய்ச்சொல்லுந்துரைக்கு
என்னமனதுமகிழ்ந்துநடந்த இருவரும்வந்தோம்-உங்க
ளிடத்தினிற்புரிந்தோம்

நமக்குதவியாய்வந்தபடையைப்போல் ஞாயங்காணுது-அவர்கள்
நவிலத்தோணுது
சுமக்கும்பாரமவர்கள்பேரில் திருமலேந்திரனே-ரூப
அழகுசுந்தரனே

அர்க்காரர்கள்சொல்-விருத்தம்.

116355

சுந்தரமிகுத்தயெங்கள் துரைசிகாமணியேகேளாய்
சிந்தையுமயக்கவேண்டாம் திருச்சிராப்பள்ளிராசன்
உந்தனுக்குதவியாக உவந்தனுப்பிட்டசேனை
வந்துமேவையையாற்றின் வடக்கிறங்கிருக்குதையா.

வசனம்.

அகோகேளும் ராசசிகாமணியாகிய திருமலைநாயக்கரே தாங்கள் சிந்தைகலங்கவேண்டாம் திரிசிரபுரத்தை யாளப்பட்ட விஜயரங்க சொக்கலிங்கநாயக்கர் உமக்குதவியாகச் சேனைகளையும், சேனாதிபதியையும் அனுப்பிவைத்தார் அவர்கள் வையையாற்றின் வடகரையில் வந்து இறங்கியிருக்கிறார்களையா திருமலைநாயக்கரே.

விருத்தம்.

தளபதியுடனேசேனை தளங்கள்வந்திருக்குதென்ன
நளபதிதனக்கொப்பான நாயகன்மகிழ்ந்துசொல்வான்
அளவில்லாமகிழ்ச்சிதந்த அர்க்காரே நீங்கள்சென்று
இளமைரங்கையன்தன்னை இட்சணமழைத்துவாரீர்.

வசனம்.

அகோவாருங்கள் அர்க்காரர்களே நீங்கள் அதிசீக்கிரமாகப் போய் என்செல்வகுமாரனுகிய ரங்கப்பநாய்க்கனை என்சமுகத்துக்கு அழைத்துவாருங்கள் அர்க்காரர்களே.

விருத்தம்.

மைந்தனையழைத்துக்கொண்டு வாவென்றுதிருமலேந்திரன்
சந்தோஷத்துடனேகூறத் தாண்டியர்க்காரர்சென்று
சுந்தாசவுந்தரியத் துரைரங்கதீராவுந்தன்
தந்தையாந்திருமலேந்திரன் சமுகத்துக்கழைக்கச்சொன்னூர்.

வசனம்.

அகோவாருங்களையா ரங்கப்பநாய்க்கரே தங்களை உம்முடைய தந்தையாகிய திருமலைநாய்க்கர் சமுகத்துக்கு அழைத்துக்கொண்டுவரச்சொன்னாரையா ரங்கப்பநாய்க்கரே.

ரங்கப்பநாய்க்கன்வருகிற-விருத்தம்.

அஞ்சலியோடிச்சென்று அர்க்காரருரைக்கக்கேட்டு
இஞ்சொல்லாய்வார்த்தையாடி ஏகமாய்ப்பணிகள்பூண்டு
வஞ்சியரிருபால்வெண்சா மரைபணிமாரிவாழ்த்த
ரஞ்சிதமுடன்ரங்கப்பநாயக்கன் வருகின்றானே.

தரு-இ-ம்-எதுகுலகாம்போதி-அட்டதாளம்.

| | |
|---|---|
| நன்னகமானுந்தென்கூடல் | மன்னவன்திருமலையன் |
| புண்ணியத்திறனுதித்த | பூபாலன்வந்தான் |
| சென்னியில்கொண்டையுங்கட்டிச் | சித்திரப்பணிகள்பூட்டி |
| மன்னவர்புகழ்ரங்கப்ப | மானுபன்வந்தான் |
| கொஞ்சியேநடைநடந்து | கோகிலம்போல்வார்த்தையாடி |
| ரஞ்சிதத்துரைரங்கப்ப | நாய்க்கனும்வந்தான் |
| சத்தியுத்தமிகயற்கண் | சங்கரிபதம்பணியும் |
| புத்திரனெனும்ரங்கப்ப | பூபனும்வந்தான் |
| மங்கையரிருபுறமும் | வாகுடன்கவரிவீச |
| நங்கையர்சூழரங்கப்ப | நாய்க்கனும்வந்தான் |
| புத்தியாலெதுகுலநாம் | போதிபாடித்தந்தைபதம் |
| நத்தியேதுரைரங்கப்ப | நாய்க்கனும்வந்தான் |



ரங்கப்பநாய்க்கன்சொல் விருத்தம்.

சுந்தரிமீனாள்பாதந் துதிசெய்துமகிழ்ந்தேந்நாளும்
இந்தநற்பதியையாளும் என்தந்தையாரேபோற்றி
அந்தணரானவீர அர்க்காரர்தமைவிடுத்து
எந்தனையழைத்தசேதி யின்னதென்றுரைசெய்வீரே.

வசனம்.

அகோ சரணஞ்சரணமையா என்தந்தையாரே தேவரீர் அர்க்காரரையனுப்பி அடியேனைத் தங்கள்சமுகத்துக்கு அழைப்பித்தகாரியம் இன்னதென்று தெரிவிக்கவேண்டும் பிதாவே.

திருமலைநாய்க்கன்சொல் விருத்தம்.

இன்னதென்றுரைசெய்யென்ற என்னுடமகனேகேளாய்
தென்னவர்புகழும்நல்ல திரிசிரபுரத்துராச
மன்னவருடையசேனை வந்துமேவையையாற்றில்
நன்னயத்துடனிறங்கி நலமுடனிருக்குதப்பா.

நலமுள்ளசுதனேகேளாய் நமக்குமேயுதவியாகப்
பிலமுடன்வந்தசேனை பெருந்தளபதியைநீயும்
இலகுவெண்கரியிலேறி எதிர்கொண்டுஅழைத்திப்போது
நிலவாமுடனேயென்முன் நிமிஷத்தில்வருகுவாயே.

வசனம்.

அடாவாடா என்கண்மணியாகிய புத்திரனே இப்போது திரிசிரபுரத்திலிருந்து நமக்குதவியாகச் சேனைகளும் தளகர்த்தனும்வந்து வையையாற்றின் வடகரையிலே இறங்கியிருக்கிறார்கள் நீ வெள்ளையானையின்மேரிலே ஏறிக்கொண்டு அதிசீக்கிரமாக எதிர்கொண்டுபோய் சநுதியில் அழைத்துவாடாமகனே.

ரங்கப்பநாய்க்கன் வசனம்.

அப்படியே நல்லதையா பிதாவே.

விருத்தம்.

தந்தைசொற்படியேசென்று தளபதிதனையழைக்க
விந்தையாம்பணிகள்பூண்டு வெண்கரிமீதிலேறி
அந்தமாய்ச்சேனைசூழ அர்க்காரர்முன்னேசெல்ல
சுந்தரத்துரைரங்கப்ப சுந்தரன்வருகின்றானே.

வந்தவன்வையைதாண்டி வடகரைமீதிலேறி
சிந்தையுமகிழ்ந்துவந்த சேனைகாவலரைப்பார்த்து

இந்திரானுவத்துக்கெல்லாம் எசமானுய்வந்தவீர
சுந்தரன்கூடாரமெங்கே சொல்லியேகாட்டுவீரே.

வசனம்.

அகோவாருங்கள் சேனைகளே இந்தராஜுவத்துக்கெல்லாம் எசமானுய்வந்த சுந்தர வீரையன்கூடாரம் எது எனக்குத் தெரியப்படுத்துங்கள் காவலர்களே.

விருத்தம்.

சொல்லுவீரென்றுகேட்க்குந் துரைரங்கதீரவெங்கள்
வல்லவனுனவீரன் வாழ்கின்றகூடாரந்தான்
நல்லதோர்பச்சைப்பட்டால் நாற்புறஞ்சாலர்கட்டி
துல்லியமாகவேதோ தோற்றுதுபாருமையா.

வசனம்.

அகோவாருமையா துரைரங்கப்பநாய்க்கரே எங்களெசமானுகிய வீரையன்கூடாரம் அதோ நாலுபக்கத்திலும் பச்சைப்பட்டினல் அலங்கரித்து விநோதமாய்த்தோற்றுதே அதுதானையா ரங்கப்பநாய்க்கரே.

விருத்தம்.

சல்லாபத்துரைகூடாரந் தானிதுவென்றுசொல்ல
நல்லாண்மையுடன்ரங்கப்ப நாய்க்கனுமகிழ்ந்துசென்று
வல்லமையுடையவீர மன்னவனருகிற்சென்று
சல்லாபத்துடன்ரங்கப்ப தயாளனுமுரைசெய்வானே.

ரங்கப்பநாய்க்கன்சொல் விருத்தம்.

தேசமன்னவர்சூழ்கூடல் தென்னவன்திருமலேந்திர
ராசனெந்தந்தையும்மை நலமுடனழைக்கச்சொன்னர்
போசனேயெழுந்துவாரும் போகலாங்கோட்டைக்கென்று
நேசமாய்வார்த்தைபேசி ரங்கப்பனழைத்திட்டானே.

வசனம்.

அகோவாருமையா வீரையனே என்தந்தையாகிய திருமலைநாய்க்கர் உம்மை எதிர்கொண்டு அழைத்துவரச்சொன்னர் ஆகையால் எழுந்திருந்து கோட்டைக்குவாருமையா வீரையனே.

விருத்தம்.

திருமலைநாய்க்கருமைச் செப்பமாயழைத்தாரென்று
தருமவானெனும்ரங்கப்ப நாயக்கனுரைக்கக்கேட்டு



மறுமொழிபகர்ந்திடாமல் மன்னன்வீரப்பசாமி
சருரெனவெழுந்துபொம்மி தன்னுடன்பயணமானுன்.

பொம்மியும்பல்லக்கேறிப் புறப்படவீரசாமி
செம்மையாம்வேகம்பெற்ற தேசியின்மீதிலேறி
கம்மியேயிருபால்சேனைக் காவலருகிற்சூழ
ரம்மியத்துரைவீரையன் நலமுடன்வருகின்றனே.

தரு-இ-ம்-புன்னுகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

துரைவீரையனும்வந்தானே-திருமலைய
துரந்தரன்சமுகத்திற்றனே

அனுபல்லவி.

மறைவேதமும்புகழ  மருவலர்புடைசூழ
வையைநதியைக்கடந்து  வல்லபவுல்லாசமுடன் (துரை)

சரணங்கள்.

செய்பேரிகை முழங்கவே-வீரையனென்று
தென்மதுரைபேர்விளங்கவே
நயமாய்மொழிபகர்ந்து  நன்னகரீதென்றுவந்து
தயவாய்த்திருமலையன்  சஞ்சலமகற்றவென்று (துரை)

ரதிபொம்மிநாயகி கூடத்-தண்டிகையேற
நங்கையர்வெண்சாமரைபோட
அதிபன்ரங்கப்பநாய்க்கன்  அருகிலுபசரிக்க
ததியிதுவெனச்சேனை  தளத்துடனதிசூர (துரை)

சங்கரிமீனுளைப் பணிந்து-கள்ளரைவெட்டிச்
சதைத்திட்டநெஞ்சந் துணிந்து
சங்கையில்லாவிருதுள்ள  தளமன்னர்புடைசூழ
செங்கையில்மந்த்ரவாள்கொண்டு சித்திரப்பரியிலேறி (துரை)

விருத்தம்.

வருவதைக்கண்டுகூடல் மன்னவன்திருமலேந்திரன்
இருபுசம்பெருகிமென்மே லினியசந்தோஷமாகித்
தருமதேவதைபோல்வந்த சாமிவீரையனேயென்று
கருதியேயெழுந்துநாய்க்கன் கைகொடுத்தழைத்திட்டானே.

இதுவுமது.

கைகொடுத்தழைத்துவந்து கனகசிம்மாசனத்தில்
பையவேயிருத்தித்தானும் பக்கத்திலிருந்துகொண்டு

செய்யும்பாசாமெல்லாஞ் செய்தவீரையனைப்பார்த்து
வெய்யவேயெழுந்து நாய்க்கன் விசனமோடுரைசெய்வானே.

திருமலைநாய்க்கன்சொல்-தரு-இ-ம்-பைரவி-சாப்புதாளம்.

செகராசர்புகழ்பெற்ற செயதுரைமுத்து வீரையனே-அந்த
திக்குவிசையரங்கசொக்கேசனனுப்பித்த வீரையனே
மகராசனெனும்நவ மணிமாலைபுனைமுத்து வீரையனே-எந்தன்
மனதிற்கவலையொன்று வழுத்தக்கேள்துரைமுத்துவீரையனே

ஆருமெதிரில்லாமல் அரசாண்டிருந்தேனுன் வீரையனே-கள்ளர்
அலங்கோலஞ்செய்தென்னை அவதிப்படுத்துகிறார்வீரையனே
சீருஞ்செல்வமுங்கெடத் தேசத்தையழிக்கிறார்வீரையனே-அந்தத்
திருட்டரகமடக்கத் தெய்வம்போல்நீவந்தாய் வீரையனே

நன்றைக்கோறியெசெங்கோல் நடத்துமென்றன்மைக்கோ வீரைய
னே-பொல்லா
நமனைப்போல்வலுச்செய்யும் நாட்டுக்கள்ளர்கூடினார் வீரையனே
என்றைக்குச்சுகமாகயிருந்தாசாள்வேனுன் வீரையனே-இந்த
எமகண்டத்திருடரால் இமிசைபடாமல்முத்து வீரையனே

காட்டில்திரிந்தோர்வந்தென்நாட்டைவளைந்துகொண்டுவீரையனே
கலக்கமில்லாமலென்னைவிலக்கவல்லவனீயேவீரையனே [செய்யுங்
கூட்டிலடைத்தகிட்டுக்குருவிபோல்தவிக்கிறேன்வீரையனே-குப்பி
கொதிக்குதேயவர்செய்யுங்கொடுமையால்துரைமுத்துவீரையனே

கதியுனையல்லால்வேறு கிடையாதெனக்குதவி வீரையனே-உந்தன்
சீர்த்திநிலைக்கவெந்தன்கிலேசமகற்றிவைப்பாய் வீரையனே
சதிசெய்யுங்கொடுங்கள்ளர் தளத்தைக்கருவறுத்தால்வீரையனே-என்
சந்தைதாய்குருதெய்வந் தானுநீயேமுத்து வீரையனே

விருத்தம்.

தந்தைதாய்குருநீயென்று சாற்றிடக்கேட்டுவீரன்
சிந்தையுமகிழ்ந்துசொல்வான் திருமலைநாய்க்கனேகேள்
நிந்தனைசெய்யுங்கள்ளர் நெத்தியைப்பிளந்துதள்ள
எந்தனுலாகுங்கண்டீர் இனிவிடுந்துயாந்தானே.

நாட்டகவிருந்தகள்ளர் தம்மைநான்கருவறுத்துன்
நாட்டினில்பயமில்லாமல் நாளொட்டுக்குள்ளேசெய்வேன்
வாட்டமேயினிமேல்வேண்டாம் மன்னர்மன்னவனேயென்று
நாட்டமாய்வீரசாமி நாய்க்கனுக்குரைசெய்வானே.



வீரையன்சொல்-தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.
பல்லவி.
மனதிற்கவலையினிமேல்வையாதே மன்னன்திருமலைநாய்க்கனே *
அனுபல்லவி.
உனதுபதியினிமேல்திருடர் உபத்திரமில்லாச் சுகத்தைப்பெறுவீர் (
மனதிற்கவலை
சரணங்கள்.

தென்மதுராபுரித்தேசத்தைமுன்னிலுஞ்
சீர்பெருகஅர சாளுவீர்
நன்மையுடன்செங்கோல் நீதிவழுவாமல்
ராஜராஜேந்திரன்போல் வாழுவீர்
கண்ணிமைமூடுமுன் கள்ளர்குலத்தைநான்
கைகொண்டுவெட்டிக் கருவையறுக்கிறேன் (மனதிற்)

மண்டலமெங்குமென்கீர்த்திவிளங்கவே
வைக்கிறேன்கள்ளரை மாய்க்கிறேன்
கண்டுகொள்ளுமெந்தன் வல்லபமுள்ளதைக்
கர்த்தன்திருமலை நாய்க்கனே
சண்டப்ரசண்டஉத் தண்டமதாகவே
தாக்குறேனுன்பயந் தீர்க்குறேனிட்சணம் (மனதிற்)

சத்திமீனும்பா ளிருபதம்போற்றியே
சஞ்சலமில்லாமல் வாழவே
இத்திசையுள்ளோருன் வார்த்தைக்கடங்கி
இருந்துன்னடியினிற் றாழவே
வெற்றிபெறுங்கள்ளர் விரும்பப்பட்டுக்கி
மேனுடெங்கும்பெண்கள் தானுளச்செய்யுறேன் (மனதிற்

விருத்தம்.

மனதினிற்கவலைவேண்டா மன்னர்மன்னவனேயென்று
தனதுடன்வீரசாமி சாற்றியமொழியைக்கேட்டு
கனவெகுமதியீந்து காவலர்தம்மைநோக்கி
சுதனமதில்விடுதி நன்றாய்ச் சிங்காரஞ்செயுமென்றானே.

வசனம்.

அகோவாருமையா திருமலைநாய்க்கரே நீர் இனிமேல் மனக்க
வலை வைக்கவேண்டுவதில்லையென்று வீரையன்சொல்லியவார்த்தை

யைக்கேட்டு மிகவுஞ் சந்தோஷப்பட்டு வீரையனுக்கு வேண்டிய வெகுமதிகளுங்கொடுத்து தன்னுடைய காரியக்காரர்களை யழைத்து ஒருவிடுதி சிங்காரமாக அலங்காரஞ் செய்யச்சொன்னான் திருமலை நாய்க்கன்.

விருத்தம்.

விடுதிசிங்காரஞ்செய்து வேந்தன்முன்வந்துகூறச்
சுடுதியில்திருமலேந்திரன் சாமிவீரையனைப்பார்த்து
கடுகவேவிடுதிக்கேகுங் காளைவீரையனேயென்ன
கிடுகிடென்றதிரப்பேரி கெம்பீரமுடனெழுந்தான்.

மதுரைவாழ்சொக்கலிங்க மன்னனையனுப்பிவிட்டுக்
குதிரைமேலேறிச்சேனை கொக்கரித்தருகிற்சூழ
அதிசயக்கள்ளர்செய்யு மகத்தையையழிப்பேனென்று
மதிபொம்மியுடனேவீரன் வந்துமேவிடுதிசேர்ந்தான்.

சேர்ந்திடும்போதுசாமி செங்கதிர்மலையிறக்க
பாந்தியமுடனேசாதம் பலகனிபுசித்தப்போது
காந்தியிலொளியாள்பொம்மி கன்னியுந்தானுமாக
ஏந்தியமெத்தைமீதி லிருவருங்கண்துயின்றார்.

துயின்றவருதையகாலஞ் சூரியனெழுந்தபோது
பயின்றுடன்வெளியில்வந்து பட்டணம்பார்க்கவென்றே
எயின்றதோர்தளங்களோடு ஏகியேநகரமெல்லாம்
நயம்படப்பார்த்துவீரன் ரதிபொம்மியிடத்தில்வந்தான்.

வீரையன்சொல் கந்தார்த்தம்.

வந்தவன்பொம்மிதன்னை வாகுடனழைந்துச்சொல்வான்
எந்தனற்புதமேகேள்நா மிருபேருமாகச்சென்று
நந்தகோவிந்தன்தங்கை நாயகிமீனாள்பாதஞ்
சிந்தையில்வைத்துப்போற்றி

தெரிசிப்போம்வாராய்மானே-ஜெகதாம்பாளைத்
தெரிசிப்போம்வாராய்மானே
நரிபரியாகச்செய்த நாதனுமையாள்பாதம்
வரிசையாயிருபேரும் வாழப்பணிந்துபோற்றி (தெரி)



தெரிசித்துத்துதிக்கநாமுஞ் செங்கண்மால்தங்கையர்க்கு
வரிசையாயாயிரம்பொன் வாகுடன்சிலவழித்து
அறுவகைப்பழங்கள்வைத்து அபிஷேகஞ்செய்துபோற்றி
இருவரும்வருவோம்பெண்ணே

எழுந்தென்பின்வாராய்-பொம்மிமாதே
எழுந்தென்பின்வாராய்
எழுந்தென்பின்வாராய்நாம் இருபேரும்போய்மீனாள்
செழுந்தாமரைமலர்ருடுந் திருப்பதந்தெரிசிக்க (எழுந்)

விருத்தம்.

திருப்பதந்தெரிசித்தேற்றத் தேவிநீவாராயென்று
விருப்பமாய்ப்பொம்மிதன்னை வீரையனழைத்துக்கொண்டு
உருக்கமாய்வையைதன்னி லுவந்துமேஸ்நானஞ்செய்து
மருக்கொழுந்தணியுமீனாள் மலர்ப்பதந்தொழுதிட்டானே.

தொழுதுமீனம்பாள்பாதஞ் சொக்கநாதரையும்போற்றி
பழுதில்லாவரங்கள்பெற்றுப் பாங்குடனிருவருந்தான்
செழுமதியுதித்தாற்போலுஞ் சென்றவர்விடுதிசேர்ந்து
வழுவிடாதிருந்து அன்னம் வாகுடன்புசித்தாரன்றே.

அன்னமும்பழமுநல்ல அறுசுவையுடன்புசித்து
வன்னமாளிகையைவிட்டு வாகுடன்பரியிலேறி
மன்னவன்சமுகஞ்சென்று வார்த்தைகள்பேசிக்கொண்டு
தென்னகர்மதுரையாதித் தெருவீதிசாரிவந்தான்.

சுவைதருமதுரைநாட்டில் தோகையர்தன்னைச்சாமி
நவசித்திரப்பெண்களென்று நாட்டமாய்க்குறித்துவந்து
அவசியமுடனேவீர னழிக்கவேநினைத்துக்கொண்டு
சுவையொன்றும்நினைக்கவில்லை கன்னியர்மோகத்தாலே.

மோகமேயதிகரித்து மொய்குழல்மயக்கிற்சிக்கிப்
போகமேபெரிதாயெண்ணிப் பொம்மியைமறந்துவீரன்
வேகமாய்க்கள்ளர்செய்யும் வினைதனைமறந்தானென்று
தாகமாய்த்திருமலேந்திரன் சாமியையழைத்துச்சொல்வான்.

திருமலேந்திரன்சொல் கந்தார்த்தம்.

நல்லதுதம்பிநீயும் நம்முடனாயாதந்தீர்க்க
வல்லவனென்றுன்னை வரச்செய்தகதையைக்கேளு

உல்லாசமுடனேமுன்னே உறவிதான்மெத்தப்பேசி
சல்லாபத்திருடாகோட்டை

தன்னையுங்கெடுக்கவோவந்தாய்-உன்றனாலேயாதி
என்னையுமுடுக்கவோ வந்தாய்

முன்னையேகள்ளர்கள்செய்யு மோசமில்லாமல்காக்க
உன்னையேயழைத்ததற்கென் றாலெ(அ)றுமாதர்கள்(தன்னை)

விருத்தம்.

கள்ளராலிமிசைபட்டுக் கலங்கியேயிருந்தவென்னை
உள்ளமேதெளியப்பேசி யுதவிபோலிருந்தென்றுட்டைக்
கொள்ளைசெய்யாமற்செய்து கோதையர்கற்பழித்தாய்
தெள்ளியதிருடனுன்போல் தேசத்திலில்லைதம்பி.

வசனம்.

அகோவாருந்தம்பி வீரையனே கொடும்பாவிகளான கள்ளர்களால் இம்சைப்பட்டு மனதுகலங்கியிருந்த என்னை என்னுள்ளந் தெளியத்தக்கதாக எனக்கு உதவிபோலவந்து மனதிற்கவலைவேண்டாம் உன் கலக்கத்தைத் தீர்த்துவைக்கிறேனென்றுசொல்லி இப்போது நீ என்னுடையபட்டணத்திலே இருக்கப்பட்ட பெண்களை கற்பழிக்கத்தலைப்பட்டாய் ஆனால் உன்னைப்போல தெள்ளிமையுடைய சல்லாபத்திருடர் இந்தத்தேசத்தில் நானெக்குக்கண்டதில்லைதம்பி வீரையனே.

விருத்தம்.

சல்லாபத்திருடனென்று சாற்றிடத்திருமலேந்திரன்
வல்லமையுடையவீர மன்னனுங்காதிற்கேட்டுப்
பொல்லாதகாளைவேங்கைப் புலியெனக்கதும்பிச்சொல்வான்
சொல்லாதவார்த்தைசொன்னீர் சிந்தையிற்பொறுத்தேன்மன்னா.

சிந்தையுட்பொறுத்தும்ராசன் செப்பியவசனத்தாலே
அந்தரம்பூமியெங்கு மதிர்ந்திடக்கோபம்வந்து
இந்தநாழிகையிற்கள்ளர் எவ்விடத்திருந்தபோதும்
பந்தையக்கூறிக்கொல்லப் பாக்கிலைதாருமன்னா.

வசனம்.

அகோவாரும்திருமலைநாய்க்கரே நீர் சற்றும்எண்ணிப்பாராமல் என்னைச் சல்லாபத்திருடனென்று சொல்லலாமா நல்லது ஆகட்டும் இந்தநாழிகையில் கள்ளப்பயல்கள் எவ்விடத்திலிருந்தபோதிலும் துண்டுதுண்டாக வெட்டியெறிவேன் எனக்குத் தாம்பூலம் கொடும் திருமலைநாய்க்கரே.



56

விருத்தம்.

பாக்கிலைதாருமென்று பகர்ந்தவேவீரசாமி
தாக்கியமொழியைக்கேட்டுத் தாரணிமன்னனான
நாய்க்கனும்பயந்தெழுந்து நலமுள்ளவார்த்தைபேசி
சீக்கிரமருகில்வந்து சிந்தைநொந்துரைசெய்வானே.

திருமலைநாய்க்கன்சொல் கந்தார்த்தம்.

நாற்றிசையெங்கும் நடுங்கவேகள்ளர்
சுற்றுவன்போலே கூடியேகொண்டு
ஆத்திரத்துடனே அமடுசெய்யாமல்
காத்திடுவாய்நீ.

பார்த்திபனானவீரனே-இதுசமயம்
பாரும்வீராதிவீரனே.

பார்த்திபனேகேள்கள்ளப் பயல்கள்செய்யிம்மிசையால்
சேற்றில்நட்டகம்பம்போல் தியங்குதெனதுசிந்தை(பார்த்தி

இதுவேசகாயமெனவேநினைந்தெனிடர்தீரும்வீரதுரையே
மதுராபுரிக்குளினியாருனைப்போல் மனதுக்கிசைந்தவர்
சதியாளுமட்டுமுனதானநட்டைபுகழ்தாநினைப்பிலமறவேன்
சதிசெய்தகள்ளர்தனையேவதைக்கத்

தருணமையாநடத்திடும்சாமி-வீரையா
தருணமையாநடத்திடும்சாமி

கள்ளர்படைகளைச்
திரணமாகவே
சித்திரவதைசெய்து வெற்றிகொண்டுவா(தருண)

வெண்பா.

சித்திரவதைசெய்துகள்ளர் சேனைகளைக்கொன்றழக்கி
வெற்றிபெற்றுவாருமுத்த வீரையனே-சத்தியமாய்
பாக்கிலையிந்தாருமென்று பாராள்திருமலைய
நாய்க்கன்கொடுத்தனுப்பினான்.

வசனம்.

அகோவாரும்தம்பி வீரையனே என்மனது சந்தோஷமாகும்படியாய் நீபோய் அந்தகொடும்பாவிகளான கள்ளர்களை வெட்டியெறிந்துவருவாய் இது சத்தியம் இந்தாரும் தாம்பூலம் அதிசீக்கிரமாகப்புறப்படும் வீரையனே.

விருத்தம்.

பாக்கிலைவாங்கிக்கொண்டு பரக்குட்டனடவுமென்று
நாய்க்கனுத்தாரவுபெற்று நலமுடன்வீரசாமி
சீக்கிரம்பொம்மிவாழுஞ் செம்பொன்மாளிகையில்வந்து
பாக்கிலைதன்னையந்தப் பைந்தொடிகையிலீய்ந்தான்.

பைந்தொடிகையிலீய்ந்து பரும்புயன்வீரசாமி
சந்தோஷத்துடனேபொம்மி தன்னுடனேதுசொல்வான்
எந்தனுயிரேகேளாய் இப்பவேகள்ளர்தம்மை
சிந்தைகள்வெவ்வேறாகச் செய்துநான்வாரேன்பெண்ணே.

வீரையன்சொல்-தரு-இ-ம்-காம்போதி-அட்தாளம்.

பல்லவி.

கள்ளரைச்செயித்திடப்பெண்ணே-சென்று
கடுகிபேவருகிறேன்கண்மணியே

சரணங்கள்.

வள்ளல்மீனாட்சியின்மதுரையில்வந்து
வாருடனேவெகுபடைகூடி
கொள்ளைகளாடியேபாவிகள்செய்திடுங்
கோரணிக்காய்பொம்மிமாதரசே (கள்ளரை)

வந்துயிந்நாள்வரைசுந்தரதிருமலை
மன்னவன்படுந்துயரதீர
சுந்தரப்பரிமிசையேறியேநான்வெகு
சுறுக்கினில்போய்வாரேன்பெண்ணரசே (கள்ள)

அஞ்சலென்றோர்கள்தன் நெஞ்சிற்கவலையை
யகற்றிடநான்போய்வருமட்டும்
பஞ்சணைமீதினிலேமகிழ்வாயிரு
பைந்தொடியேபொம்மிமாதரசே (கள்ளரை)

விருத்தம்.

இப்படியாகவீரன் ஏகாந்தவார்த்தைபேசி
மெய்ப்புடனிருக்கும்போது மேவுட்டுக்கள்ளரெல்லாஞ்
செப்பமாய்க்கூட்டஞ்சேர்ந்து சிறந்தஆயுதங்கள்கொண்டு
கொப்பெனமதுரைமேற்குக் கோட்டைவாசலில்வந்தாரே.



கள்ளர்கள் கொள்ளையடிக்குதல்.

விருத்தம்.

வந்தவர்நாலுகோட்டை வாசலும்வளைத்துக்கொண்டு
சந்தோஷத்துடனேமீனாள் சன்னிதிமுதலாயுள்ள
அந்தணர்வீதிராச அமைச்சர்கள்வீதிதோறும்
விந்தையாய்ப்புகுந்துகள்ளர் மிகுகொள்ளையாடினாரே.

தரு-இ-ம்-பந்துவராளி-சாப்புதாளம்.

பல்லவி.

கொள்ளையாடினார்-கள்ளர்கூடிக்-கொள்ளையாடினார் ஈ.

அநுபல்லவி.

துள்ளியேமதுரைநாலுதிக்கிலுஞ் சூழ்ந்தரும்புகும்பாகவே
தெள்ளிமையுடன் குலவையிட்டவர்
பள்ளியறைகளி லுள்ளிற்புகுந்து (கொள்)

சரணங்கள்.

கத்திசேடையீட்டிசக்கரங் கைதனில்வளைதடியும்
பத்திபத்தியாய்க் கொண்டுமதுரைப்
பட்டணமெங்கும் கொட்டமடித்துக் (கொள்ளை)

பேட்டையுக்கடைவீதியும்புகழ் பெருந்திருமலைநாய்க்கன்
வீட்டையும்புகுந் தேதிருடியே
வெட்டிவெகுநிதி கட்டியேகொண்டு (கொள்ளை)

சுந்தரிமீனாள்கோவிலுங்கொள்ளை துவக்கியேவெகுமுடுக்கதாய்
பந்துவராளியின் ராகம்பாடிச்
சந்துதெருக்களில் வந்துமுடுகி (கொள்ளை)

விருத்தம்.

ஆடினார்கொள்ளையெங்கும் அதவடியாகவப்போ
வாடியேதிருமலேந்திரன் மாளிகையடைத்துக்கொண்டு
நீடியேபெருமூச்சிட்டு நிராயிசாயிருக்கும்போது
நாடியேவீரன்பொம்மி நாயகிக்குரைசெய்வானே.

கலித்துறை.

தேனேயமுர்தகுணவான்திருமலைத் தென்னவன்சொல்
நானேவிரும்பிவந்தேனேயிந்நாழிகை நண்ணியந்தக்
கானேகுடிகொண்டபொல்லாதகள்ளர் கருவறுக்க
மானேயெனக்கினிதானேவிடைகொடு வஞ்சியரே.

வசனம்.

அகோவாராய்பெண்ணே பொம்மிநாயகியே இப்போது அமுர்தகுணவானாகிய திருமலைநாய்க்கன்படும் இம்சை தீரும்படியாய் இத்தக்ஷணத்திலேபோய் அந்தப் பொல்லாதகள்ளரைக் கருவறுத்து வருகிறேன் எனக்கு விடைகொடுத்தனுப்பும்பெண்ணே.

பொம்மியம்மாள்சொல் கலித்துறை.

பொல்லாதகள்ளர்தமையேவதைத்திடப் போறனென்ற
வல்லமையுந்தன்மனங்கொண்டபோது மறுவசனஞ்
சொல்லுவதேது சுகமாகச்சென்றுசுறுக்கினிலே
சல்லாபமாய்வருவீரிதுகாண்விடை தானுமக்கே.

வசனம்.

அகோவாரும் என்பிராணநாதனே நீர்போய் அந்தப் பொல்லாதகள்ளர்களை செயித்துவருகிறேனென்ற வல்லமை உம்முடைய இருதயத்திலே யிருக்கும்போது மறுவசனமேது ஆகையால் நீர் சுகமாகப்போய் செயித்துவாரும் இதுதான்விடை போய்வாரும்சுவாமி என்பிராணநாதா.

விருத்தம்.

விடைதனைப்பெற்றுக்கொண்டு வீரையன்பரியிலேறி
மடமயில்தன்னைப்பார்த்து வாகுடனேதுசொல்வான்
விடமெனுமெனதுகையின் வீரவாள்தனையெடுத்துத்
திடமுடன்கொண்டுவாராய் சீக்கிரமுகூர்த்தமானே.

வசனம்.

அடிவாடி பெண்ணே பொம்மிநாயகியே இப்போது என் வீரவாளை சீக்கிரமாயெடுத்து வாழ்த்திக்கொடும்பெண்ணே.

விருத்தம்.

வீரவாளெடுத்துக்கொண்டு வேகமாய்ப்பொம்மிவந்து
தீரனேகள்வர்தம்மைச் செயித்துநீர்வாருமென்று
காரொளுங்கூந்தல்மாது காளைவீரையனார்கையில்
கூரியவீரவாளைக் கொடுத்துமேயனுப்பினாளே.

வீரையன் சண்டைசெய்யும் கந்தார்த்தம்.

உத்தண்டமுடனேவீர னுருவியேவீரவாளை
மெத்தவேகொக்கின்சேனை மேவும்ராஜாளிபோலே
தத்துவத்துடனேபாய்ந்து சண்டமாருதம்போல்சாமி
சுத்தியேவளைத்துக்கொண்டு.



துண்டுதுண்டாகவெட்டினான்-கள்ளர்படையைத்
துண்டுதுண்டாகவெட்டினான்

| | |
|---|---|
| துண்டுதுண்டாகவெட்டிக் | கொண்டைகளைப்பிடித்து |
| முண்டுசெய்தபயல்கள் | மண்டைமூளைசிதற(துண்டு) |

மண்டையின்மூளைசிந்த மாருமாறொன்றுசொல்லி
சண்டப்ரசண்டவீர சாமியும்நொறுக்கிக்கொண்டு
மண்டகப்புத்தியுள்ள துஷ்டராங்கள்ளர்தம்மை
தெண்டித்துப்பரிநடத்திச்

சித்திரவதைகள்செய்தானே-கிலதுபேரைப்
பற்றிச்சிரத்தைக்கொய்தானே

| | |
|---|---|
| சித்திரவதைகள்செய்தான் | சுற்றிவளைத்துக்கொண்டு |
| குத்துயிரோடேகள்ளர் | கத்தியபயமிட(சித்திர) |

விருத்தம்.

இப்படிவீரசாமி இடம்வலஞ்சாரிபாய்ந்து
சற்பனைசெய்துகள்ளர் தன்களைவதைக்கும்போது
கொப்பெனப்பின்னுங்கள்ளர் கோடானுகோடிபேர்கள்
செப்பமாய்வந்துவீர தீரனையெதிர்த்திட்டாரே.

வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் வீரையனானவன் கள்ளர்சேனைகளிற்புகுந்து தாறுமாறாய் வெட்டியெறிவதைக்கண்ட பெரியகள்ளர்கள் சேனைகளைக்கூட்டி ஈட்டி வளைதடி முதலிய ஆயுதங்களைக்காட்டி வீரையனை சூழ்ந்துகொண் டெதிர்த்தார்கள்.

கந்தார்த்தம்.

எதிர்த்திடக்கண்டுவீரன் இருவிழியனல்போலாகிக்
கொதித்திடுஞ்சினங்கொண்டப்போ கொக்கரித்தாகந்தன்னைக்
குதித்துமேதிருப்பிப்பின்னுஞ் சூழ்கள்ளர்தளத்தையெல்லாம்
மிதித்திடவென்றுமுந்த

வீரன்பரிநடத்தினான்-கள்ளர்படையைப்
பாரிலுய்யக்கிடத்தினான்

| | |
|---|---|
| வீரன்பரிநடத்திச் | சாரிசெய்யுமிடத்தில் |
| சூரனுங்கள்ளர்மெய்ய | பாரிவீசல்போலுப்ப (வீர) |

பரிமீதியாலேபாதி பட்டிடக்கள்ளர்சேனை
வெறிபிடித்தவர்கள்போல மிரளவேமுழித்துக்கொண்டு
பரிபரியாகக்கள்ளர் பதிதனைவிட்டேயோட
துரிதமாய்க்கண்டுவீரன்

துரத்தித்துரத்திவெட்டினுன்-கள்ளருடைய
சிரத்தைத்தோரணங்கட்டினுன்
திறத்தில்மிகுந்தகள்ளர் — குரங்கைப்போல்விழிக்கவே
செங்கையின்வாளினு — லங்கம்வேருகவே
எங்கேபோறீரென்று — சிங்கம்போலப்பாய்ந்து (து

விருத்தம்.

சிங்கம்போற்பாய்ந்துவெட்டுஞ் செயவீரன்வலிமைகண்டு
அங்கமுமுருகிக்கள்ளர் அலறியேமண்மேல்வீழ்ந்து
எங்களைக்கொல்லவென்று ஏமனைப்போலேவந்த
துங்கனேயபயமென்று சொல்லியேபுலம்புவாரே.

கள்ளர்கள்புலம்பல்.

தரு-இ-ம்-நீலாம்புரி-அடதாளம்.

பாவியுமக்கபையம் — எங்கள்பழி
பாவமுமக்கிடுங்காண்
ஆவிபதறப்பதற — வதைப்பதால்
அங்கமுருகுதையோ

தன்னரசுநாட்டில் — எந்நாளுந்
தழைத்தோங்கிவாழ்ந்திருந்தோம் — இப்போ
நன்னகர்கூட்டிலே — வந்துநாங்கள்
நாசமடைந்தோமே

நம்மிலுஞ்சூரர்ந்த — தென்
நாட்டினிலில்லையென்று
வன்மனதாலேயிந்த — மதுரையில்
வந்துபடைசேர்ந்தோம்

ஆடிநேரங்கொள்ளைகளை — இந்நாள்வரை
யாருமெதிரில்லாமல் — எங்கள்
கோடிபடையும்வதைக்கவோநீரித்தக்
கோலமெடுத்துவந்தீர்

எங்களைக்கொல்லவென்று — கொடும்பாவி
ஏமனைப்போலவந்த



சக்கதிநாமறிந்தால் — மதுரையைச்
சற்றும்நெருங்கோமே
அச்சமில்லாமலின்னுள் — வரைக்கும்
அதவடிக்கொள்ளைசெய்தோம் — இப்போ
நச்சுமரம்போலே — முளைத்து
நற்பெலியிட்டீரோ

கத்திமழுங்கலையோ — பாவியுந்தன்
கையுஞ்சலிக்கலையோ
சித்தமிரங்கலையோ — வந்தவழி
செல்லமனமில்லையோ

வாய்ச்சுதம்துகத்தில் — கிளைகள்
மனதுகளிகூற
ஆச்சுதாளங்கள்படை — நடத்திடும்
ஐயாவுனக்கபையம்

விருத்தம்.

ஐயாவுனக்கபயமென்று அழுங்கள்ளர்தன்னுரையை
அதிவீரையன்கேட்டுமன தனுவுமிரங்காமல்
மெய்யாவொருவசனந்தனை வேகத்துடன்மொழிவான்
வேங்கைப்புலிபசியிற்கண்ட வேதியனைவிடுமோ
செய்யாமிசைசெய்தவனுத் திருடர்களேயுங்கள்
சென்னியறுக்காமல்விடேன் கூழ்ணப்போதிலேயென்று
கையாயுதமெடுத்துவந்த கள்ளப்படைமுழுதுங்
கடுகச்சமர்பொருதிரணக் களமாகவேகண்டான்.

விருத்தம்.

ரணக்களமாகச்செய்து நறுக்கியேயெறிந்துபோட்டுக்
கணமுதல்பேய்கள்கூளி கிட்டியேயிருந்துதின்னப்
பிணமெனுங்காடதாக்கிப் புரவியைத்திருப்பிக்கொண்டு
கூழ்ணமதில்மேனாட்டுக்குத் தீரனும்நடந்திட்டானே.

நடந்தவனழகர்கோயில் நாட்டுக்கள்ளர்கள்தான்வாழும்
இடந்தனிற்சென்றுகொர்ப்பல்திரிகளைப்பிடித்துத்தொந்தி
குடைந்துமேறிப்பார்த்துக் கொடியினிற்கருவாண்பிள்ளை
அடர்ந்திடுங்கருவிதென்று அறுத்துமேயெறிந்திட்டானே.

மட்டடக்காமற்கூடி வந்துமேகொள்ளைசெய்த
ருட்டராக்கள்ளர்தம்மைத் துரத்தியேயிருதுண்டாக

ஒட்டியேகருவறுத்து விளங்கிடுஞ்சவுக்கமேட்டில்
நட்டணையாகவீரன் ரணக்கொலுவிருக்கின்றனே.

ரணக்கொலுவிருக்கக்கண்டு நாயக்கன்மனம்பூரித்து
குணமுடனெழுந்துமீனாள் கோவிலுட்புகுந்துசொல்வான்
எனதுநற்பதியாமுந்த னெல்லையைநிலைக்கச்செய்தோன்
மனமுடன்வாழ்கவென்று வாழ்த்திநீற்கொடுப்பாயம்மா.

திருமலைநாய்க்கன்சொன்ன சேதிமீனம்பாள்கேட்டு
மறுமொழிபகர்ந்திடாமல் மவுனமாய்த்திருநீறள்ளித்
திருவெனும்வெள்ளைகையில் தேவிமீனம்பாளீய்ந்து
அருமையாய்வீரன்றிருஷ்டி கழித்திடுவெண்ணீறென்றாள்.

வெள்ளையம்மாள்வருகிற விருத்தம்.

சத்திமீனம்பாள்வார்த்தை தையலுங்கேட்டுவந்து
அத்திருக்கயற்கண்ணாள்தன் னாலயங்கடந்துமாது
சுத்திலாலாத்தியேந்தித் தோழியருடற்சூழப்
பத்தினிவெள்ளையம்மன் பாங்குடன்வருகின்றாளே.

இதுவுமது.

சிங்காரமுடனலாத்தி சேடியராயிரம்பேர்
பொங்கமாய்ப்பிடித்துச்சூழப் பெண்கள்நாயகியாளப்போ
தங்கவாபரணமெய்யில் தகதகென்றொளிகள்செய்ய
அங்கவேள்ரதிபோல்வெள்ளை யம்மனுந்தோணினாளே.

தரு-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

விந்தையுடன்வெள்ளையம்மை சுந்தரவீரையன்முன்னே
சந்திரனுதயம்போல வந்துதோணினாள்.

அநுபல்லவி.

அந்தமாய்க்கரத்தில்மீனாள் தந்திடும்வெண்ணீறுகொண்டு
விந்தையாய்மாதர்கள்சூழச் , சுந்தரப்பணிகள்பூண்டு (விந்)

சரணங்கள்.

ராகூழியருஞ்செளரிகா — மாகூழித்திரிபுரைவிசா
லாகூழியுபர்கருணாக — டாகூழியுமையாள்
ஆகூழிசொக்கர்பங்கிலுறை — சூகூழித்திருமதுரைமீ
னாகூழிபொற்றாம்பணிந்து — தாகூழியின்றியேநடந்து (விந்)



சித்திமேளமுரசு — மத்தளங்கைத்தாளந்தவில்
சத்தவாரிபோல்முழங்க — விஸ்தாரமதாய்
சித்திரநடைநடந்து — வெற்றிமங்களம்பசர்ந்து
அஸ்தமதிலேமாணிக்க — முத்தினாலாத்திகொண்டு (விந்)

பார்க்குள்மருவலர்புகழ் — மூர்க்கவீரையன்மனதுக்
கேர்க்கமன்னன்திருமலை — நாய்க்கன்செப்பவே
தாக்குடன்தாதியர்சூழச் — சேர்க்கையுடனேநடந்து
தீர்க்கமாய்க்காம்போதிராகம் — வர்க்கையுடனேபகர்ந்து (விந்)

விருத்தம்.

விரைவுடன்வெள்ளையம்மன் வேடிக்கையாகத்தானே
நிரைநிரையாகத்தாதி நேரிழைமார்கள்சூழத்
தரைபுகழ்விஜயரெங்க நாய்க்கனெனும்வீரைய
துரைமுன்னேநின்றாலாத்தி சுழற்றிசோபனஞ்சொன்னாளே.

சீர்புகழ்வெள்ளையம்மன் செங்கனிவாய்திறந்து
பார்புகழ்வீரற்குச்சோ பனமுமேமகிழ்வதாகக்
கூறுமின்றன்மேலாசை கொண்டுதன்மனதிலெண்ணித்
தீரனும்நடந்தான்மாதர் சிறந்தவர்மனைசென்றாரே.

தரு,இ-ம்-நாதநாமக்கிரியை-அடதாளம்.

வெள்ளையருமேவிடுதிக்கேக — துரை
வீரையனுமெத்தப்பலாக
உள்ளமதிலேநினைந்துவீரன் — நாய்க்க
னுற்றவரண்மனைதேடிவாரான்

வாரதுடிவேந்தன்கண்ணால்கண்டு — மெய்ச்சி
வரவழைத்தருகில்வைத்துக்கொண்டு
வீரையனென்றனுனக்கேசெல்லும் — இந்த
வீரியமெவர்க்குவருஞ்சொல்லும்

கொள்ளையிட்டகள்ளர்தமைக்கொன்று — வெற்றி
கொண்டுவந்தநாய்க்கனேயென்று
கள்ளர்செய்கலக்கந்தீர்ந்ததின்றே — இனி
காரியமெல்லாஞ்செயந்தானென்றே

விண்டுதுரைவீரர்க்குத்தானப்போ — கன
வெகுமதிகொடுத்துத்தானனுப்ப
வண்டத்துரைகுதிரையேறியந்தான் — அப்போ
வாகுடனேதன்விடுதிவந்தான்

அந்தநல்விடுதிவந்துவெந்நீர் குளித்
தன்புடன்வெண்ணீறணிந்துபன்னீர்
சந்தனம்புனுகுகந்தம்பூசி அந்தத்
தையல்பொம்மியுடன்சேதிபேசி

இருவரும்பாலன்னம்புசித்தேதான் பாக்குவெள்
ளிலையருந்திபஞ்சணையிலேதான்
மருவிவிளையாடிப்பொம்மிமாது இன்பம்
வாகுடன்மகிழ்ந்திருக்கும்போது

வீரையன் வெள்ளையம்மாளைச்சிறையெடுக்கவருதல்.

விருத்தம்.

இருந்தவனிரவுபாதி இலகுலுங்காதநேரம்
அருந்ததிவெள்ளையாளை அழிக்கவேநினைத்துக்கொண்டு
மருந்தையுமள்ளித்தூவி மயக்கியேபொம்மிதன்னை
கருங்கள்ளர்போலேகச்சை கட்டியேபுறப்பட்டானே.

தரு-இ-ம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

வெள்ளைமீதினிலாசைகொண்டதி வீரனானும்வருகிறான்

அநுபல்லவி.

கள்வன்போலவேரூபமாறியே கங்குலிருள்நடுச்சாமத்தில்
மெள்ளவெழுந்துமே பொடியைத்தூவித்தன்
மெல்லிபொம்மியை மயக்கியே(வெள்ளை

சரணங்கள்.

துஷ்டநிக்கிரகஞ்செய்தவீரைய துரைக்குக்கண்ணேற்விலக்கவே
அஷ்டலட்சுமி போலவேவந்து
அருகிலாலாத்தி சுற்றிய(வெள்ளை)

ஆசைகொண்டதிவேகமாய்நடந் தர்த்தராத்திரிவேளையில்
பூசைப்பணிவிடை முடித்துஅறைதனிற்
போய்ப்படுத்தக்கண் துயின்றிடும்(வெள்ளை)

தெள்ளிமையுடனடந்துவீரையன் திருடன்போல்சிறையெடுக்கவே
உள்ளமதில் நினைத்துப்பர்வத
உத்தமித்தவம் பெருகிய(வெள்ளை

விருத்தம்.

இலங்கியவீரசாமி இரவினில்நடுச்சாமத்தில்
நலங்கிடாதெழுந்துபொம்மி நாயகிதனைமயக்கிக்



குலங்கள்ளர்போலேவேஷங் கொண்டுதான்மதுரைமீனாள்
தலங்கண்டுகோயிற்கட்டைத் தாண்டவேநினைவுகொண்டான்.

தாண்டவமாடுசொக்கர் சன்னதிகடந்துதெற்கே
ஆண்டவளிலமெல்லாம் ஆச்சிமீனாட்சிவாசல்
நீண்டதோர்கம்பநாட்டும் நிலைபெறுமதிலைத்தாண்டி
மீண்டவனிறங்கிக்கோயில் மின்னடிகடந்துபோனான்.

போகவேவெள்ளையம்மன் பூலோகநாயகிக்குப்
பாகமாயடப்பங்கட்டிப் பள்ளியிற்சேர்ந்தபின்பு
தோகையும்படுத்துமெத்தத் தூக்கமாயிருக்கும்போது
வாகுள்ளவீரசாமி வந்துவெள்ளையைக்கண்டான்.

கண்டவன்கருணைகூர்ந்து கன்னிவெள்ளையர்மேலாசை
கொண்டவள்நித்திரைசெய்யுங் கோலமாமெத்தைமேலுந்
தண்டமாயிருந்துஅந்தத் தையல்தன்னழகுஞ்சீரும்
கண்டவன்மயக்கங்கொண்டு கனத்திடும்பொடியைப்போட்டான்.

பொடிதனைத்தூவிச்சாமி பூவையைமயங்கச்செய்து
குடிசெய்யப்போகாதிப்போ தூக்குவோம்தோளிலென்று
வடிவழகுடையவீரன் வஸ்திரந்தன்னிற்கட்டி
முடிந்துமேயெடுத்துக்கொண்டு மெல்லெனவெளியில்வந்தான்.

பொட்டணந்தோளிலிட்டுப் பெரின்முடிவீரசாமி
திட்டமாய்வருகும்போது சேவகர்பிடித்துக்கொண்டு
கட்டவேசெய்தார்ட்போ.கள்ளனைக்கண்டோநாமுந்
சட்டமாய்ச்சொல்வோம்வீர சாமியையெழுப்புமென்றார்.

ஆரடாதிருடாவுன்னை யறிந்தல்லோபோகவேணும்
கூறடாவசனமென்று கூப்பிடப்பேசவில்லை
பாரடாயிவன்றானமை பத்திரப்படுத்திக்கொண்டு
கூறடாதிருமலைந்திர குஞ்சரன்சமுகமென்றார்.

என்றவர்கூடிப்பேசி யெல்லோருமாலோசித்து
பன்றையத்திருடனென்று பத்திரப்படுத்திக்கொண்டு
சென்றவர்கோயில்தன்னிற் றிருடியகள்ளன்றன்னைக்
கண்டுமேபிடித்தோமென்று கடுகவேயுரைசெய்தாரே.

வசனம்.

அகோர்சரணஞ்சரணமையா சுவாமிதிருமலைநாய்க்கரே இன்
றையதினம் நாங்கள் பாருகொடுத்திருக்கும்வழியாய் ஒரு ஊமைத்

திருடன் மீனாட்சியம்மன்கோயிலிற்புகுந்து என்னமோ ஒருமூட்டை திருடிக்கொண்டுவந்தான் அவனை நாங்கள் பிடித்து கட்டிவைத்துப்போட்டு தங்களுக்குத் தெரியப்படுத்தவந்தோமையா சுவாமி

திருமலைநாய்க்கன்சொல் விருத்தம்,

கோயிலில்திருடிவந்தான் குறம்பநாய்க்கள்ளனென்று
போயவர்சொல்லக்கேட்டுப் புகலுவான்திருமலேந்திரன்
வாயிலாக்கள்ளன்கொண்டு வந்ததைப்பறித்துக்கொண்டு
ஞாயமாய்மாறுகால்கை நறுக்கியேபோடுவீரே.

வசனம்.

அகோவாருங்கள் சேவகர்களே நீங்கள்போய் கோயிலில் திருடின வாயில்லாத ஊமைக்கள்ளன் கொண்டுவந்ததைப் பறித்துக்கொண்டு சீக்கிரமாய் அவனை மாறுகால் மாறுகை வாங்கிப்போடுங்கள் சேவகர்களே.

விருத்தம்.

உத்தரவானபின்பு ஓடியேபாருக்காரர்
பத்தரைமாத்துத்தங்கம் பருப்புயன்வீரசாமி
மெத்தவேகொண்டுவந்த விதமுள்ளசுமையைவாங்கி
கொற்றவன்பாருதன்னில் கொண்டுபோய்வைத்திட்டாரே.

சாலுவைப்பொட்டணத்தைத் தாவென்றுவாங்கிப்பாரு
மேலுமேவைத்துக்கொண்டு வேகமாய்வீரன்றன்னை
நாலுபேர்பிடித்துக்கொண்டு நவமணிக்கைகால்தன்னை
சிலமாயறுக்கும்போது சிவசிவாசிவனேயென்றான்.

வசனம்.

இந்தப்பிரகாரம் திருமலைநாய்க்கன் உத்தரவின்படியே சேவகர்கள்வந்து வீரையன்கொண்டுவந்த சாலுவைப்பொட்டணத்தைவாங்கிப் பாருவிலே வைத்து வீரசாமியை நாலுபேர்கூடிப் பிடித்துக்கொண்டு மாறுகால் மாறுகை வாங்கும்போது வாய்திறந்து சிவசிவா சிவனேயென்றார்.

விருத்தம்.

சிறியதர்கம்போலச் சினந்துதான்வீரசாமி
கூறியவசனங்கேட்டுக் குறிப்புடன்பாருக்காரர்
வீரையனெனவேகண்டு மெத்தவேவிசனங்கொண்டு
பாரினில்விழுந்தழுன்று பதறியேபுலம்புவாரே.



சேவகர்கள்புலம்பல்-இ-ம்-காம்போதி.

வீரபராக்கிரமதீரனேயென்செய்வோம் பாவிநாங்கள்-ரண
சூரனேஉன்னுடையசுரூபம்றிகிலோம் பாவிநாங்கள்
ஆரெவரென்றுபாராமலேஐயோ பாவிநாங்கள்-உம்மை
மாறுகால்மாறுகைவாங்கத்துணிந்தோமே பாவிநாங்கள்
பார்மீதிலுந்தஜைப்பங்கப்படுத்தின பாவிநாங்கள்-எமன்
பாசத்திலசிக்கிப்பாதவிப்போமையா பாவிநாங்கள்
சீர்பாதந்தொட்டும்மைச்சித்திரவதைசெய்த பாவிநாங்கள்-எங்கள்
சென்னியறுத்துச்சிரமாலைபோடுறோம் பாவிநாங்கள்
தந்தைக்கிடையூறுகானேநினைத்திட்ட பாவிநாங்கள்-உந்தன்
விந்தைப்பதந்தனில்வீழ்ந்துமடியிறோம் பாவிநாங்கள்
எந்தவிதத்திலேகடேறுவோமையா பாவிநாங்கள்-வெகு
நிந்தனையானநெடும்பிழைசெய்திட்ட பாவிநாங்கள்
செய்யாதவன்குலைசெய்துவிட்டோமையா பாவிநாங்கள்-எங்கள்
சீவனிருந்தென்னதேசத்தையாள்வது பாவிநாங்கள்
கையாலேயெங்கள் கழுத்தைத்துணித்தாலும் பாவிநாங்கள்-செய்த
கர்மத்தைவிட்டுக்கரையேறமாட்டோமே பாவிநாங்கள்
வளர்த்தகிடாகையில்வலுவுடன்பாய்ந்தாற்போல்பாவிநாங்கள் - உம்
வதைசெய்தபின்னிந்தமண்ணிலிருப்போமோபாவிநாங்கள் [மை

விருத்தம்.

எங்களைமதுரைக்கோட்டை யெல்லையுந்திருமலேந்திரன்
தங்களைச்செங்கோல்நீதி தழைத்திடச்செய்தமூர்த்தி
உங்களைத்தொட்டுமின்னம் உயிர்வைத்துஇருக்கோம்நாங்கள்
தங்கள்தன்கையாலெங்கள் தலைதனையறுப்பீரையா.

வசனம்.

அகோகேளும் சுவாமி கொடும்பாவிகளான நாங்கள் உம்மைப்பிடித்து வதைசெய்தும் இன்னம் பிராணனைவைத் திருக்கிறோம் தேவரீர்கையினாலே எங்கள்தலையை அறுத்துப்போட்டால் நாங்கள் நல்லகதியையடைவோம் சீக்கிரமாய் எங்கள்சிரசையறுத்து பொன்னுலகுக்கேக வழிகாட்டும் சுவாமி.

விருத்தம்.

தலைகொய்துபோடுமெங்கள் சுவாமியுன்கையாலென்று
உலையின்வாய்மெழுகைப்போல உருகியேபாருக்காரர்

பலவிதமாகச்சொல்லிப் பாதவித்திருக்கும்போது
மலைமகள்சாய்ந்நீங்கி வாய்திறந்துரைசெய்வானே.

வீரையன்சொல்-விருத்தம்.

வாருங்கள்தம்பிநீங்கள் மனமதுதியங்கவேண்டாம்
பூருவத்தெனக்குஈசன் புரிந்திட்டசாபமிந்நாள்
நேருபட்டிருல்வந்தால் நீங்களென்செய்வீரிப்போ
கூறுங்கள்திருமலேந்திர குஞ்சரன்சமுகந்தானே.

வசனம்.

அகோவாருங்கள் தம்பிமார்களே நீங்கள் என்னத்துக்கு கவலைப்படுகிறீர்கள் வேண்டாம் எனக்கு பூர்வத்தில் ஈசனிட்டசாபம் இப்போதுவந்து ஒத்துக்கொண்டது நீங்களென்னசெய்வீர்கள் சிக்கிரமாகப்போய் திருமலைநாய்க்கனுக்கு என்னுடைய சமாச்சாரங்களைக்கூறுங்கள் தம்பிமார்களே.

விருத்தம்.

கூறென்றுசொன்னபோதே கொப்பெனச்சென்றுநாய்க்கன்
சீருள்ளசமுகங்கண்டு தெண்டனிட்டுரைசெய்வார்கள்
பாருலகாளும்வேந்தே படுபாவிநாங்கள்வீரன்
மாறுபாட்டறிந்திடாமல் மதிகெட்டுப்போனோமையா.

கள்ளனைப்பிடித்தோமென்றேக் காவலா நீர்தான்சென்று
துள்ளவேமாறுகால்கை துணித்திடுமென்றுசொன்னீர்
உள்ளமேகலங்குதிப்போ உத்தண்டவீரன்தன்னைக்
கள்ளனென்றெண்ணிநாங்கள் காலுகையறுத்தோமன்னா.

அறுத்திடும்போதுவீரன் அரகாசிவனேயென்று
வருத்தமாயுரைக்கும்போது மன்னனென்றறிந்தோம்நாங்கள்
பருத்தசெங்கோன்மையுள்ள பார்மன்னுயென்னசெய்வோம்
கருத்துடனுமக்குச்சேதி கடுகவந்துரைசெய்தோமே.

வசனம்.

அகோவாருமையா திருமலைநாய்க்கரே வீரையன் வேஷமாறி கள்ளனைப்போல்வந்ததால்நாங்கள்பிடித்துக்கொண்டுவந்துஉம்மிடத்திலே எச்சரித்தோம் நீரும் யோசியாமல் மாறுகால்மாறுகை வாங்கிப்போடுங்களென்று உத்தாரவுசெய்தீர் நாங்களும் அப்படியேவீரையனென்றறியாமல் மாறுகால் மாறுகை வாங்கும்போது வருத்தத்து



டனே அரகாசிவனேயென்றுகூறினர் அப்போது வீரையனென்றறிந்தோமையா திருமலைநாய்க்கரே.

விருத்தம்.

உரைசெய்யக்கேட்டுநாய்க்க னோடியேவந்துசொல்வான்
தரைபுகழ்விசயனை தாஷ்டீகமிகுத்ததம்பி
வரையெனுமுன்திரோகத்தில் வடுப்படச்செய்தேனையோ
துரைமுத்துசாமியென்று சொல்லியேபுலம்புவானே.

திருமலைநாய்க்கர்புலம்பல்.

இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

இதுவென்னகாரணமோ தம்பியுனக்
இந்தவிதிவருமோ
சதிசெய்துனைவதைத்த கொடும்பாவி
சண்டாளருந்தனையும்
கள்ளனென்றேயுரைத்தார் அதுகண்டு
காலுகைவாங்குமென்றேன்
தெள்ளியவீரையனே என்னுலுந்தன்
திரோகம்வடுப்பட்டதோ.

தங்கத்திருமேனி வடிவுள்ள
தாஷ்டீகவீரையனே
அங்கமுருகுதப்பா தம்பியுந்தன்
ஆண்மைதனைநினைந்தால்

உள்ளபடியெனக்கு முழுதும்
உதவியாய்நீயிருந்து
கள்ளர்குலமுழுதும் வதைத்துக்
கருவையறுத்தாயே

செய்தவுபகாரம் ஏந்நாளுஞ்
சிறப்புற்றிருக்காமல்
கைதவிரவிடுத்து என்னுலேநீ
கஷ்டப்படவிதியோ

வல்லவனேஉனையுங் கள்ளனென்று
வந்துபிடிக்கையிலே
நல்லவனேயவர்கள் அறிந்திட
நான்தானெனவுரைத்தால்

தொட்டுப்பிடிக்கஉனக் கிந்த
துன்பம்வரும்படியாய்
கட்டுக்கிடங்கொடுத்த தென்னவனை
காரணமோஐயனே
மட்டிலடங்காத துரைவீர
மன்னுயெனக்குரையும்
கெட்டிமனமுடையோ னுனக்கப
கீர்த்திவருவானேன்
தன்னையறியாமல் வந்துவிட்ட
சற்பனையோஅறியேன்
என்னையொருபொருட்டாய் நினைத்துரை
இன்னவிதமெனவே

விருத்தம்.

என்னையோர்பொருட்டாயெண்ணி இவ்வினைவந்தவாறை
நன்னயத்துடனெனக்கு நவின்றிடுந்துரையேயென்று
சொன்னதைக்கேட்டுவீரன் சுதுக்கம்ரண்டுநீக்கி
தென்னவன்றன்னைப்பார்த்து தீர்க்கமாயுரைசெய்வானே.

வெண்பா.

கச்சித்திருமலைய கர்த்தனேபூங்கன்னியரை
இச்சித்தேன்கண்டு இருதயத்தில்-நிட்சயமாய்
வள்ளல்மயேசன்முன்னாள் வாக்கிட்டதாலிந்த
வெள்ளையினால்வந்த் வினை.

விருத்தம்.

வெள்ளையினாலேவந்த வினையென்றுவீரன்சொல்ல
உள்ளத்தில்கவலைகொண்டு உருகியேதிருமலேந்திரன்
கள்ளனாச்செயித்தவெந்தன் காளைவீரையனேயென்று
துள்ளியேபுவியில்வீழ்ந்து துயரமாய்ப்புலம்புவானே.

திருமலைநாய்க்கன்புலம்பல்-தரு.

கண்ணிகள்.

பாவியென்னசெய்வேன்-பழி காராயென்னசெய்வேன்-உன்னைப்
பார்க்கிலெந்தன்வயிறுங்குலை பற்றியெரிந்திடுதே
ஆவியுடலுயிர்போ-லுன்னை யந்தரங்கம்நினைத்தேன்-என்னை
அல்லல்படவிடுத்தோ-இந்த ஆக்கினைக்குள்ளானைப்



ஆகவல்.

உரைசெய்வீரென்று ஓதிடக்கேட்டு
விரைவுடன்சென்று மெல்லிபொம்மியரைக்
கண்டுநின்றிருவிழி கண்ணீர்சொரிய
தெண்டனிட்டழுது சேவகருரைப்பார்
தாயினுமிகுத்த தபாளவுத்தமியே
சேயெனும்நாங்கள் செப்பிடக்கேளீர்
தந்தையாமெங்கள் சாமிவீரையனும்
நிந்தையதாக நேத்துராத்திரியில்
கள்ளனைப்போல கருங்கச்சைகட்டி
மெள்ளவேவந்து மீனாட்சிகோயில்
சுற்றியமதிலைச் சுருக்குடன்கடந்து
சித்திரமண்டபத் தேறிக்குதித்து
கம்பத்தடியின் கதவெலாந்தாண்டி
தெம்புடன்வந்து தேவிசன்னதிமுன்
பள்ளியறையில் பணிவிடைசெய்யும்
வெள்ளைமெய்த்து மெய்நழுவில்கட்டி
பொட்டணங்கொண்டு புறப்பட்டுவந்தார்
கட்டினிலடங்காக் காளைவீரையனும்
ஆவலாய்வருகும் அதட்டியைக்கண்டு
காவலாய்நின்ற கடியசேவகரும்
கண்டுமேபிடித்துக் காளைவீரையனை
கொண்டுபோய்நாய்க்கர்க் குரைசெய்தார்தாயே
நாயக்கர்கேட்டு நாரணிகோயிலில்
காயக்கமாகக் களவுசெய்கள்ளனை
மாறுகால்மாறுகை வாங்கிடுமென்று
கூறிடநாய்க்கன் கொடியசேவகரும்
நல்லதென்றெப்பி நடந்துவந்திருட்டில்
வல்லவனான மன்னன்வீரையனை
நாலுபேர்பிடித்து நவமணியான
காலுடன்கையைக் கண்டிக்கும்போது
சிவசிவாவென்று செப்பிடக்கேட்டு
கவனங்கொண்டு கலங்கியேநாங்கள்
பார்த்திடும்போது பார்மன்னனிமிசை
தீர்த்திடும்வீரதீரனென் றறிந்தோம்
அறிந்தபின்நாங்கள் அலறியேபுலம்பி
தெரிந்திடவுரைத்தோம் திருமலையனுக்கு

என்னறிவைப்போக - நீதா னென்ன துவல்செய்தாய் - இன
ப்பொனக்குன்னைப்போல் - துணை யெங்குங்கிடையாதே
மன்னர்மன்னனாக - உன்னை வைப்பதற்குநினைத்தேன் - எந்தன்
மனதின்படி நடவாம - லென் வலுமைகுறைத்தாயே

செய்யாயிமிசைசெய்த - பொல்லாத் திருடர்களைப்போல - உந்தன்
கைகாலறுபடுவா - யென்று கர்த்தன்சபித்தானே
மெய்யாயெந்தனுடனே - அந்த வெள்ளைவேணுமென்றுனை
ஐயோதம்பிவீரா - கூட்டி யனுப்பிவைபேனே

உன்னால்சுகம்பெற்று - இந்த உலகாண்டுநானிருக்க - நீ
என்னாலிம்சைபடுவா - யென்று இறைவன்சபித்தானே
முன்னால்பொம்மியுமிருந்தால் - உயிர் விடுவாள்பழியிடுவாள் - அந்த
வீண்பாவமுமென்க்கேவந்து விடியும்வினைமுடியுமே

விருத்தம்.

வினைமுடிவெனக்குண்டாகும் மெல்லிபொம்மியர்தான்கண்டால்
துணைசெய்தபேர்க்குப்பொல்லாத் துரோகஞ்செய்தேனென்று
மனதிலேநீ கவலைகொண்டு மலர்க்கண்ணாயருஞ்செய்யிட்டுக்
கனகவான்தேடியேதேற்றுக் கலங்கியேநின்றானே.

நெஞ்சினிற்கவலைகொண்டு நின்றதிராகநாய்க்கன்
சஞ்சலப்படவேகண்டு சாமிவீரையனுஞ்சொல்வான்
என்செய்வீர் நீங்களையா என்விதிவசத்துக்கிப்போ
வஞ்சிபொம்மியருக்கெந்தன் வகைசொல்லியனுப்புவீரே.

வீரையன்சொல் வசனம்.

அகோவாருமையா திருமலைநாய்க்கரே நீர் ஏன்விசனப்படுகி றீர் என்விதிவசத்துக்கு நீரென்னசெய்வீர் இப்போது என்மனைவி யாகிய பொம்மிநாயகிக்கு என்சங்கதியைத் தெரியப்படுத்தும் திரு மலைநாய்க்கரே.

விருத்தம்.

சொல்லிநீரனுப்புமென்ற துரைவீரன்வார்த்தைகேட்டு
நல்லறிவழிந்தநாய்க்கன் நாமென்னசெய்வோமென்று
கல்லினும்வலுநெஞ்சான கடியசேவகரேநீங்கள்
வல்லிபொம்மியருக்கிந்த வார்த்தைபோயுரைசெய்வீரே.

வசனம்.

அகோவாருங்கள் சேவகர்களே நீங்கள்போய் பொம்மிநாயகி க்கு இவ்விடத்தில்நடந்த சங்கதிகளை விவரமாகத் தெரியப்படுத்தி அழைத்துவாருங்கள் சேவகர்களே



ராசருங்கேட்டு நல்லறிவழிந்து
ஈசனேயென்று ஏங்கியேபுலம்பி
வீரையனிருக்கும் வேஷத்தைப்பார்த்து
தாரையாயிருவிழி சலமதுபெருக
மெத்தவேபுலம்பும் வேந்தனைப்பார்த்து
தத்துவத்துடனே சாமியுமுரைத்தார்
ஆதியிலீச னருளியசாபம்
நீதியாயிப்போ நேரிட்டுததனால்
ஏதுக்குவிசனம் இராசனேவிடுமென்
மாதுபொம்மியர்க்கென் வரலாறுரையும்
என்றவர்புகல இராசனுங்கேட்டு
கன்றியேமனது கடுகவெங்களையும்
வல்லிபொம்மியர்க்கு வகையுடன்சேதி
சொல்லிவாவென்னச் சுருக்கினில்வந்தோம்
அம்மணிதாயே ஆகையால்நீங்கள்
நல்மனம்பொறுத்து நாடியேவருவீர்

பொம்மியம்மாள் வசனம் [illegible]வருதல்.

விருத்தம்.

மாறுகால்மாறுகையும் வாங்கினேனென்றுசொல்லிக்
கூறிடும்வார்த்தைதன்னைக் கோதைபொம்மியருங்கேட்டு
வாரியேயெழுந்துவாயில் மலர்க்கையாலடித்துக்கொண்டு
கூரியவிழிநீர்சிந்தக் கோதையும்வருகின்றாளே.

வேறு விருத்தம்.

வந்தவள்வீரன் மதிமுகங்கண்டு
எந்தனாயகனே என்செய்வேனென்று
சிந்தையுங்கலங்கித் தேவிபொம்மியரும்
விந்தையாய்ப்புவியில் வீழ்ந்தழுவாளே.

பொம்மியம்மாள்புலம்பல்.

இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

ஐயோநானென்செய்வேன் வீரையா - உந்த
னாண்மையிழந்தீரோ வீரையா
கையோகசல்லாப வீரையா - இந்த
சாபனைக்கென்செய்வேன் வீரையா

செய்பாதுசெய்தாலும் வீரையா-இந்தச்
சித்திரவதையுண்டோ வீரையா
கைகாலறுப்பட வீரையா-என்ன
காரணமோசொல்லு வீரையா
மெய்யான்சூரமும் வீரப்பிரதாபமும்
மையல்கொண்டிக்கே மதிமோசம்போனீரோ (ஐயோ)

தென்கூடல்மாநகர் வீரையா-நாடிச்
சென்றுவரும்போதே வீரையா
பங்கப்படவென்றே வீரையா-செயம்
பண்ணிநீர்கள்ளை வீரையா
சிக்கீமதுரைமுத்து வீரையா-எந்தன்
சிந்தைகலங்குதே வீரையா
தங்கம்போலுன்சிரேகம் வீரையா-என்ன
தாபந்திரப்பட்டுதோ வீரையா
செங்கையுங்காலும் தெறிபடக்கண்டயென்
அங்கமுருகி யனல்மெழுகுபோலுருகுதே(ஐயோ)

அஞ்சாதநெஞ்சுள்ள வீரையா-எந்தன்
ஆசைக்கண்ணாளனே வீரையா
பஞ்சமாபாதகர் வீரையா-உன்னைப்
பங்கஞ்செய்தார்களோ வீரையா
கொஞ்சியணைந்தென்னை வீரையா-இனி
கூடுவதெப்படி வீரையா
நெஞ்சங்கலங்குதே வீரையா-இது
நீதியோநீர்சொல்லும் வீரையா
தஞ்சமென்றுந்தனைத் தானடிவந்தேனே
வஞ்சஞ்செய்யாதே மாபாவிநீயிப்போ(ஐயோ)

என்னசெய்வேனையோ வீரையா-மன
தெப்படிதேறுவேன் வீரையா
சின்னவயதிலே வீரையா-இந்தத்
தீவினைவந்ததோ வீரையா
கன்னல்மொழியயில் வீரையா-சிவன்
கற்பனையோசொல்லு வீரையா
மன்னமன்னர்மெச்சும் வீரையா-உந்தன்
வல்லமைபோச்சுதோ வீரையா
அன்னைபிதாகுரு தெய்வமும்நீயென்று
உன்னையேநம்பியென் னுள்ளம்மகிழ்ந்தேனே(ஐயோ)



விருத்தம்.

மதிநிகர்வதனரூப மன்னவாஉன்னையிந்நாள்
துதிசெய்துஇருந்தேன்பொல்லாத்துரோகியென்றெனைமறந்து
சதிசெய்துஇவிடம்வந்து சற்பனைப்பட்டீரிந்த
விதிக்கென்னசெய்வேனென்று மெல்லியாள்புலம்புவாளே.

பொம்மியம்மாள் புலம்பல்.

தரு-இ-ம்-ஆநந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

இந்தவிதிக்கென்னசெய்குவேன்-துரையே-துரையேநான்
இந்தவிதிக்கென்னசெய்குவேன்.

அநுபல்லவி.

இந்தவிதிக்கென்னசெய்வேன் வந்தவிட்டதிலுமுன
சிந்தையுங்கலங்கிடவே நிந்தனைப்படலானீரோ(இந்த)

சரணங்கள்.

ஆர்செய்ததீவினையிதோ சாமிசாமிஉன்
மாறுகால்கைவாங்கினதாரோ
சீருகெட்டுநீருமுடல் கூறுபட்டிடவுமக்குப்
பூருவத்திற்செய்தவினை நேருபட்டுதோஇந்நாளில்(இந்தவிதி)

உன்னைநம்பிநானிருந்தேனே-துரையே துரையேநீர்
சொன்னபடிநானடந்தேனே
அன்னைமுதல்தந்தைசுற்ற மென்னுமாசையைமறந்து
மன்னவனேஉன்கதியென் றெண்ணியிருந்தேன்பாவி(இந்த

அங்கமெழுகாயுருகுதே-சாமிசாமியென்
கண்கள்ரெண்டும்நீர்பெருகுதே
தங்கம்போலுமதிரேகம் பங்கமாய்வடுப்படவென்
கண்கள்நூற்கண்டவுடன் பொங்குதேயெனதுசிந்தை(இந்த)

விருத்தம்.

பிறைநுதலழகும் பெருகுவல்லமையுந்
திரைநவமணியின் தேகமும்வேறாய்த்
தரைதனிற்கிடந்து தவழ்ந்திடும்படியாய்
திரைதடுமாற நீதியோயெந்தன்துரையே

இ-ம்-ஆனந்தபைரவி-சாப்புதாளம்.

கண்ணிகள்.

துரையேஉந்தன் துடுக்கானவலுவெல்லாந்
தோர்த்தீரோ-என்பெண்பாவம் ஏர்த்தீரோசாமி

நிரையோடிருக்காமலே இப்படிக்குநீர்
வதைப்படலாமோ பார்மீதிலேயோ
ஆருமில்லாப்பாவி போலென்னையிந்த
அம்பலத்தில்விட்டுவோ வம்புசெய்தாய்நாளும்
பாரில்நெடுநா ளினிவாழ்வோமென்று
பாதகிநானினைந்தேன் காதலனேயென்னைக்
கூடிநிதங்கொஞ்சி யிணைந்தகைகால்
குறைபட்டுவோவந்தீர்சாமி உந்தன்
வேடிக்கையும்வெகு வீரவல்லபமும்
வீணாகப்போச்சோ-மதி தோணாமல்பாவி
இந்தவிதிவரு மென்றுநானறிந்தால்
எட்டிப்பாரேன்மதுரைப் பட்டணத்தேயெந்தன்
சிந்தைமெத்தத்தியங்குதே என்னசெய்வேன்
தீரனேதுரைமுத்து வீரையனே

கந்தார்த்தம்.

வேதனார்முன்னாள் விதித்திடும்படியோ
காதலாவுந்தன் காலுகையறுபட்ட
நீதியோஉந்தனுக்கு-நீரிந்த-நினைவுநினைத்ததுதான்
நாதனேநானறிந்தால்-அந்நாளினில்-நத்திட்டேனோபாவி
சேதமில்லாமல் செழித்திருப்போமென்று
பாதகியெண்ணினேன் பலியாமற்செய்தாயே(நீதமோ)

ஆதரவில்லா அரிவையர்போல
பூதலத்திருந்து புலம்பிடச்செய்த
பாதகாநானிதுக்கோ-உன்மீதினில்-பட்சம்வைத்தேன்மனதில்
காதலாய்ப்பின்தொடர்ந்து-வந்தயென்னைக் கைநழுவவிடுத்து
நீதமில்லாத நினைவுகொண்டேயிந்தக்
கோதைவெள்ளையெப்பெண்ணைக் கூடநினைந்தீரோ (பாதகா)

வள்ளல்மீனம்பாள் மலர்ப்பதம்போற்றி
கள்ளைச்செயித்த காரணமிதுக்கோ
வெள்ளைமேலாசைகொண்டு-நீரிந்த வேதனைபடவேமொன்று
வள்ளல்மயேஸ்வரன்தான்-முன்னாளினில் வாக்கிட்டதிப்படியோ
தெள்ளியனாகிய தேசிகனேஉந்தன்
உள்ளங்கலங்கி யுருகிட்டுவோயிந்த(வெள்ளை)



உன்னையல்லாது உலகினிலெனக்குப்
பின்னைவேறுதவி பெற்றிலேனையோ
மன்னவாஉந்தனையும்-இந்தப்படி மாறுகால்கைவாங்க
எண்ணினபேரறிந்தால்-அவர்களின் ஈரல்பிடுங்கிடுவேன்
தன்னிகரில்லாத சாமியுனையிந்த
அன்னீதஞ்செய்தவ ராரெனக்குச்சொல்லும்(மன்ன)

விருத்தம்.

சிந்தையுங்கலங்கிமாது திருமலைநாய்க்கனிற்கும்
விந்தையையறிந்துபொம்மி வேந்தன்முன்னாகவந்து
அந்தரத்திடியைப்போல அலறியேமண்மேல்வீழ்ந்து
கந்தரத்தொலிவேறாகக் கதறியேபுலம்புவாளே.

பொம்மியம்மாள் திருமலைநாய்க்கரைப்பார்த்து புலம்பல்.

தரு-இ-ம்-ஆகிரி-அடதாளம்.

பல்லவி.

பாரும்பாருமையா-என்சாமியைப்-பாரும்பாருமையா*

அநுபல்லவி.

ஆருமெதிரில்லாத அதிவீரதுரைதன்னை
மாறுகால்மாறுகை வாங்கினகோலத்தைப் (பாரும்)

சரணங்கள்.

மதுராபுரியைநாடி வரும்போதேயிவர்க்கிந்த
வதைமோசம்வருமென்று மாபாவியறியேனே
மதிசூடியசொக்கர் கிருபையேமேவிப்திரு
மலைநாய்க்கனேயெந்தன் குலைவேகுதேஐயோ
மனதெப்படிதுணிவேன் வினையிப்படியாச்சுதே
மன்னன்திருமலைய அண்ணலேநீர்கண்ணால்(பாரும்)

கள்ளர்குலமுழுதுங் கருவறுத்தும்முடைய
கலக்கந்தெளியவைத்த காரணத்துக்கோபாவி
கைகாலறுமென்று செய்யாமலேசெய்தாய்
கனமாயுபகாரம் இனியார்செய்யப்போறார்
கச்சித்திருமலையா பட்சம்வைத்திதுகோலங்
கண்டாயோகொடும்பாவி- சண்டாளாநீகண்ணால்(பாரு)

பண்ணினஉதவிக்கோ என்னிருயிதுசிந்தை
பழிகாராநீயெந்தன் மொழிகேளென்துரைசாமி

பருவத்திலெனைக்கூடி மருவத்துணிந்து நாடி
பதியைவிட்டென்னைக்கூட்டிச்சதிபொம்மணனைமூட்டி
பகைதீர்ந்துதேயினிமேல் சுகமாகவாழ்வோமென்று
பாவிநினைந்ததற்கோ ஆவிபதறவிட்டாய்(பாரும்)

விருத்தம்.

மங்கைபொம்மியிந்தவிதம் புலம்பிச்சோர்ந்து
மாநிலத்தின்மிசைவிழுந்து வருந்தும்போது
செங்கனிவாய்திறந்துமன்னன் திருமலேந்திரன்
தேறுதலாய்பொம்மியர்க்குச் சேதிகூறி
அங்கயற்கண்மீனம்பா ளிடத்திற்சென்று
அதிவீரபாண்டியன்கை கால்முன்போலப்
பங்கமில்லாதிருந்திடவே வரமேவாங்கிப்
பாதவிப்பையகற்றிடுவேன் பாராயம்மா.

வசனம்.

அகோவாருமம்மாதாயே பொம்மிநாயகி நீயேன் விசனப்படு கிறாய் இதோ நான் அரை க்ஷணத்தில் மீனம்பாளிடத்திற்சென்று உன்னுடைய நாயகனுக்கு கைகால்பங்கமில்லாமல் முன்னிருந்தது போல் இருக்கும்படியாய் வரம்பெற்றுவந்து உன்பரிதாபத்தைத் தீர்த்துப்போடுகிறேன் விசனப்படாமலிருமம்மா தாயே.

விருத்தம்.

ஆறுவாகனனையீன்ற அம்பிகைபாதம்போற்றி
வாகுடன்கைகால்முன்போல் வளர்ந்திடவரமேவாங்கிப்
பாகமாய்வாரேனென்று பரிதாபமொழியுரைத்து
வேகமாய்திருமலேந்திரன் விமலிசன்னதிமுன்வந்தான்.

வந்தவன்கயற்கண்மீனாள் மலர்ப்பதம்போற்றிசெய்து
சுந்தரியடியேன்சொன்ன சொற்படிபிசகில்லாமல்
விந்தையாயெந்தன்மீதில் விமலியுன்கிருபைவைத்து
இந்தநாழிகையில்வீர னிடர்தனையகற்றுவாயே.

உனதுநற்கோயில்புக்கி யுத்தமிவெள்ளைதன்னை
மனதறியாமற்செய்த வஞ்சனைபொறுத்துக்கொண்டு
எனதிரக்கத்தைப்பார்த்து இன்பமாய்வீரனுக்குத்
தினதுகால்கைமுன்போலே தழைத்திடச்செய்வாயம்மா.



வசனம்.

அகோ சரணஞ்சரணமம்மா மீனம்பாளாகியஎன்தாயே உன்னுடைய கோயிலுக்குள் வந்த உத்தமியாகியவெள்ளையும்மனுடைய மனதறியாமல் வீரையன்செய்த வஞ்சனையைப் பொறுத்துக்கொண்டு எனக்காக மனதிரங்கி வீரையன்பேரில் கிருபைவைத்து முன்போல் கால் கை தழைக்கிடச்செய்வாயம்மா தாயே.

விருத்தம்.

திருமலைநாயக்கன்சொன்ன சேதிமீனம்பாள்கேட்டு
மறுமொழிபகர்ந்திடாமல் மலர்க்கையால்வெண்ணீறள்ளித்
தருமதேவதையாளீயத் தாரணிமன்னன்வாங்கி
இருதயமகிழ்ந்துவீர னிருந்திடுமிடத்தில்வந்தான்.

வந்தவன்வெண்ணீற்றன்னை வாஞ்சையாய்வீரன்மீதில்
சந்தோஷத்துடனேபோட்டுத் தடவியேகொடுக்கும்போது
முந்தவெப்படியோஅந்த முறைப்படிகைகாலெல்லாம்
சிந்தனையில்லாமல்தான் செவ்வையாயிருந்ததன்றே.

பொதுவசனம்.

இந்தப்பிரகாரம் திருமலைநாய்க்கன் செகதாம்பாளாகிய மீனாட்சியம்மனிடத்தில் வெண்ணீறு வாங்கிக்கொண்டுவந்து வீரையன் மீதுபோட்டு தடவிக்கொடுக்க எப்போதும்போலே கைகால்வளர்ந்து செவ்வையாச்சுது.

வெண்பா.

குற்றமது நீங்கிக் குறைந்தகைகால்தான்வளர
சித்தமகிழ்ந்து திருமலையன் - முத்தையனே
சேருமுமதுடைய தேவிபொம்மியாருடனே
வாரும்விடுதிக்கு மகிழ்ந்து.

வசனம்.

அகோவாருந்தம்பி வீரையனே இப்போது உன்மனக்கவலை நீக்கி நீயும் உன்தேவியுமாக வாருந்தம்பி அரண்மனைபோய்ச் சேரலாம் வீரையனே.

வீரையன்சொல்-வெண்பா.

வாருமென்றேயுரைத்த மன்னன்திருமலைய
மேருவெனும்நாயக்க வேந்தனே - கூறக்கேள்
வைத்திருக்கேனென்னுடலை வடுப்பட்டதாகையினால்
சற்றிருக்கேனுனிடியேன் தான்.

வசனம்.

அகோவாருமையா திருமலைநாய்க்கரே நான் மாறுபட்டாவம்சத்தில் பிறந்தேன் இப்போ என்திரேகத்தில் மாறுபட்டது இனி சற்றுநேரமாகிலும் என்சரீரத்தை இந்த மண்ணுலகில் வைத்திருக்கேனையா திருமலைநாய்க்கரே.

விருத்தம்.

வடுபட்டதிரேகந்தன்னை வைத்துநானிருக்கேனென்று
நடுக்கமுமதுரைவீர னாரந்தரன்சொல்லக்கேட்டு
திடுக்கெனமனங்கலங்கித் திருமலைநாய்க்கன்மன்றில்
கடுகவேவிழுந்துசிந்தை கலக்கியேபுலம்புவானே.

திருமலைநாய்க்கன்புலம்பல்.

இ-ம்-சங்கராபரணம்-அடதாளசாப்பு.

இந்தவிதிக்கோ நீவந்து எந்தன்துயர்தவிழ்த்து
சிந்தைமகிழவைத்தாய் தம்பிவீரா
எந்தனுக்குறுதியான தந்திரவார்த்தைகள்சொல்லி
இருப்பாயென்றெண்ணினேனுன் தம்பிவீரா

ஏழைமதிநீபடைத்தாய் வேலைபொல்லாதாகையாலே
என்னசெய்வேனுனினிமேல் தம்பிவீரா
காலைமீதிலேறிவரும் நீலகண்டர்சொற்படியோ
காரணமுடிவுனக்கோ தம்பிவீரா

தேறுதலாய்நானுரைத்த கூறுதல்கேளாமலுந்தன்
திரேகம்வைத்திருக்கேனென்றாய் தம்பிவீரா
ஆறுமோஎனதுசிந்தை தேறுமோஉனைப்பிரிந்தால்
அங்கமுருகுதடா தம்பிவீரா

காசினியிலுந்தனைப்போல் நேசமுள்ளபிள்ளையெந்தக்
காலத்திலேகாண்பேனப்பா தம்பிவீரா

விருத்தம்.

தம்பிவீரையனேயென்று தாரணியாளுமன்னன்
வெம்பியேயுரைக்கக்கேட்டு வீரையனெழுந்துசொல்வான்
அம்புவியாளும்வேந்தே ஆயாசந்துயரம்வேண்டாம்
தெப்புடன்பொம்மியாட்குத் தீக்குழிவளர்த்திடாயே,

தீக்குழிவளர்ப்பதற்குச் செலவுகளுள்ளதெல்லாம்
சாக்கிரதையாகயிப்போ தயாராகச்செய்துபோடும்



பாக்கிவைத்திடவொண்ணாது பார்புகழரசேயென்று
வாக்கியந்தவறுவீரன் மன்னனுக்குரைசெய்தானே.

வசனம்.

அகோகேளும் திருமலைநாய்க்கரே உம்முடையமனதில் ஆயாசந்துயரம் வைக்கவேண்டாம் இப்போது என்னுடைய நாயகியாகிய பொம்மி குதிக்க தீக்குழிவெட்டி சந்தனக்கட்டைபோட்டுஅக்கினிவளர்த்தி ஓமஞ்செய்யச்சொல்லும் திருமலைநாய்க்கரே.

விருத்தம்.

மன்னவன்மனதுதேடும் வகையதாய்வார்த்தைசொல்லி
அன்னமாம்பொம்மிதன்னை ஐயன்வீரையனும்பார்த்து
என்னடிபெண்ணே நாமிங் கிருந்திடப்போகாதிப்போ
சின்னமேவருகாமல்நீ தீக்குழிபாயும்பெண்ணே.

வசனம்.

கேளும்பெண்ணே பொம்மிநாயகி நாம் இனிமேல் இங்கிருப்பதில் பிரயோசனமில்லை ஆகையால் சின்னம்வராமுன்னம் மீனாட்சியம்மனுடைய பாதாரவிந்தஞ்சேர என்னெதிரில்தானே தீக்குழிபாயும்பெண்ணே பொம்மிநாயகி.

விருத்தம்.

தீக்குழிபாயுமென்று தீரவீரையனுஞ்சொன்ன
வாக்கினைக்கேட்டுபொம்மி மனதுசந்தோஷமாகி
சீக்கிரமெழுந்துவீரன் திருவடிபணிந்துநல்ல
பாக்கியந்தாராயேயென்று பைந்தொடிநின்றாளே.

வசனம்.

அகோகேளும் என்பிராணநாதா தேவரீர் தீக்குழிபாயுமென்று எனக்கு உத்திரவுகொடுத்தபோதே ஜென்மசாபல்லியமும் மகாபாக்கியமும்பெற்றேன் சுவாமி என்பிராணநாதா.

விருத்தம்.

அங்குளும்வீரதீர னாந்தான்சொன்னவார்த்தை
மங்கைவெள்ளையருக்கேட்டு மன்னவாயென்னையுந்தன்
செங்கையினலேதொட்டுச் சிறையெடுத்திட்டபோதே
அங்கம்வைத்திருக்கேனுன் னடியாளாய்க்கூடவாறேன்.

வசனம்.

அகோகேளும் வீரையனே நான் பழுதுபடாப்பத்தினியாக யீ

னாம்பாளின் பணிவிடைசெய்துக்கொண்டிருந்த என்னை நீர் இச்சித்து உம்முடைய செங்கையினாலேதொட்டு சிறையெடுத்துவந்த படியால் நான் கற்பழிந்துபோனேன் நானும் என்னுடைய சரீரத்தை வைத்திருக்கமாட்டேன் உன்னுடைய அடியாளாக தீக்குளிக்கிறேனையா வீரையனே.

விருத்தம்.

கூடவேவருவேனென்ற கோதைவெள்ளையரைப்பார்த்து
ஆடவனானமெய்ந்தன் அரிவையேசொல்லக்கேளாய்
மாட்டேறுமீசர்மீனாள் மலர்ப்பதஞ்சேர்வதாகக்
கூடவேபொம்மிபக்கல் கொப்பெனச்செல்லுவாயே.

செல்லுவாய்வெள்ளைமாதே தேவியரிருபேருந்தான்
வல்லவள்மீனம்பாளின் மலரடிசேர்வதாக
புல்லரியகத்திநல்ல புத்துமாந்தோப்பைநாடிச்
செல்லுமென்றெழுந்துவீர தீரனும்நடந்திட்டானே.

வீரையனடக்கப்பொம்மி வெள்ளையுமருகிற்செல்ல
தீரனும்வையைதன்னில் தேவியருடனேகூடி
காரணிகிருபையென்று கடுக்வேஸ்நானஞ்செய்து
தாரணிபுகழ்ப்பொம்மி தையல்வெள்ளையும்வந்தாரே.

பொம்மியம்மாளும் வெள்ளையம்மாளும் தீப்பாய்தல்.

தரு-இ-ம்-பியாக்-ஆதிதாளம்.

பல்லவி.

வருகிறார்பொம்மிவெள்ளை மாதிருபேரும்

அனுபல்லவி.

திரிபுரதகனஞ்செய் தேவியைப்போற்றி (வருகிறார்)

சரணங்கள்.

சிற்றிடைதனில்மஞ்சள் பட்டுடைதரித்து
செங்கையிலெலுமிச்சங் கனிபூச்செண்டுங்குறித்து
பத்தியாய்நடக்கவே பாவாடைகள்விரித்து
பழிக்கஞ்சியுன்செயலென்று பாவையர்சிரித்து (வருகி)

திருமலைநாய்க்கனுஞ் சேனையுக்கூடத்
தீரனும்வீரையனுஞ் சென்றுமுன்னோட்
தருமதேவதைபுஷ்பத் தால்மழைபோடச்
சகலபேர்களுமிவாள் தாயெனக்கொண்டாட (வருகி)



சந்தனக்குழம்புகள் சகலருமிறைக்க
சாமரைகுடைகளால் தான்வெயில்மறைக்க
வந்தபேரனைவரும் மங்களவாழ்த்துரைக்க
மன்னவன்பூரிதானம் வாரிவாரியிறைக்க (வருகி)

விருத்தம்.

வந்தவர்நின்றுகொண்டு மாந்தோப்புமைதானத்தில்
சந்தடியாகநிற்குஞ் சகலபேர்களையும்பார்த்து
அந்தணர்ஆயிரம்பேர்க் கருளியேசொர்னதானம்
சிந்தையாய்நிற்கும்போது தீக்குழிவளர்த்திட்டாரே.

தரு-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

பூமியில்நாலுசதுரமாகக்குழி வெட்டினார்-உயர்
பொருப்பெனவிறகுடன்சந்தனக்கட்டைகள் கொட்டினார்
தாமிசமில்லாமலக்கினிதன்னையே மூட்டினார்-சத்திச்
சம்பிரமதாகவேவாழைகமுகுகள் நாட்டினார்

எண்ணெய்நெய்பாற்குடம்பகமதாகவே நிறைத்தார்-வெய்யி
லெங்குந்தெரியாமல்முத்தின்குடைகொண்டுமறைத்தார்
சங்கையில்லாச்சேனை மன்னவர்தீக்குழி சூழ-வீர
சாமியின்பொற்பதம் பொம்மியும்வெள்ளையுந் தாழ

மங்கையரோநீங்கள் அங்கயற்கண்பதம் போற்றி-நேர
மாகுதுசெல்லுமுன் நாடுசெழித்திட வாழ்த்தி
துங்கன்திருமலைநாய்க்கரேநீரிங்கே வாரும்-இந்தத்
தொல்லுலகாண்டுபின்முத்தியடைகுவீர் நீரும்

என்றிருபேர்களுந்தீக்குழிதன்னையே சுற்றி-செக
தீஸ்பரிநீதுணையென்றுமூன்றுகிர மேற்றி
மன்னவனேதெய்வமென்றுமனதிலே மதித்தார்-நாடி
மங்கையிருவருந்தீக்குழிதன்னிலே குதித்தார்.

விருத்தம்.

மங்கையர்கள்தீக்குழியில் குதித்தபோதே
மற்றுமுள்ளோர்கைகொட்டிச்செயசெயென்ன
சங்கையில்லாதெண்ணெய்நெய்பாற்குடங்களெல்லாந்
தானெடுத்துக்குபுகுபென்று தணலில்வார்த்து
குங்கிலியப்பொடிதூவப் பனையம்மாத்திரங்
கொழுந்துவிட்டேயெரிந்தது தீக்குழியப்போது
தங்கமுத்துவீரையனுங் குழியைமூடித்
தன்கவலைதீர்ந்ததென்று தனியனானான்.

வெண்பா.

மங்கைபொம்மிவெள்ளையெனும் மாதிருவர்நீக்குதித்து
அங்கயற்கண்ணி அயிக்கிய மானபின்பு-சிங்கமுத்து
வீரனவர்களுக்கு வேண்டுஞ்சடங்குசெய்து
தீரன்மனதுதேறினான்.

விருத்தம்.

தேறினான்சிந்தையப்போ தீர்ந்ததுகவலையென்று
வீரையனவிடம்விட்டு வேகமாய்நடந்துவந்து
பாரினையாளும்நாய்க்கன் பாதவித்தருகில்நிற்கச்
சிறியேவைகைதன்னில் சீக்கிரம்ஸ்நானஞ்செய்தான்.

வைகையில்ஸ்நானஞ்செய்து மருங்கில்வேறுடைதரித்து
பையவேமுடியைக்கோதி பார்த்திபன்முடிந்துவிட்டுச்
செய்கையாய்விபூதியள்ளிச் சிவசிவாவெனத்தரித்துத்
தையல்மீனம்பாள்பாதந் தன்னையேதுதிசெய்தானே,

துதிசெய்துக்கொண்டுவீரன் சுந்தரிமீனாள்கோயில்
அதிவேகமாய்நடந்து அம்மன்சன்னதிமுன்வந்து
கெதியெனக்கருளும்வாலை கௌரிமீனாட்சியென்று
மதியுடன்பணிந்துமீனாள் மலர்ப்பதம்பூசிப்பானே.

தரு-இ-ம்-கமாசு-அட்தாளம்.

அக்கிறகுகொன்றதம்பை
யம்பலத்தில்நின்றுநட
சொக்கருடபக்கில்நித்தம்
சுந்தரியெனையாதரித்

பாண்டியனருள்குமரித்
பழிக்கஞ்சியானவளும்
காண்டிபனைப்பார்த்தவென்ற
கண்ணியெனுநாமமுள்ள

முக்கண்ணிவாரகிரி
முடியைத்தரிக்கச்செய்த
இக்குவலயந்துதிக்குந்
ஈடேற்றவேணுமம்மா

சங்கரிகங்காளிகௌ
தம்கார்க்கவேணுஞ்சக
அங்கயற்கண்ணியுன்பாதம்
ஆண்டதாவேணும்பரா

சூடி-தில்லை
மாடும்
வாழும்-வாலை
தாளும்

தாயே-மூன்னாள்
நீயே
சோதி-கயற்
வேதி

சூலி-வேதன்
நீலி
தாயே-என்னை
நீயே

மாரி-என்னைத்
வீரி
பத்தி-செய்தேன்
சத்தி



தேவாரம்.

சத்தியுத்தமியேசொக்கர் தன்னிடப்பாகம்பெற்ற
நித்தியகல்யாணியம்பாள் நெஞ்சினிற்குடியிருக்கும்
அத்திமாமுகனையீன்ற அம்பிகைமீனம்பாளென்
பத்திநீயறிவாய்நந்தன் பதமலர்சரணம்போற்றி.

போற்றியதொண்டர்க்கெல்லாம் பொருளொளிவான்சோதி
கார்த்திகேயனுக்குமூத்த கணபதிதன்னையீன்ற
மாற்றிலேயதிகதங்கம் மதுரைக்குத்துரைப்பெண்ணம்பாள்
ஆற்றியேகோபந்தன்னை அடைக்கலங்காருந்தாயே.

தாயென்றுவந்தபேர்க்குத் தானுவாய்நின்றசோதி
மாயனுக்கிளையசெல்வி மரகதவல்லிசொக்கர்
நாயகியென்னையாளும் நாரணிமதுரைமீனாள்
வாயினிமனதிரங்கி வரந்தந்தாளுமையாள்நீயே.

உமையெனக்கார்ப்பாயென்று உண்மையாய்நினைத்தபேர்க்கு
நிமையிலேகண்ணினுள்ளோ நெறிபொறிப்புனலாய்நின்று
சமயத்தைக்காக்கும்வாலை சச்சிதானந்தவல்லி
இமையவர்போற்றுந்தேவி யென்றுன்னைத்தரிசித்தேனே.

தேன்வழிந்தொழுகுகூந்தல் திருமுகம்பதித்தமுத்து
கானகக்கரும்புகைகள் கனிக்கொவ்வையிதழையொக்கும்
மான்மறைபொதிந்தமேனி மரகதவடிவத்தாயுன்
நாமமோதயற்கண்மீனாள் நாயடியேனைக்காரும்.

விருத்தம்.

நாயடியேனைக்காரும் நாயகியெனவேவீரன்
தாயகமாகப்போற்றித் தாளிணைபணியக்கண்டு
மாயனுக்கிளையதங்கை மனமதுகிருபைகூர்ந்து
பேயுடனடியோடு பிரசன்னமாகினாளே.

பிரசன்னமாகிவந்து போற்றிசெய்தெதிரில்நிற்குந்
துரைமுத்துவீரன்றன்னைச் சுந்தரிகண்ணால்பார்த்து
திரைநவமணியேயெந்தன் செல்வனேஉனக்கிப்போது
குறையொன்றுமில்லையெந்தன் குவலயத்தெய்வநீயே.

எந்தனாலயத்தின்கம்ப மிருந்திடும்பதியில்மைந்தா
முந்தினமாலைபூசை முதலுனக்களிப்பேனென்று
சிந்தையுமகிழ்ந்துவாலை தேவிமீனம்பாள்சொல்ல
சந்தோஷத்துடனேவீரன் தாண்டவமாடினானே.

வெண்பா.

ஆடினான்கூத்துகளை அம்மனுட சன்னதிமுன்
பாடினான்தோத்திரப் பதிகமதை-நாடி நான்
சித்தமுடன்கச்சித் திருமலை நாய்க்காவெனக்கு
உத்திரவுதாரு உரை.

வசனம்.

அகோவாருமையா திருமலை நாய்க்கரே உம்முடைய அனுக்கிரகத்தினாலே செகதாம்பாளுடைய பாதாரவிந்தஞ்சேர எனக்குஉத்தரவுகொடுமையா திருமலை நாய்க்கரே.

வெண்பா.

உத்தரவுகேழ்க்க உலகாள்திருமலையன்
சித்தங்கலங்கித் திகைத்துரைப்பான்-முத்தையனே
திருவாக்குநீருரைத்துச் சித்தம் நிலைகொண்டபின்பு
மறுவாக்குஎதுன் மனது.

வசனம்.

அகோவாரும்தம்பி வீரையா நான்சொல்லியவார்த்தையைக்கேளாமல் நீ இப்போது ஷேமனதாய் செகதாம்பாளுடைய திருவடிசேரவேணுமென்று சித்தமாயிருக்கிற உனக்கு நான் மறுவாக்கு என்னசொல்லப்போகிறேன் உன்னுடையமனதுக்குச்சரியானபடி நடந்துகொள்வாய்தம்பி வீரையனே.

விருத்தம்.

மனதெனச்சொல்லக்கேட்டு மட்டிலடங்காவீரன்
தினதுடமடியில்வைத்த சந்திராயுதமெடுத்து
அனமெனுமதுரைமுக்கண் ஆச்சிசன்னதிமுன்னூன்றி
கனமெனக்கருள்வாயென்று காளைவீரையன்பாய்ந்தானே.

பாய்ந்தனன்கத்திமீதில் பார்வதிக்கபயமென்று
சாய்ந்தனனுடலம்வேறு தலைவேறதாகச்சென்னி
சேர்ந்ததுசெகதாம்பாளின் திருப்பதத்தடியிலம்மை
ஏந்தியேயிருகையாலு மெடுத்தனள்முடியைத்தானே.

முடிதனையெடுத்துமீனாள் முத்தமிட்டெடுந்தன்வாசல்
கடினசேவகனுக்கம்பக் கல்பெலிபீடந்தன்னில்
நெடியனுளிருந்துபூசை நைவேத்தியமுதலிற்கொண்டு
படிமிசைவாழ்வாயென்று பழிக்கஞ்சிவரமீய்ந்தாளே.

வரமதுகொடுத்தவீர மானுபன்சென்னிதன்னை
அறம்வளர்த்தம்மைதன்றே டயிக்கியஞ்செய்துகொண்டாள்
உறமெனுமுடலைநாய்க்கன் உவந்துமேயெடுத்துவந்து
தாமுடன்கம்பமேட்டில் சமாதிதான்செய்திட்டானே.



சிரணிமதுரைநாட்டில் தானுஞ்சமாதிசேர்ந்தான்
தாரணியாளுமன்னன் தன்னரண்மனைக்குச்சென்றான்
வாரணிமதுரைமீனாள் வாக்கியப்படிமுன்பூசை
நேரமாய்நாலுகாலம் நித்தியமும்நடந்ததாமே.

நித்தியமும்பூவுந்தண்ணீர் நைவேத்தியம்பட்டைச்சாதம்
பத்துநான்வரையிற்கொண்டு டசிமிகுத்திரவில்வீரன்
கத்தியேநடுச்சாமத்தில் காட்டினைநோக்கிச்சென்று
குத்தியேமாட்டைக்கொன்று குடல்தனையெடுத்திட்டானே.

குடல்தனைமாலைபோட்டுக் குலையதைவாயில்கௌவி
அடவுடன்மாமிசத்தை யறுத்துக்காவடியாய்க்கட்டித்
திடமுடன்தோளில்வைத்துத் திரேகத்திலுதிரம்பூசி
வடமுகம்நோக்கிக்கோட்டை வந்துமேபுகுந்திட்டானே.

வந்துமேபுகுதக்கண்டு மதுரையிலுள்ளபேய்கள்
குந்துகால்முனிகளெல்லாங் குலவையிட்டலறிபோட
மந்திரம்பில்லிக்கெல்லாம் மட்டிலடங்காவீரன்
சிந்தையாங்காரத்தோடு தேவிசன்னதிமுன்வந்தான்.

சன்னதிமுன்னால்வந்த தனயனைக்கண்டுமீனாள்
என்னடாதுஷ்டாவென்று எழுந்தவள்கதவைமூடி
கன்னவேசொல்வாயுந்தன் காரியமெனவேவீரன்
இன்னமும்பசிபொறுத்து இருந்திடேனம்மாவென்றான்.

பொறுத்திடேனென்றுசொன்ன புத்திரன்வார்த்தைகேட்டு
திருத்தமாய்நாய்க்கனுக்குத் தேவிஉத்திரவுசெய்து
கருத்துடனமதுகம்பங் காத்திடும்வீரனுக்கு
அறுத்துமேஆடுகோழி அசல்பூசைபோடுமென்றாள்.

உத்திரவானபின்பு உறுதியாய்நாய்க்கனப்போ
மெத்தவேகாவும்பூசை வீரையன்தனக்குமீந்து
நித்தமுந்தொழுதுபோற்றி நேர்மையாய்நடக்கும்போது
சுத்தவீரையனுந்தெற்கே சுடலைமாடனுமானானே.

தெக்ஷணதேசமெல்லாந் திறமுடன்பூசைபெற்று
அச்சமில்லாமல்நாய்க்கன் அரசினைச்செழிக்கச்செய்து
பக்ஷமாய்ப்பொம்மிவெள்ளை பக்கத்திலமர்ந்திருக்கக்
கச்சணிஉமையாள்புத்திரன் காவேரிநாட்டில்வந்தான்.

காவேரியங்காளம்மன் களையுறுஇலங்கிவாழும்
மாவேந்தர்பணியுந்நல்ல மலைப்புருகானகோட்டை

சீர்வேந்தர்புகழ்யின்பஞ் செழித்திடும்பூக்கடைக்குள்
கோவேறிக்கொண்டுசுவாமி கொலுவதாயிருந்திட்டாரே.

பூக்கடைத்தங்கமென்று புகழ்ந்தமேவணங்கினோரைக்
காக்கவே தெய்வமாகிக் கையிலிற்பொருளுந்தந்து
ஏர்க்கவேமிகு நாளைக்கு இருப்பதாய்க்குடிகள்சேர்த்து
மேர்க்குநற்றிருத்தான்தோணி மேவியேநடந்தார்சாமி.

கருத்துடன்திருத்தான்தோணிக் கரையமுகையருக்கும்
உரித்துள்ளபிள்ளையாகி உதிரமாமாலைபூண்டு
பெருத்தமாமலைக்கரும்பும் பெருமலையாளத்தோனும்
மருக்கொழுந்தணிந்தமேனி மங்கையாள்துர்க்கைதேவி.

இத்தனைபேருங்கூடி யிருந்தகையனலையத்தில்
மெத்தவேபுகழைப்பெற்ற விகழுள்ளமதுரைவீரன்
உற்றதோர்நாடகத்தை உறுதியாய்ப்பாடிவைத்த
பத்தனுங்குலாலன்குட்டி பக்கிலிருக்கின்றாரே:

மங்களம்.

மங்களமங்களம்-நித்யசுபமங்களமங்களம்

வெற்றிமுருகனுக்கும் வேலுடைக்கடவுட்கும்
பொங்குதமிழ்க்கலை பூரணவாணிக்கும்
பூமியந்திரவே [illegible] நேமியாகியவாமிக்குஞ்செய(மங்களம்)

கங்கைதனைத்தரித்த கடவுள்சொக்கேசர்க்கும்
மங்கைதென்கூடல்வாழ் மதுரைமீனாட்சிக்கும்
வானதேவர்கள் மோனமுனிவர்க
ஞானதபோதனர் ஞானிகட்குஞ்செய(மங்களம்)

வீராதிவீரர்கள் மிகுமுத்துசாமிக்குக்
காராருக்குழல்பொம்மி கன்னிவெள்ளையருக்கும்
கச்சித்திருமலை நாய்க்கனுடன்புகழ்
மெச்சும்புலவர்கட் கக்ஷயஞ்செய(மங்களம்)

தொல்லுலகில்மீனாட்சி சுந்தரவாத்திக்கும்
நல்லவிஷ்ணுதாச ஞானியகுட்டிக்கும்
இந்நாடகத்தினை யாடிப்பாடவே
கூடும்பாலகர் நீடுவாழ்கவே(மங்களம்)

மதுரைவீரநாடகம்
முற்றுப்பெற்றது.

116365